# தமிழரசு

16.12.1973

40 காசு



# அரசு — மிகவுயர்ந்த தரமான

# போர்ட்லேண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், தீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ்

**(தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிறுவனம்)**

**ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்**

## அரசு — வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16

# சட்டப்பேரவையில்...

அமெரிக்காவில் உள்ள தொழில் அதிபர், கலைப் பொருள்களைச் சேகரிக்கும் எண்ணத்தில் தஞ்சை மாவட்டம் சிவபுரத்தில் இருந்த நடராசர் சிலையை வாங்கியிருப்பதாகத் தெரிகிறது. அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பிரதம மந்திரிக்கும் தமிழக அரசு சார்பில் 2-7-73-ல் கடிதம் எழுதப்பட்டது. அதற்கு 2-8-73-ல் பதில் வந்தது. அதில் தேவையான எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படுவதாகத் தெரிவித்து இருந்தார்.

சிலைகள் கிடைக்கக் கிடைக்க அவைகளை ஒரு கோவிலில் அல்ல—படிப்படியாக மற்ற கோவில்களிலும் வைத்துப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

* * *

பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லத்திலிருந்து பிச்சைக்காரர்கள் வெளியேறும் அளவுக்கு அது வசதி குறைந்த இடம் அல்ல. வயிற்றுக்குச் சாப்பாடும் வசதியான படுக்கையும், தொழிற்பயிற்சியும் அவர்களுக்கு அளிக்கப்படுகின்றது. அங்குள்ள கோழிப் பண்ணைகளில் உள்ள முட்டைகளை விற்காமல் அவர்களுக்கே கொடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 10 தொழுநோய் இல்லங்கள் கட்டி முடிக்கப்பட்ட பிறகு, பிச்சை எடுப்பதைத் தடுக்கச் சட்டம் கொண்டு வரத் திட்டமிட்டு இருக்கிறோம். இவற்றில் 9 தொழுநோய் இல்லங்கள் கட்டப்பட்டுவிட்டன. மீதி உள்ள ஒன்றும் கட்டப்பட்ட பிறகு, பிச்சை எடுப்பவர்களைப் பிடித்து அடைக்கச் சட்டம் கொண்டு வரப்படும். இதற்கான சட்டம் சட்ட இலாகாவின் பரிசீலனையில் உள்ளது.

* * *

விடுதலைப் போராட்ட வீரர்களில் சென்னை மாவட்டத்தை சேர்ந்த 273 பேருக்கும், மற்ற மாவட்டங்களைச் சேர்ந்த 30 பேருக்கும் கடந்த சுதந்திர தினத்தன்று சென்னையில் தாமிரப் பட்டயங்கள் வழங்கப்பெற்றன.

## முதல்வர் கலைஞர்

மொழிப் போராட்டம் எல்லைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எல்லாம், எப்படி விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கெல்லாம் மானியமும் கவுரமும் வழங்கப்பட்டதோ அதுபோல் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டப் பேரவையின் குளிர்காலக் கூட்டத் தொடர் 19—11—1973 திங்கட்கிழமையன்று தொடங்கி 4—12—73-ல் நிறைவெய்தியது; இடைப்பட்ட நாட்களில்—இரண்டு வார காலம் நடைபெற்ற சட்டப் பேரவையில், உறுப்பினர்களின் கேள்விகளுக்கு அமைச்சர்கள் வழங்கிய பதிலுரைகளையும் அறிவிப்புகளையும் மட்டும் இங்கே ஓரளவு தொகுத்துத் தந்திருக்கிறோம்.

தமிழக அரசு வழங்கிய தாமிரப்பட்டயம், நமது தமிழ் நாட்டு 'டான்சி' நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது; ஒவ்வொன்றும் 65 ரூபாய். மொத்தம் 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்குத் தயாரிக்கப்பட்டது. இது தமிழில் எழுதப்பட்டது.

டில்லி சர்க்கார் விதிகளின் படி போராட்ட வீரர்கள் என்போர் 16 மாதம் ஜெயிலில் இருந்திருக்க வேண்டும் என்று இருக்கிறது. அதைத் தளர்த்தும்படி மேலவையில் கேட்டார்கள். நாம் இதுபற்றி டில்லிக்கு எழுதினோம். டில்லி சர்க்கார் விதியைத் தளர்த்த விரும்பவில்லை. அதன்பேரில், மாநில அரசு மூலமாக, 2, 3 மாதங்கள் ஜெயிலில் இருந்தவர்களுக்கும்கூடத் தாமிரப் பட்டயம் வழங்க முடிவு செய்து 10 ஆயிரம் பட்டயங்கள் தயாரித்தோம். அவற்றில் 4,749 பட்டயங்கள் கொடுக்கப்பட்டுவிட்டன. மேலும் மனுக்கள் வந்தால் கவனிக்கப்படும்.

டில்லி சர்க்கார் கொடுக்கும் விடுதலைப் போராட்ட வீரர்கள் மானியத்துக்காக, 8 ஆயிரத்து 773 மனுக்கள் வந்தன. 5,333 மனுக்கள் பரிந்துரை செய்து அனுப்பப்பட்டன. மீதி 3,440 மனுக்கள் பரிசீலனையில் உள்ளன.

* * *

பூம்புகாருக்கு இதுவரை செலவிட்டிருப்பது 6 இலட்சத்து 33 ஆயிரம் ரூபாய். மேலும் 8 இலட்சம் ரூபாய் செலவிட ஒப்புதல் கேட்டிருக்கிறோம். சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் பல்வகை மண்டபங்களை அமைக்க இது செலவிடப்படும். இந்த ஆண்டு இலஞ்சி மன்றம், நெடுங்கல்

மன்றம், பாவை மன்றம் ஆகியவை அமைக்கவும், கரிகாலன் இளங்கோ அடிகள் ஆகியோரது உலோகச் சிலைகளை அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பழம்பெரும் நினைவுச் சின்னங்கள் தமிழகத்தில் இருந்திட வேண்டும் என்னும் கொள்கை உடையது இந்த அரசு. அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த போதே இதனை மனத்தில் கொண்டு உலகத் தமிழ் மாநாட்டைச் சென்னையில் சிறப்பாக நடத்தினர். தமிழ்ப் பெரியார்களுக்குச் சிலைகள் எழுப்பப்பட்டன.

சமீபத்தில் பாஞ்சாலங் குறிச்சிக்குச் சென்று இருந்த போது, கட்டபொம்மன் கட்டியதாகக் கூறப்படும் கோட்டை ஒன்று இருப்பதாக ஓர் இடத்தைக் காட்டினர்கள். அடித்தளம் மட்டும் காணப் பட்டது. அந்த இடத்தை அகழ்ந்து பார்த்ததில், 1 அடி உயரக் கட்டிடம் கிடைத்திருக்கிறது. அந்த இடத்தை அடையாளச் சின்னமாக்குவதுடன் அதற்கு அருகிலேயே அந்த மாளிகை எப்படி இருந்திருக்குமோ அதைப்போலவே ஒரு மாதிரி மாளிகை அமைக்கப்படும்.

சென்னை மயிலைப் பகுதியில் உள்ள திருவள்ளுவர் ஆலயத்தைப் புதுப்பிக்க நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிறோம். இந்த ஆலயத்தைப் புதுப்பிக்க 4, 5 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். அந்த நேரத்தில், வெளிநாட்டுச் சுற்றுப் பயணிகளை கவரப் பெரிய அளவில், தமிழ்நாட்டில் வேறு எந்தப் பகுதியிலும் இல்லை என்று கூறும் விதத்தில் 20, 30 இலட்சம் ரூபாய் செலவில் பெரிய கட்டிடம் ஒன்று தமிழக அரசின் சார்பில் வள்ளுவர் பெயரால் கட்டப்படும்.

மற்றப் பிரச்னைகளில் கவனம் செலுத்தாமல் இதைமட்டும் நாம் செய்து கொண்டிருக்கவில்லை. பூம்புகார்ச் சின்னம் அமைக்கும் அதே நேரத்தில் குடிசைகளை மாற்றி அமைக்க 40 கோடி ரூபாய் செலவில் குடிசை மாற்றுத் திட்டம் அமல் நடத்தப்படுகிறது. குறை கூறுபவர்கள் அதையும் எடுத்துக் கூறிட வேண்டும். ராஜாஜிக்கு நினைவுச் சின்னம், தில்லையாடியில் கட்டப்பட்ட வள்ளியம்மை நகர் ஆகியவைகளையும் எண்ணிப் பார்த்திட வேண்டும்.

தலைமைச் செயலகத்தில் புதிதாக ஒரு கட்டிடம் கட்ட 1 கோடி ரூபாய் செலவிடப் பட இருக்கிறது.

அரசு ஊழியர்களுக்கு நிதி உதவி செய்யும் திட்டம் ஒன்றை அரசு செயலுக்குக் கொண்டு வர வேண்டும் என அரசிதழ்பதிவில்லாத அரசு ஊழியர் சங்கமும் அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அரசு ஊழியர்கள் குறிப் பிட்ட தொகையை மாதா மாதம் கட்டிப் பணியில் இருக்கும்போதே அரசு ஊழியர் இறந்து விட்டால் அவருடைய குடும்பத்துக்கு இந்த உதவித் தொகை அளிக்கப்பட வேண்டும். அல்லது அரசு ஊழியர் ஓய்வு பெறும்போது இந்தத் தொகை அவருக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்று அரசு ஊழியர்கள் சங்கம் கோரியுள்ளது.

இந்தக் கருத்துக்களை மனத்தில் கொண்டு அரசு ஒரு புதிய திட்டத்தை வகுத்துள்ளது.

இந்த புதிய திட்டம் ''தமிழ்நாடு அரசு ஊழியர்கள் குடும்ப நிதித்திட்டம்'' என்று பெயர் பெறும்.

இத்திட்டத்தின் கீழ் அரசு ஊழியர்கள் அனைவரும் மாதா மாதம் ரூ. 10 கட்ட வேண்டும். இந்தத் தொகை அவர்கள் மாதச் சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்து கொள்ளப் படும்.

இந்தத்திட்டம் கொண்டு வரப்பட்டபின், பணியில் இருக்கும்போது அரசு ஊழியர் ஒருவர் இறந்துவிட்டால் அவர் ஆற்றிய பணிக்கால அளவு எவ்வளவு குறைவாக இருந்தாலும் ரூ. 10,000 அவரது குடும்பத்துக்குக் கொடுக்கப்படும்.

தொகை செலுத்தும் அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும் போது அல்லது பணியிலிருந்து விலகிச் செல்லும்போது அவர்களுக்கு இந்த நிதியிலிருந்து அவர்கள் செலுத்தியுள்ள தொகை, அதற்கேற்ப அரசு செலுத்தும் தொகை ஆகியவை அவர்களுக்குக் கொடுக்கப் படும். இத்திட்டம் ஜனவரி '74 முதல் செயலுக்குக் கொண்டு வரப்படும்.

* * *

4-6-73-லிருந்து 3 மாத காலத்திற்குத் தமிழ்நாடு போலீசில் 30 அதிகாரிகளுக்கு (அரசிதழ் பதிவு பெருதவர்) 'கராத்தே' பயிற்சி அளிக்கப் படுகிறது.

உடல் தகுதி உள்ளவர்களுக்கு இந்தப் பயிற்சி கற்றுத் தரப்படுகிறது. 30 வயதுக்கு மேற்படாதவர்களுக்கே கற்றுத் தரப்படுகிறது. இதைக் கற்றுத் தரும் ஆசிரியருக்கு மாதம் ரூ. 1,000 வழங்கப்படுகிறது.

போலீசாருக்குக் கராத்தே பயிற்சி அளிப்பதுபோல தனியார் பலரும் இப்பயிற்சியைப் பெறுகிறார்கள். அதில் பெண்களும் இருக்கிறார்கள். மாணவ மாணவியர் 10 வயது 7 வயது உள்ளவர்கள் எல்லாம் பயிற்சி பெறுகிறார்கள். பெண் போலீசார் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு இந்தக் கருத்தும் மேற்கொள்ளப்படும்.

இன்று இந்தியா முழுமைக்கும் கராத்தே பயிற்சியைக் கற்றுக் கொடுப்பதற்கான சான்றிதழைத் தமிழ்மணி பெற்றிருக்கிறார். இவர், ஜப்பானில் பயிற்சி பெற்றவர். உலகத்திலுள்ள பல்வேறு நாடுகளிலும் உள்ளவர்களுக்கு இக் கராத்தே பயிற்சியைக் கற்றுத் தரும் தகுதி பெற்றவர்களிடமே நமது தமிழ்மணி சான்றிதழ் பெற்றிருக்கிறார்.

'கராத்தே' என்றால் வெறும் கையினால் என்று ஜப்பானிய மொழியில் பொருள். அதில் 'ரா' வுக்கு உள்ள துணை எழுத்தை நீக்கிவிட்டு 'கரத்தே என வைத்துக் கொண்டாலும் அதன் பொருள் தரும். வெறும் கையினாலேயே தாக்கி பாதுகாக்கலாம் என்றும் அர்த்தம் கொள்ளலாம்.

கராத்தே உடற்பயிற்சியுடன் உள்ளத்திற்கும் நல்ல பக்குவத்தை அளிக்கும். வெளிப்புற எதிரிகளை மட்டுமின்றி, மன ஒழுக்கத்திற்குக் கேடு உண்டாக்கும் கோபம், உணர்ச்சிவசப்படல், ஆசைகள் இவைகளையும் எதிர்த்துப் போராட முடியும் என்று கூறப் படுகிறது.

பெண் போலீஸ் வேலைக்கு இப்போது குறைந்த அளவில் தான் ஆள் எடுக்கப்படுகிறது. இதன் எண்ணிக்கை பெருகும் போது, அரிசனப் பெண்களைப் போலீஸ் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற உறுப்பினர் கருத்தும் கவனத்தில் வைத்துக் கொள்ளப்படும். அரிசனப் பெண்களைப் போலீஸ் வேலைக்குத் தேர்ந்தெடுக்கக் கூடாது என்ற எண்ணம் இல்லை. இப்போது பலர் பெண் போலீஸ் வேலைக்கு எடுக்கப் பட்டிருக்கின்றனர். அவர்களில் அரிசனப் பெண்களும் இருக்கலாம்.

**கல்வி அமைச்சர்**

# நாவலர் இரா. நெடுஞ்செழியன்

இரண்டாம் நிலைத் தமிழா சிரியர் என்ற பாகுபாடு வேண் டியது இல்லைதான். அவர்களை இணைக்கும் வேலை ஆராயப் படுகிறது. எனவே, அதற்கான உத்தரவு விரைவில் பிறப் பிக்கப்படும்.

* * *

1972-73-ஆம் ஆண்டில் தமிழகத்தில் ஆரம்பப் பள்ளி ஆசிரியர் 6 பேருக்கும், உயர் நிலைப்பள்ளி ஆசிரியர் 3 பேருக் கும் தேசிய விருதுகள் வழங்கப் பட்டிருக்கின்றன.

* * *

தனிப்பட்ட முறையில் தமிழ்ப் புலவர் தேர்வு பெறுவ தற்கான வயது வரம்பு முன்பு 30 ஆக இருந்தது. இப்போது 25 ஆகத் தளர்த்தப்பட்டிருக் கிறது.

**நல்வாழ்வுத்துறை அமைச்சர்**

# பேராசிரியர் க. அன்பழகன்

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில் உள்ள கிராமப் பகுதிகள் முழுவதிலும் உள்ள கிராமப் பகுதித் தொழுநோயாளிகளின் பயனுக்காகப் பல தொழு நோய்த் தடுப்புப் பிரிவுகள் தொடங்கத் திட்டமிடப்பட் டுள்ளது. மீதமுள்ள நகர்ப்புற பகுதிகள் 1983-ஆம் ஆண்டிற் கும் முன்னதாகப் பயன் டையத் திட்டமிடப்பட்டுள் ளது.

''இந்த மாநிலத்தில் ஏழரை இலட்சம் தொழுநோயாளிகள் இருப்பதாகப் புள்ளிவிவரம் எடுக்கப்பட்டுள்ளது. இவர் களில் நாலு இலட்சம் பேருக்கு தற்போது பாராமெடிக்கல் என்ற பிரிவினர் வாரத்திற்கு இருமுறை சிகிச்சை அளித்து வருகிறார்கள். மிச்சம் இருப்ப வர்களுக்கும் சிகிச்சை அளிக் கும் நடவடிக்கை இன்னும் ஐந் தாண்டுகளில் நிறைவேறும். தற்போது தொழுநோய்ப் பிச்சைக்காரர் விடுதிகளில் ஐந்தாயிரம் பேர்வரைதான் இருக்க இடமிருக்கிறது. படிப் படியாக நடவடிக்கை எடுக்கப் படும்''.

* * *

தமிழக அரசின் கண்ஒளி வழங்கும் திட்டத்தை டில்லி சர்க்கார் பார்த்துவிட்டு, இது போல் மற்ற மாநிலங்களிலும் செய்யலாமா என்று ஆராய்ந்து வருகிறது. ஜனதிபதி கிரி அவர்கள்கூட இங்கு வந்து பேசும்போது, இந்தத்திட்டம் அகில இந்தியாவுக்கும் முன் னேடியாக விளங்கும் என்று வரவேற்றார். இந்தத் திட்டம் இதுவரை நன்கொடை மூலமே நடந்துவந்துள்ளது.

இதற்கான பொதுநிதியை நிதித்துறைச் செயலாளர்தான் கவனிக்கிறார். பணம் அனுப்பு கிறவர்கள் யாரும் அவருக்கு அனுப்பலாம். மாவட்டங் களில் கலெக்டர்கள் மூலமே இந்தக் கண் ஒளி வழங்கும் திட்டச் செலவு விவரங்கள் நடைபெறுகின்றன.

இதுவரை தமிழ்நாட்டில் 53,146 பேருக்கு இந்தத் திட் டத்தின்கீழ் கண்ணில் வளர்ந்த சதை, அறுவைச்சிகிச்சை மூலம் நீக்கப்பட்டு உள்ளது.

மற்றும் 53,064 பேருக்குக் கண் பரிசோதனையும் அறிவுரை யும் வழங்கப்பட்டது. 876 பேருக்கு இதர சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளன.

* * *

தமிழ்நாட்டில் ஓமியோபதி கவுன்சில் ஏற்படுத்தப்பட்டுள் ளது. அந்தக் கவுன்சிலில் அங்கம் வகிப்போர் தமிழ் நாட்டில் பிறந்தவர்களாக — கடன் தீர்க்கும் சக்தியுள்ளவர் களாக — சித்தஸ்வாதீனம் பெற்றவர்களாக — ஒழுக்க முள்ளவர்களாக — ஊதியம் எதிர்பார்க்காதவர்களாக — 25 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்க வேண்டும். நிர்வாக வசதிக்காக அக்குழுவில் அதி காரிகள் நியமிக்கப்பட்டிருக் கிறார்கள்.

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கான திட்டங்கள் பதின்மூன்று தொகுப்புகளாகத் தொகுக்கப்பட்டு மத்திய அரசி டம் அனுமதிக்காக அனுப்பப் பட்டுள்ளது. 14-வது தொகுப்பு தயாரிக்கப்பட்டு வருகிறது. அடுத்த தொகுப்பில் சேர்ப் பதற்காக அம்பலவாடியில் ஆழ்துளைக் கிணறு அமைக்கப் படும் திட்டத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது.

## பொதுப்பணித்துறை அமைச்சர்.

# ப. உ. சண்முகம்

அரசாங்கம், அலுவலகக் கட்டிடங்களுக்கு வாடகையாக 1 இலட்சம் ரூபாய் வரை கொடுக்க வேண்டியுள்ளது. இதன் காரணமாகச் சென்னை நகரில் பலமாடிக் கட்டிடங்களில் ஒரு பகுதி வியாபாரக் கடைகளாகவும் வடைகைக்கு விட்டு அதன்மூலம் வருமானம் பெருக்கப்படும்.

தேனும்பேட்டை மருத்துவ அலுவலகத்தில் 80 இலட்சம் ரூபாயில் ஒரு கட்டிடம்; அரசாங்க அச்சகக் காம்பவுண்டில் ரூ. 94 இலட்சத்தில் கட்டிடம்; பூங்கா ரெயில்வே நிலையம் அருகில் ரூ. 19 இலட்சத்தில் கட்டிடம்; அரசினர் தோட்டத்தில் கலைவாணர் அரங்கத்தையொட்டி ரூ. 3 கோடியே 64 இலட்சத்தில் கட்டிடம்; கலைவாணர் அரங்கத்திற்குக் கிழக்கே ஒரு கோடியே 40 இலட்சத்தில் கட்டிடம்; கல்மண்டபத்தில் ரூ. 55 இலட்சத்தில் கட்டிடம்; உட்வார்ப் அருகே ரூ. 64 இலட்சத்தில் கட்டிடம் ஆகியவை கட்ட உத்தேசித்துள்ளோம். இப்படிப்பட்ட கட்டடங்களைக் கட்ட ஒரு 'கட்டிட வாரியம்' அமைப்பது பற்றியும் ஆலோசித்து வருகிறோம்.

* * *

பாண்டியாறு புன்னம்புழா ஆகிய ஆறுகளின் தண்ணீரின் ஒரு பகுதியைக் கொண்டு கோவை மாவட்டத்தில் 1 இலட்சம் ஏக்கர் புஞ்சை அல்லது 50 ஆயிரம் ஏக்கர் நஞ்சை நிலத்துக்குப் பாசன வசதி கிடைக்கச் செய்வது குறித்த தமிழக அரசின் மாற்றுச் செயற்குறிப்புக்குக் கேரளம் பதில் அனுப்பாமல் இருக்கிறது இதற்கிடையே பாண்டியாறு புன்னம்புழா ஆறுகளின் தண்ணீரைப் பயன்படுத்துவது பற்றிக் கேரளத்துக்கும் தமிழகத்துக்கும் இடையே 1965 ஆம் ஆண்டு ஏற்பட்ட மூல உடன்பாட்டிலிருந்து தமிழகம் பின்வாங்குவதாகக் கேரள முதலமைச்சர் அச்சுதமேனன் கடந்த மாதத்தில் வெளியிட்ட கருத்து வியப்புக்குரியது என்றாலும், அனவசியமான கருத்து வேறுபாடுகளுக்கு இடமளிக்காமல் இருக்க வேண்டும், என்பதற்காக பதில் கூறாது இருக்கிறோம். என்றாலும், நேரில் வந்து சென்னையில் பேச்சு நடத்துமாறு கேரள அமைச்சர் திரு. திவாகரனை அழைத்திருக்கிறோம்.

* * *

பெரம்பலூர்த் தொகுதி வில்வகுடி மக்களுக்கும் வெங்குளம் கிராம மக்களுக்கும் இடையே பாசன தண்ணீர் சம்பந்தமாக 8-1-72-இல் ஒரு கலவரம் நடந்தது. எதிர் காலத்தில் இத் தகராறு ஏற்படாவண்ணம் — வெங்குளம் ஆயக்கட்டு பாதிக்கப்படாமல் பாசன வசதி செய்து தர வில்வகுடி எல்லையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## தொழில் அமைச்சர்

# சே. மாதவன்

அடையாற்றில் எலக்ட்ரானிக் காம்பலக்ஸ் டைனசின் சார்பில் டெலிவிஷன் செட் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவப்படும். 1974-ல் உற்பத்தி தொடங்கும். ஆண்டுக்கு 10 ஆயிரம் டெலிவிஷன்கள் உற்பத்தி செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

* * *

தற்போது சிமெண்ட் தொழிற்சாலைகளுக்குக் கிடைக்கிற நிலக்கரி 2 நாள் மூன்று நாள் என்கின்ற அளவில்தான் தமிழகத்திலுள்ள 7 சிமெண்ட் ஆலைகளிலும் வழங்கப்படுகின்றது.

இந்தியாவிலேயே சிமெண்ட் உற்பத்தியில் முன்னணியில் நிற்கும் தமிழகத்திற்கு இப்படி நிலக்கரித் தட்டுப்பாடு ஏற்படுவது மேற்படி தொழிலைச் சரிவர இயங்கவிடாமல் தடுக்கிறது.

சுரங்க இலாகாவினரிடம் கேட்டால் நிலக்கரி இருக்கிறது; ஆனால் அவற்றை அனுப்பி வைக்க வேகன்கள்தான் இல்லை என்று கூறுகிறார்கள். ரயில்வே இலாகாவினரிடம் கேட்டால் வேகன்கள் இருக்கின்றன. ஆனால் நிலக்கரி இல்லை என்று சொல்கிறார்கள்.

இப்படி இலாகாவுக்கு இலாகா முரண்பட்ட கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள் என்று மத்திய அமைச்சர்களிடம் பேசும்போது இதுபற்றி இந்த அரசின் சார்பில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

இதுபோன்ற முரண்பட்ட நிலைகள் மட்டுமில்லை; சமீபத்தில் எண்ணூர் மின் உற்பத்திக்குப் போதுமான நிலக்கரி இல்லை என்று பேசப்பட்ட நேரத்திலேயே — ரயில்வே இலாகாவினர் போதுமான நிலக்கரி இல்லை என்று ரயில்கள் நிறுத்தப்பட்டும் இருந்தன. இவையெல்லாம் பார்க்கும் போது நிலக்கரி உற்பத்தியை- நாட்டின் தேவைக்கேற்ப வழங்குவதில் ஒரு சீரான கொள்கை அமையவில்லை என்பதுதான் புலனாகிறது.

* * *

''தீப்பெட்டித் தொழிலுக்குப் பயன்படும் பொட்டாசியம் குளோரைடு தயாரிக்கும் தொழிற்சாலை, மதுரை மாவட்டம் மேலூர் வட்டத்தில் நரசிங்கம்பட்டி என்ற கிராமத்தில் ரூ. 75 இலட்சம் செலவில் அமைய இருக்கிறது. தமிழ்நாடு தொழில்வளர்ச்சி நிறுவனமும், திருமங்கலம் மெட்டல் பவுடர் கம்பெனியும் கூட்டுத்துறையில் தொடங்கவிருக்கும் இந்த 'பாண்டியன் கெமிக்கல்ஸ் லிமிடெட் நிறுவனம், ஆண்டுக்கு 1825 டன் உற்பத்தித் திறன் கொண்டு 1974 ஆம் ஆண்டு இறுதியில் தொடங்கும். இதில் 49 சதவீதம் பங்கு, சிறிய தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கே வழங்கப்பட்டுள்ளது.''

''தென்னை நாரைப் பயன்படுத்திக் கயிறு தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவ அனுமதிக்கப்பட்டுள்ளது. இது பெரும்பாலும் பட்டுக்கோட்டைச் சுற்றுவட்டாரத்தில் அமையலாம்.

''இந்தத் தொழிற்சாலை அமைவதற்கு 10 ஆயிரம் தென்னை மரங்கள் தேவைப்படும். இதன் உற்பத்தித் திறன் 1974 - ஆம் ஆண்டு இறுதியில் தொடங்கும்.''

* * *

''மதுரை, கோவை, திருச்சி சேலம் ஆகியபகுதிகளில் மின் சாரக் கருவிகள் (எலக்ட்ரானிக்) தொழிற்சாலைகளுக்காகச் செயல்படும் தொழிற்பேட்டைகள் ஏற்படுத்தப்படும்.

மின்கருவிகள் உற்பத்தி செய்கிற தொழிற்சாலைகளை வளர்ச்சி அடையச் செய்வது, தொழிற்சாலை நடத்துகிறவர்களுக்குத் தேவையான உதிரி உறுப்புகள் மற்ற துணைக்கருவிகள் கிடைக்க உதவுவது பற்றி ஆராயத் தனி அதிகாரி ஒருவரைச் சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் நியமித்துள்ளது.

மாநிலத்தில் மின்தொழிற்சாலைகளுக்கான 24 உதிரி உறுப்புகள் தயாரிக்க முடியுமென்று அரசு நியமித்த குழு முடிவு செய்துள்ளது.''

* * *

தூத்துக்குடித் துறைமுகத் தென்பகுதி நெல்லை மாவட்டத்தில் வைப்பாறு, வேம்பாறுப் பகுதி, இராமநாதபுரம் மாவட்டத்தில் மரியூர்ப் பகுதி, செங்கற்பட்டு மாவட்டம் கோவளம் பகுதி ஆகிய இடங்களில் நவீன முறையில் உப்பளங்கள் அமைக்கும் முறையில் உப்பளங்கள் அமைக்கும் திட்டம்பரிசீலிக்கப்பட்டுள்ளது.

* * *

இப்போது தனியார் ஆலை அதிபர்களைச் சந்தித்துப் பேசி 9 ஆயிரம் பேல் நூல்வரை கிடைக்கப் பெற்றுள்ளோம். ஏற்கெனவே நமது (அரசுடைமையான) ஆலைகள் மூலம் 11 ஆயிரம் பேல் நூல் கொடுத்து வருகிறோம்.

இனிமேல் 1000 தறிகளுக்கு ஒரு 'சர்வக்கட்சிகுழு' என்ற முறையில் அமைத்து, நூல் வினியோகம் செய்யலாமா என்று யோசிக்கப்படுகிறது.

* * *

நைலான் நூல் தொழிற்சாலை நிறுவுதற்கான வெளிநாட்டுச் செலாவணி, வெளிநாட்டு இயந்திரங்கள் வாங்கும் விஷயத்திற்கு டில்லியின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தொழிற்சாலை பற்றி டில்லி சர்க்கார் மறுபரிசிலனை செய்வதாகவும் கூறப்படுகிறது.

* * *

நீதித்துறையைப் பொறுத்த வரையில், ஜனநாயகத்திலே நம்பிக்கை உள்ளவர்கள் நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத்தை நன்றாக உணர்வார்கள். சுதந்திரமாகச் செயல்படவேண்டும்—யாருக்கும் கட்டுப்படாது செயல்பட வேண்டும்-நீதி வழங்க வேண்டும் என்ற அடிப்படையில் செயல்பட வேண்டும்—இதில் தனிமனிதனுடைய விருப்பு வெறுப்புகளுக்கு அல்லது ஒரு அரசியல் கட்சியினுடைய விருப்பு வெறுப்புகளுக்கு உட்படாது அந்த நீதிமன்றம் செயல்பட வேண்டும் என்ற கருத்தை முழுமனத்தோடு இந்த அரசு ஆதரிக்கிறது.

இந்த அரசைப் பொறுத்த அளவிற்கு உயர்நீதி மன்றத்திலேயே நீதிபதிகளை நியமிப்பதில் தான் நாங்கள் சம்பந்தப்பட்டிருக்கிறோம். ஆகவே எங்களுடைய கருத்துக்கள் உயர் நீதி மன்ற நீதிபதிகளைத் தேர்ந்தெடுக்கும்போது இந்த அடிப்படையில்தான் சுதந்திரமாக அவர்கள் செயல்பட வேண்டும். தனிநபர்கள் எந்தக் கருத்துக்களுக்கும் ஆட்பட்டிருக்கலாம். ஆனல் அந்த இடத்திலேபோய் அமர்ந்த உடன் அவர்கள் எந்தக் கருத்துக்கும் தங்களை ஆட்படுத்திக் கொள்ளாது சுதந்திரமாகச் செயல்பட வேண்டும் என்பதுதான் எங்களுடைய கருத்து.

நிருவாகத்துறைக்கும் கீழே நீதித்துறை செயல்பட வேண்டும் என்றோ ஒரு அரசியல்கட்சியின் ஒரு அரசினுடைய கருத்துக்களை ஏற்றுச் செயல்பட வேண்டும் என்றோ இந்த அரசாங்கம் என்றைக்கும் ஏற்றுக் கொள்ளாது.

## வேளாண்மைத்துறை அமைச்சர்

# சி பா. ஆதித்தனர்

தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகம் மூலம் டிராக்டர்கள் வேளாண்மைக் கருவிகள் ஆகியவற்றைப் பழுது பார்க்கும் 12 நிலையங்களில் ரூபாய் எட்டு இலட்சத்துத் தொண்ணூறு ஆயிரம் செலவு செய்யப்படும்.

* * *

கரும்புத் தீர்வை நிதியிலிருந்து கிராமச் சாலைகள் அமைப்பதற்கான திட்டத்தின் கீழ், 47 சாலைகள் போடப்பட உள்ளன. இவற்றிற்கு 26.5 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாய் ஆகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

* * *

திருச்சி குடுமியா மலையில் அண்ணா பண்ணையையொட்டி விவசாயபாலிடெக்னிக் அமைக்கும் யோசனை உள்ளது. சற்றேறக்குறைய 24வேளாண்மை பாலிடெக்னிக்குகள் அமைக்கப்படலாம் என்று மாநிலத் திட்டக் குழு யோசனை கூறியிருக்கிறது.

குடுமியா மலையில் அண்ணா விவசாயப் பண்ணை 1972-73 ஆம் ஆண்டு பெற்றுள்ள இலாபம் ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் ரூபாய் ஆகும்.

## உள்ளாட்சித்துறை அமைச்சர்

# அன்பில் பே. தர்மலிங்கம்

விரைவில் சிங்காநல்லூரையும் கோவையுடன் இணைத்துக் கோவையை மாநகராட்சி ஆக்கும் விஷயம் பரிசீலனையில் உள்ளது.

5 இலட்சம் மக்கள் தொகையையும் ரூ. 2 கோடிக்கு மேல் ஆண்டு வருமானத்தையும் கொண்டுள்ள திருச்சியையும் இது போன்று மாநகராட்சியாக மாற்றப் பரிசீலிக்கப்படுகிறது.

உணவு அமைச்சர்

## மன்னை ப. நாராயணசாமி

தமிழ் நாட்டின் எல்லைப் பகுதிகளில் போதிய உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டே வருகின்றன; தாராளமாகவும் கிடைக்கிறது. எனவே அங்கு ரேஷன் தேவையில்லை.

நியாயவிலைக் கடைகளுக்கு அரிசி, சர்க்கரை சப்ளை செய்யப்படுகிறது. கோதுமை மாதம் 35 ஆயிரம் டன் ஒதுக்கியதை இப்போது 9 ஆயிரம் டன் ஆகக் குறைத்துவிட்டார்கள். இதைத்தான் பகிர்ந்து அளிக்க வேண்டியிருக்கிறது.

தொழிலாளர் நல

அமைச்சர்

## க. இராசாராம்

பொங்கல் பரிசாகத் தமிழ் நாட்டில் உள்ள பல்வேறு மாவட்டங்களில் 1,500 வீடுகள் கட்டிக் கொடுக்கஇருக்கிறோம். ஒவ்வொரு வீடும் ரூ. 10,000 மதிப்புள்ளதாகும். இந்தியாவிலேயே அதிக வீடுகள் கட்டிக் கொடுப்பது தமிழக வீட்டு வசதி வாரியம்தான்.

மாவட்டத் தலைநகரங்களில் தான் இப்படி ரூ. 10,000 மதிப்புள்ள வீடுகள் கட்ட முடிகிறது. சென்னையில் இதைக் கட்டுவது சிரமமாகத்தான் இருக்கிறது. நிலம் அதிக விலை விற்கிறது. தொழிலாளர் கூட்டுறவு முறையில் நிலம்வாங்கித் தந்தால் நாங்கள் கட்டித் தரத் தயாராக இருப்பதாக கூறியுள்ளோம்.

மின் துறை

அமைச்சர்

## ஓ. பி. இராமன்

மின்சாரக் கட்டண பில்களை அனுப்புவதற்குப் பல்வேறிடங்களில் ஆட்கள் நியமிக்கப்படாததால் பில்களைத் தயாரிப்பதில் தாமதம் ஏற்பட்டது; இப்போது ஆட்கள் நியமிக்கப் பட்டுவிட்டார்கள். பில்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. இவைகளை எத்தனை தவணைகளில் கட்ட விரும்புகிறார்களோ அத்தனை தவணைகளில் கட்டலாம் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே எங்கும் இல்லாத அளவிற்குத் தமிழ் நாட்டிலேதான் மின்சார வசதி செய்து தரப்பட்டிருக்கிறது.

1966-67-இல் தொழிற்சாலைகளுக்குத் தரப்பட்ட மின்சாரம் ஆந்திரத்தில் 172 மில்லியன் யூனிட், இப்போது 306 மில்லியன் யூனிட்; கேரளத்தில் 31 மில்லியன் யூனிட், இப்போது 61 மில்லியன் யூனிட்; மைசூரில் 62 மில்லியன் யூனிட் இப்போது 203 மில்லியன் யூனிட்.

66-67-ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் 263 மில்லியன் யூனிட் தரப்பட்டது; இப்போது 1,403 மில்லியன் யூனிட் தரப்படுகிறது. தென் மாநிலங்களிலேயே தொழிலபிவிருத்திக்குத் தமிழ் நாடு அரசுதான் அதிக மின்சாரம் கொடுத்திருக்கிறது. அதனால்தான் அகில இந்தியாவிலேயே தமிழகம் மூன்றாவது இடத்தைப் பெற்றிருக்கிறது.

போக்குவரத்துத் துறை

அமைச்சர்

## எஸ். இராமச்சந்திரன்

பேருந்துக் கட்டணத்தை 3 காசிலிருந்து 3.5 காசாக உயர்த்துவதற்கு டீசல் மட்டும் காரணமல்ல, விலைகளும் உயர்ந்திருக்கின்றன. எல்லா மாநிலங்களிலும் பஸ் கட்டணம் உயர்ந்திருக்கிறது என்று மத்திய அரசே தெரிவித்திருக்கிறது.

நமது மாநிலத்தில் மூன்றரைக் காசாகத்தான் உயர்த்தியிருக்கிறோம். ஆனால் பம்பாயில் 10 காசாக உயர்த்தியிருக்கிறார்கள்.

இன்று இருக்கின்ற பொருளாதார அமைப்பில் விலைகள் கூடிக் கொண்டு வருவதால்—அதைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் மாநில அரசுகளுக்கு இல்லாத நிலைதான் இருக்கிறது.

இப்படிப்பட்ட நிலைமை ஏற்படாமல் இருக்க வேண்டுமானால் முதலாளித்துவப் பொருளாதாரம் இல்லாமலிருப்பது தான் வழியாகும்.

தமிழ் நாடு அரசு போக்குவரத்துத்துறை நாகர்கோவிலில் ஜாயிண்ட் டைரக்டரின் அதிகாரத்திற்குட்பட்ட பகுதிகளில் 12 வழித் தடங்களில் புதிய பஸ் ரூட்கள் நிறுவியுள்ளது.

அறநிலையத் துறை அமைச்சர்

## மு. கண்ணப்பன்

''பால் வளப் பெருக்கத் திட்டத்தின் கீழ் சென்னைக்கு இரண்டாவது பால் பண்ணை ஒன்று அம்பத்தூர் தொழிற்பேட்டையில் அமைக்கப்பட இருக்கிறது. இங்கு நாளொன்றுக்கு இரண்டு இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படும். தேசிய பால் பண்ணை வளர்ச்சி வாரியத்தின் திட்டப்படி இது செயல்படும்.

குழந்தை பால் பவுடர் உற்பத்தித் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. செயல் திட்டத்திலும் அது இருக்கிறது. புதிய பால் பண்ணை வளர்ச்சி வாரியத்தின் சார்பில் 8.5 கோடி ரூபாய் தரப்பட்டு, இந்தப் புதிய திட்டத்துக்கு 3 கோடி ரூபாய் செலவிடத் திட்டமிட்டிருக்கிறோம். 2 இலட்சம் லிட்டர் பால் இங்கு உற்பத்தியாகும்.

# கேள்விகளுக்கு எழுத்து மூலம் அளித்த பதில்கள்

தமிழ் நாட்டில் மொத்தம் 21,300 லாரிகளுக்கு உரிமம் வழங்கப்பட்டிருக்கின்றது. அவற்றில் 20,213 லாரிகள் தனியாருக்குச் சொந்தமானவை. இந்தக் கணக்கு 30-6-1973-இல் உள்ளபடி குறிக்கப்பட்ட கணக்காகும்.

* * *

குழந்தைகள் காப்பகங்கள் தமிழ் நாட்டில் மொத்தம் 1,914 உள்ளன. 1973 மே வரையிலான கணக்கு இது.

* * *

1972-73-ஆம் ஆண்டு அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட திருமண முன் பணத் தொகை மொத்தம் ரூ. 40 இலட்சமாகும். மாவட்ட வாரியாக இத்தொகையில் அதிகம் பெற்றவர்கள் சென்னை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். ரூ. 10 இலட்சம் அவர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தஞ்சை, திருச்சி, கோவை, மதுரை ஆகிய நான்கு மாவட்டங்களுக்கு மூன்று இலட்சம் வீதமும் இதர மாவட்டங்களுக்கு இரண்டு இலட்சம் வீதமும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது.

தமிழ் நாட்டிலுள்ள தனியார் காடுகளின் எண்ணிக்கை மொத்தம் 259 ஆகும். இவற்றின் பரப்பு 4 இலட்சத்து 12 ஆயிரத்து 62 ஏக்கரும் 67 செண்டுகளும் ஆகும்.

தென்னார்க்காடு மாவட்டத்தில் 2.60 ஆயிரம் ஏக்கர் பரப்பில் மூன்று காடுகள் உள்ளன. எண்ணிக்கையில் அதிகமான காட்டுப் பகுதிகள் மதுரையில் உள்ளன. 95 காட்டுப் பகுதிகள் உள்ளன. இந்த 95-ம் சேர்ந்து மொத்தம் 19 ஆயிரத்து 842 ஏக்கர் 82 செண்டுகள்.

அடுத்து நீலகிரிப் பகுதியில் 72 எண்ணிக்கையுள்ள காட்டுப் பகுதிகள் 58 ஆயிரத்து 542 ஏக்கர் 22 செண்டுகள் பரப்பில் உள்ளன.

* * *

சென்னை நகரிலுள்ள மாநகராட்சிப் பொறுப்பிலுள்ள பூங்காக்கள் மொத்தம் 137 ஆகும். விளையாட்டு மைதானங்கள் 71.

* * *

கோயமுத்தூர் தெற்குக் கோட்டம், நீலகிரி வடக்குக் கோட்டம், கோயமுத்தூர் வடக்குக் கோட்டம், கோயமுத்தூர் மத்திய கோட்டம் ஆகிய வனத் தோட்டங்களில் வளர்க்கப்படுவதுடன், இயற்கையாகவே கன்னியாகுமரியிலுள்ள காடுகளிலும், மதுரையில் சிறிதளவிலும் வளருகின்ற செம்மர (கருங்காலி) உற்பத்தி 1968-69 முடிய உற்பத்தி ஆன செம்மரத்தின் அளவு 3427.065 கன மீட்டர்கள் ஆகும்.

சென்ற ஐந்து ஆண்டுகளிலும் ரூ. 51 இலட்சத்து 42 ஆயிரத்து 444-க்கு இந்தச் செம்மரம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. விற்பனை செய்யப்பட்ட மொத்த செம்மர அளவு 2549.851 கன மீட்டர்கள் ஆகும்.

நாடு விடுதலை அடைந்த 25-ஆவது ஆண்டின் வெள்ளி விழா தொடர்பாக இந்திய அரசு சுதந்திர ஆண்டு விழாப் பதக்கம் தந்து பெருமைப்படுத்தியவர்கள்—எல்லாத் தரங்களையும் சேர்ந்த காவல் துறை படையினர், ஊர்க்காவல் படையினர், உட்பட தமிழகத்தில் மொத்தம் 52.587 பேர் ஆவர். இவர்களில் தகுதி வாய்ந்த அதிகாரிகளும், பணியாளர்களும் அடங்குவர்.

73-ஆம் ஆண்டு செப்டம்பர் முடிய சென்னையில் காலரா நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் 944 பேர். அவர்களில் இறந்தவர்கள் 17.

1972-73-ஆம் ஆண்டில் தமிழக அரசினால் 827 முடி திருத்தும் தொழிலாளர்களுக்கும், 827 சலவைத் தொழிலாளர்களுக்கும் இலவசக் கருவிகள் மானியமாக அளிக்கப்பட்டுள்ளன. முடி திருத்தும் தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட்ட கருவிகளின் மதிப்பு ரூ. 62,025 சலவைத் தொழிலாளர்களுக்கான கருவிகளின் மதிப்பு ரூ. 1,40,590.

# பரிசு பெற்ற ஆசிரியர்

கல்வி இன்றியமையானது தான். ஆனாலும் வெறும் ஏட்டுக்கல்வி வாழ்க்கைக்குப் பயன்பெறுவது அருமையிலும் அருமை. எனவே விரைந்து பொருளாதாரத் துறையில் முன்னேறிவரும் ஒரு நாட்டிற்கு தொழில் வளர்ச்சி இன்றியமையாத ஒன்று. வளர்ந்து வரும் சமுதாயத்திற்கு வாழ்வூட்டுவதும், அச்சமுதாயத்திற்குத் தெம்பூட்டுவதும் தொழில்களே ஆகும். எனவே அடிப்படைக் கல்விக்குப் பிறகு அவர்களுக்கு இன்றியமையாத தொழிற்கல்வியை அளித்திடுதல் அரசின் இன்றியமையாத கடமை. இதை உணர்ந்தே தமிழ்நாடு அரசு தொழிற்கல்வி அளிப்பதிலும், தொழிலில் பயிற்சி அளிப்பதிலும் தீவிரமான அக்கறையும் ஆர்வமும் காட்டி வருகிறது. இவ்வகையில்தான் சென்னை அரசினர் அச்சகத்தின் தொழிலாளர் ஆசிரியர் (Worker Teacher) திரு. எம். பி. ஜெயராமனுக்கு மண்டல தொழிலாளர் கல்வி இயக்ககம் பொற்பதக்கம் வழங்கிப் பாராட்டிச் சிறப்பு செய்தது.

சென்னை வட்டாரத்தில் அனுபவமிக்க தொழிலாளர் ஆசிரியர்களில் ஒருவராக விளங்கும் திரு. எம். பி. ஜெயராமன் முதன் முதலில் அரசினர் அச்சகத்தில் நகல் வாசகராகச் சேர்ந்தார். தற்பொழுது முதுநிலை வாசகராகப் பணியாற்றுகிறார்.

தொழிலாளர்களுக்குச் சிறந்த முறையில் பயிற்சியளிக்க வேண்டும். அவர்கள் தொழிலாளர் நலச் சட்டங்களை எளியமுறையில் தெரிந்து கொள்ளவும் வேண்டும். தொழிற்சங்க விவகாரங்கள் சட்டரீதியில் நடைமுறைப்படுத்த வேண்டும் போன்றவைகளைக் கருத்தில் கொண்டு இவர் தொழிலாளர்களுக்குத் தொழிற் கல்விப் பயிற்சியளித்து வருகிறார்.

சென்னை அரசினர் அச்சகத்தில் இவர் சுமார் 29 ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறார். 10 ஆண்டுக் காலமாக தொழிலாளர் ஆசிரியராகப் பணியாற்றுகிறார். அரசினர் அச்சகத்தைச் சார்ந்த 26 அணிகளைக் கொண்ட சுமார் 700 தொழிலாளர்களுக்குப் பயிற்சியளித்து முதன்மையில் நிற்கிறார்.

1967-ஆம் ஆண்டில் அரசினர் அச்சகத்தில் நடைபெற்ற தொழிலாளர் கல்வி விழாவில் பங்கு கொண்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் இவரது பணியைப் பெரிதும் பாராட்டியுள்ளார். அந்த ஆண்டிலிருந்துதான் தொழிலாளர் கல்வி சிறந்த முறையில் அரசினர் அச்சகத்தில் செயலாற்றி வருகிறது.

தொழிலாளர் — நிருவாகம் சுமுகமான முறையில் இயங்க, தற்பொழுது தொழிலாளர் முன்னேற்றப் பேரவையுடன் இணைந்துள்ள அரசினர் அச்சக தொழிற்சங்கத்தில் 25 ஆண்டுகள் செயற்குழு உறுப்பினராகவும், 18 ஆண்டுகள் செயலாளராகவும், உப தலைவராகவும் இவர் பணியாற்றி, கூட்டுப் பேரத்தின் வாயிலாகத் தொழிலாளர்களின் கடமை, உரிமை போன்ற பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள உதவியுள்ளார். பேரறிஞர் அண்ணா, திரு. ராஜாஜி, குடியரசுத் தலைவர் திரு. வி. வி. கிரி போன்ற தலைவர்களுடன் தொழிற்சங்கப் பிரச்சினைகள் குறித்தும் கலந்தாலோசித்துள்ளார்.

தொழிலாளர்களுக்குப் பயிற்சியளிப்பதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு நல்ல முறையில் கல்விப்பயிற்சியளித்தமைக்காக இவருக்கு அண்மையில் பொற்பதக்கம் ஒன்று வழங்கப் பெற்றது. தொழிலாளர் நல அமைச்சர் திரு. க. இராசாராம் அவர்கள், பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்கள் தலைமையில் இப்பொற்பதக்கம் வழங்கிப் பாராட்டினார்கள்.

திரு. எம். பி. ஜெயராமன் அவர்கள் ''தமிழக அரசு, தொழிலாளர்கள் சீரியமுறையில் கல்விப்பயிற்சி பெற்றுத் தொழில்துறையில் முன்னேறுவதற்கு தன்னுடைய முழு ஒத்துழைப்பையும், எல்லா வகையான ஆதரவுகளையும், ஊக்கத்தையும் வழங்குகிறது. தொழிற்கல்விப் பயிற்சி அளிக்கின்ற ஆசிரியர்களாகிய எங்களுக்குப் பல சலுகைகள் வழங்கிச் சிறந்த முறையில் நாங்கள் பணிபுரிய உதவுகிறது. அரசு அளிக்கின்ற இந்த வகையான சலுகைகளையெல்லாம் நல்ல முறையில் பயன்படுத்தித் தொழில் துறையில் முன்னேற்றம்காண நாங்கள் பெரிதும் பாடுபடுவோம்'' எனப் பெருமையுடன் கூறிக் கொள்கிறார்.

தொழிலாளர்கள் கல்விப் பயிற்சி பெற எல்லாவித சலுகைகளையும் அளிக்கத் தமிழக அரசு தயாராக உள்ளது என்பது தெளிவாக விளங்குகிறது. கிடைக்கின்ற சலுகைகளை நல்லமுறையில் பயன்படுத்தி ஒவ்வொரு தொழிலாளர் ஆசிரியரும் பரிசும், பாராட்டும் பெறவேண்டும் என்கின்ற கருத்தில் பணியாற்றி நாட்டின் முன்னேற்றத்திற்கும் தொழில் துறை வளர்ச்சிக்கும் பாடுபட வேண்டும்.

— ஆயிரம்





# தமிழகத்தில் செயற்கை முத்து

தமிழ்நாட்டில் தூத்துக்குடிக்கு அருகில் வேப்பலோடை என்னுமிடத்தில் மத்திய கடல் ஆராய்ச்சிக் கழகம் செயற்கை முத்துச் சிப்பி ஆய்வுக்கூடம் ஒன்று நிறுவியுள்ளது. இந்த ஆய்வுக் கூடத்தால் நடத்தப்படுகிற இணைந்த முத்துச் சிப்பி ஆளி வளர்ப்புப் பண்ணையில் புதிய முறையில் முத்துச் சிப்பி ஆளிகள் வளர்க்கப்படுகின்றன. முதன்முதலில், இந்தியாவில் ஏற்படுத்தப்பட்ட முத்துச்சிப்பி ஆளி வளர்ப்புப் பண்ணை இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆஸ்திரேலியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளும் செயற்கை முத்துக்களை உற்பத்தி செய்கின்றன. என்றாலும் வெளிநாட்டின் உதவியின்றிச் செயற்கை முத்துக்களை உற்பத்தி செய்வது ஜப்பானும் நமது நாடும் தாம்.

வேப்பலோடையிலுள்ள முத்துச்சிப்பி ஆளி வளர்ப்புப் பண்ணையிலிருந்து கிடைக்கும் செயற்கை முத்துக்கள் மிக அழகாகவும் முழு வடிவம் கொண்டவையாகவும் விளங்குகின்றன. ஜப்பான் முத்துச் சிப்பி ஆளிகளைவிட இங்கு மிக விரைவில் முத்துக்களை உருவாக்குகின்றன. இந்தியா, தற்போது ஜப்பானிலிருந்து பலகோடி ரூபாய் மதிப்புள்ள முத்துக்களை இறக்குமதி செய்கிறது. வேப்பலோடை முத்துச்சிப்பி ஆளிவளர்ப்புப் பண்ணையில் உற்பத்தி முழு அளவை எட்டும்போது, முத்துக்காக நாம் ஜப்பானுக்கு கொடுக்கிற பலகோடி ரூபாய் மிச்சப்படும்.


# தமிழரசு

சுற்றுலாச் சிறப்பிதழாக மலரும்
சனவரி 1வ இதழுடன்
இலவச இணைப்பு!

## 1974-ஆம் ஆண்டு நாட்காட்டி

பொங்கல் இதழான
சனவரி 16வ இதழில்............

புதிய தொடர்கதை
பூவை.எஸ். ஆறுமுகம் எழுதும்

## காணி நிலம் வேண்டும்
தொடங்குகிறது

—:முற்றிலும் கிராமியச் சூழ்நிலையில் உருவாக்கப்பட்டுள்ள உயிரோவியம் இது:—



விற்பனையாளர்கள் தங்களுக்குத் தேவையான பிரதிகளுக்கு முன்னதாகவே பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம்.

விவரங்களுக்கு
நிருவாகி
தமிழரசு
அரசினர் தோட்டம்
அண்ணாசாலை
சென்னை-600002.

சென்னை நகரத்தின் நெருக்கம் நிறைந்த இடம்—எண்ணற்ற மக்கள் எப்போதும் சென்று கொண்டிருக்கும் சாலை —வினாடிக்கு வினாடி விரைந்து செல்லும் ஊர்திகளின் இரைச்சல்—எந்நேரமும் மக்கட் கூட்டத்தை வரவேற்றுக் கொண்டிருக்கும் விரைவுப் பேருந்து நிலையம் — சாதாரணப் பேருந்துகள் நிற்கும் நிலையம் —இப்படி அநேக பகுதிகள் கொண்ட வடசென்னை 'எஸ்பிளனேட்' வட்டாரத்தில், எந்த இரைச்சலையும் கருத்தில் கொள்ளாமல்—எந்தச் சூழ்நிலையையும் பொருட்படுத்தாமல் மாலை நேரத்தில் .......

தமிழ் இசைச் சங்கத்தின் முயற்சியால் 1943-ஆம் ஆண்டு உருவான இந்தத் தமிழிசைக் கல்லூரி தமிழ் இசையை வளர்க்க அயராது பாடுபட்டு வருகிறது.

தமிழ் இசையாகிய தேவாரம் திருப்பாவை, திருவெம்பாவை ஆகியவற்றைக் கற்பிப்பதோடு, வீணை, மிருதங்கம், வயலின் ஆகிய இசைக்கருவிகளை இயக்குவதற்கும் இங்கே கற்றுத் தருகிறார்கள்.

பொதுவாக இசைப்பள்ளிகளில் பயில, அதிகக் கட்டணம் வசூலிக்கப்படுவது உண்டு; —மாதம் ஒன்றுக்கு, ஆரம்ப வகுப்பினர் ரூ. 5-ம் இசைச் செல்வம், இசைமணி வகுப்பினர் ரூ. 10-ம் பயிற்சிக் கட்டணம் செலுத்த வேண்டும்.

ஒவ்வோராண்டும் ஜூலை மாதத்தில் இங்கே வகுப்பு துவக்கம் ஆகிறது. வாரத்தில் சனி, ஞாயிறு ஆகிய இரண்டு நாட்கள் தவிர, மீதி ஐந்து நாட்களும் மாலை 4.30 மணியிலிருந்து இரவு 8 மணி வரை வகுப்புகள் நடைபெறுகின்றன.

இந்த இசைக் கல்லூரியில் இசை கற்பதற்கு வயது வரம்பு

# தலைநகரில் இசை பரப்பும் தமிழ் இசைக் கல்லூரி



## அட்டை சொல்லும் கட்டுரை

**பொன்னார் மேனியனே புலித்**
**தோலை அரைக் கிசைத்து**
**மின்னார் செஞ்சடைமேல்**
**மிளிர் கொன்றை அணிந்தவனே**

என்ற தமிழ்ப்பாடல் ஏதோ ஒரு கட்டடத்திற்குள் ஒலித்துக் கொண்டிருக்கிறது என்றால் அந்த இடம் அண்ணாமலை மன்றத்தில் உள்ள தமிழிசைக் கல்லூரிதான் என்று எவரும் எளிதில் கூறிவிட முடியும்.

தேவாரம், திருவாசகம், திவ்வியப்பிரபந்தம், திருப்புகழ் எல்லாம் இங்கே நாள்தோறும் ஒலிக்கின்றன. சின்னஞ்சிறு குழந்தைகளும், வயது வந்த ஆடவர், பெண்டிர் இருபாலரும் இங்கே தமிழிசையை ஆவலுடன் கற்று வருகிறார்கள்.

ஆனால் இங்கே அப்படியில்லை. தமிழ் இசையின் ஆரம்பப்பயிற்சிக்கு மாதம் ஒன்றுக்கு 2 ரூபாய் வீதமும், இசைச் செல்வம் என்னும் பயிற்சிப் பிரிவுக்கு 3 ரூபாய் வீதமும், இசைமணி என்னும் பயிற்சிப் பிரிவுக்கு மாதம் ரூ. 5 வீதமும் பயிற்சிக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

பணம் கொடுத்துப் படிக்க வசதியில்லாவிட்டாலும் கூட ஆர்வமுள்ளவர்களுக்கு, இலவசமாகவும் இசைப்பயிற்சி தரப்படுகிறது. இதற்குக் காரணம், தமிழ் இசையைப் பரப்ப வேண்டும் என்ற குறிக்கோள் தான்!

வயலின், வீணை, மிருதங்கம் ஆகிய இசைக் கருவிகளை இயக்கக் கற்றுக்கொள்வதற்கு கிடையாது. ஐந்து வயதிலிருந்து அறுபது வயதுள்ளவர் வரை இங்கே பயிற்சி பெறுகிறார்கள். அதுமட்டுமல்ல — இங்கே பயில்வதற்குச் சிறப்புத் தகுதிகளோ -பட்டப்படிப்போ தேவையில்லை. இன்சை ஆர்வம் தான் முக்கியம்! மாணவ மாணவியர் மட்டுமல்ல; அலுவலில் இருப்போரும் தமிழ் இசை கற்றுக்கொள்ளலாம். மேட்டுக் குடியினர் மட்டும்தான் இங்கு வந்து பயில வேண்டும் என்ற நியதி இல்லை. எவர் வேண்டுமானாலும் வந்து இசை கற்கலாம். உணவு விடுதிகளில் பணிபுரிவோர், அரசு அலுவலகங்களில் பணியாற்றுவோர், மற்றும் வணிகச் சந்தையில் வேலை பார்ப்போர் இப்படிப் பல்வேறு பிரிவினரும் இங்கு வந்து பயில்கிறார்கள். ஏறக்குறைய நூறு

பேர் இங்கே பயிற்சி பெறுகின்றனர்.

அரசுப் போக்குவரத்துத் துறையில் வண்ணம் பூசுபவராகப் பணியாற்றிய தினதயாளன் என்பவர் இந்த இசைக் கல்லூரியில் மிருதங்கம் கற்று வந்தார். அவர் அகில இந்திய வானொலி நடத்திய மிருதங்கப் போட்டியில் கலந்து வெற்றி பெற்றார் என்பதும், குடியரசுத் தலைவரிடம் பரிசு வாங்கியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்க செய்திகள்.

தற்போது, மருத்துவக் கல்லூரியில் பல் இயல் பிரிவில் (Dental Block) பயிற்சி பெறும் மைதிலி, புஷ்பராணி என்ற இரு மாணவியர் இந்த இசைக் கல்லூரியில் முறையே, மிருதங்கம், வாய்ப்பாட்டுப் பயிற்சி பெற்று வருகின்றனர்.

எண்ணம் ஈடேறுகின்ற வகையில் அரசினரின் இசைத் தேர்வுத்திட்டத்திற்குரிய வகையில் வடமொழிப் பாடல்களும் தெலுங்குக் கீர்த்தனங்களும் இங்கே கற்றுத் தரப்படுகின்றன. அரசினர் நடத்தும் கீழ்நிலை, மேல்நிலை ஆகிய இருநிலைகளுக்குமுரிய பாடத் திட்டங்களை இங்கே அனுசரித்து வருகிறார்கள்.

இசைபற்றிய பாட வகுப்புகள் (Theory Classes) பயிற்சி வகுப்புகள் (Practice Classes) இரண்டும் நடைபெறுகின்றன. தேர்வுக்கு இந்த இரண்டு பிரிவுகளுமே உண்டு! தேர்வு தமிழ் இசைச்சங்கத்தாராலேயே நடத்தப்படுகிறது. இந்தத் தேர்வில் வெற்றி பெற்றவர்கள் மேல் வகுப்புகளுக்கு அனுப்பப்படுகிறார்கள்.

கிடக்கிறது. 'அந்த வரலாற்றைச் சிறிது பார்ப்போம்:

முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகத்தின் இசை மேடைகளில் எல்லாம் தெலுங்குக் கீர்த்தனங்களும் வடமொழிப் பாடல்களுமே முழங்கி வந்தன. அன்னைத் தமிழில் பாடப்படும் பாடல்கள் மிகக் குறைவானதாக மட்டுமல்ல - கச்சேரியின் இறுதிப் பாடல்களாகவும் (மங்களப்' பாடல்களாகவும்) கருதப் பட்டு வந்தன. அந்த இழிநிலையைத் துடைக்க வேண்டும் என்ற எண்ணம் அண்ணாமலைப் பல்கலைக்கழக நிறுவனரும், செட்டிநாட்டரசருமான ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரின் உள்ளத்தில் ஆழப் பதிந்தது. இசைமேடைகளில் தமிழ் இசை ஒலிக்க வேண்டும் என்று அண்ணாமலையார் ஒலித்தார். ஆனால் அவருக்குக் கிடைத்த பதில்.....!



இந்த இசைக்கல்லூரியில் குறிப்பிடத்தக்க செய்தி ஒன்று உண்டு. இசைக் கருவிகளை இயக்குவதற்குக் கற்றுக் கொள்ள வருகின்றவர்கள் சொந்தமாக இசைக்கருவியைச் சுமந்து கொண்டு இங்கே வர வேண்டியதில்லை! கல்லூரியே அவர்களுக்கு இசைக் கருவியை வழங்குகின்றது.

நான்கு ஆண்டுப் பாடத்திட்டத்தை இந்த இசைக் கல்லூரி நடத்தி வருகிறது. பொதுவாகத் தேவாரம், திருவாசகம் ஆகிய தமிழ் இசைப் பாடல்கள் தாம் சொல்லித் தரப்படுகின்றன; என்றாலும், அரசுப்பள்ளிகளில் இசை ஆசிரியராகப் பணிபுரிய வேண்டும் என்ற குறிக்கோளுடன் ஒரு சிலர் இசை கற்க வருவதால், அவர்களது

இந்தக் கல்லூரியின் கௌரவ முதல்வர்களாக அரியக்குடி ராமானுஜ அய்யங்கார், பி.எஸ் வீருசாமி பிள்ளை போன்ற புகழ்பெற்ற கலைஞர்கள் பணி புரிந்திருக்கின்றனர்.

தற்போது பாலக்காடு திரு டி.எஸ். மணி அய்யர் கௌரவ முதல்வராகவும், திருமதி எம்.எல். வசந்தகுமாரி வருகை முதல்வராகவும் (Visiting Principal) பணியாற்றி வருகின்றனர்.

கல்லூரியின் இன்றைய இயக்குநர், திரு டி. சங்கரன், வீணை தனம்மாளின் பெயரர்.

இந்தத் தமிழ் இசைக் கல்லூரியைப் பொறுத்த வரையில் மாபெரும் வரலாறே அடங்கிக்

''மேடைகளில் பாடப்படுவதற்குரிய இசைப் பாடல்கள் தமிழ் மொழியில் இல்லை''— இசைத் துறையைச் சேர்ந்த ஒரு சிலர் இவ்வாறு பதிலுரைத்தார்கள். அதன் விளைவு....!

1940-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் நடைபெற்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் அண்ணாமலையார் தமிழ் இசை வளர்ச்சிக்காகப் பத்தாயிரம் ரூபாயை நன்கொடையாகக் கொடுத்தார். புதிய தமிழ் இசைப் பாடல்கள் இயற்றுவதை ஊக்குவிப்பதற்காகவும், இசைவாணர் சிலரின் நினைவில் மட்டும் தங்கியிருந்த பழந்தமிழ் இசைப்பாடல்களைப் பொது மக்களிடையே பரவச் செய்வதற்கும் இசைப்பாடல்களை

அச்சிட்டு வழங்குவதற்கும் அந்தத் தொகை பயன்பட வேண்டும் என்று அண்ணாமலை யார் கருதினார்.

அதன்பின் தமிழ் இசை வளர்ச்சிக்காக முதன் முதலாக மாநாடு ஒன்றை அண்ணாமலை நகரில் ஏற்பாடு செய்தார். அரியக்குடி இராமானுஜ அய்யங்கார், எம்.கே. தியாகராஜ பாகவதர், சித்தூர் சுப்பிரமணியபிள்ளை, கீழ்வேளூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, சிதம்பரம் ஜெயராம், திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி ஆகியோர் கலந்து கொண்டனர். அந்த மாநாடு, மக்களால் பெரிதும் மதிக்கப்பட்டது. தமிழ் இசை இயக்கத்தை மக்கள் பெரிதும் வரவேற்றனர். அந்நாளைய பத்திரிகைகள் பல அதற்கு ஆதரவு தந்தன. தமிழ் இசை இயக்கம் தேவையானது, நியாயமானது என்று தமிழ் நாட்டு மக்களும் தமிழ் அறிஞர்களும் கருதினார்கள். தமிழ் இசை இயக்கத்தை ஆதரித்து *15-9-1941*-ல் இசைக் கலைஞர் பலர் சேர்ந்து ஓர் அறிக்கை வெளியிட்டார்கள். திருடி.என் இராஜரத்தினம்பிள்ளை, மதுரை மாரியப்ப சுவாமிகள், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் ஆகியோர் அந்த அறிக்கையில் கையெழுத்திட்டவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

*16-9-1941*-ல் சென்னை விக்டோரியா மண்டபத்தில் தமிழ் இசை இயக்கத்தினை ஆதரித்தும், அண்ணாமலை நகர் தமிழ் இசை மாநாட்டுத் தீர்மானங்களை ஆதரித்தும் ஒரு கூட்டம் நடைபெற்றது. நாடகத் தந்தை பம்மல் சம்பந்த முதலியார் தலைமையில் நடைபெற்ற அந்தக் கூட்டத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களும் கலந்து கொண்டார்கள். என்பது குறிப்பிடத்தக்கது. அந்த மாநாட்டிற்குத் திரண்டு வந்திருந்த பொதுமக்களின் கூட்டம், தமிழ் இசை இயக்கத்திற்கு மாபெரும் ஆதரவு பெருகி வருகிறது என்பதை எடுத்துக் காட்டியது.

அதன் பிறகு தேவகோட்டை, திருச்சிராப்பள்ளி மதுரை, புதுக்கோட்டை, கும்பகோணம், திருப்பத்தூர், இப்படித் தமிழகத்தின் முக்கிய நகரங்களிலெல்லாம் தமிழிசை மாநாடுகள் நடைபெற்றன. தமிழிசைச் சங்கங்களும் உருவாகின. தமிழ் இசை இயக்கம் செழித்து வளர்ந்தது. *1943*-ஆம் ஆண்டு மே திங்களில் சென்னையில் தமிழ் இசைச்சங்கத்தினை அண்ணாமலையார் உருவாக்கினார். பல மாவட்டங்களிலும் உருவாகி இருந்த தமிழ் இசைக் கழகங்களுக்குத் தாய்ச்சங்கமாகச் சென்னைச் சங்கம் தோன்றித் திகழ்ந்தது.

*1943* டிசம்பர் திங்கள் *23*-ஆம் நாளிலிருந்து *1944* சனவரி *4*-ஆம் நாள் முடிய, பெரியதொரு தமிழ் இசை மாநாடு அரண்மனைக்காரத் தெருவில் உள்ள செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் நடைபெற்றது. தமிழ் இசைச் சங்கத்தின் முயற்சியால் நடைபெற்ற இம்மாநாட்டிற்குப் பொது மக்கள் வெள்ளமெனத் திரண்டு வந்தனர்.

''இனிய தமிழில் பாடி இசைக் கலையை வளர்ப்போம்''

''செந்தமிழ் இசையே செவி நுகர் இசையாம்''

என்பன போன்ற தொடர் மொழிகள் எழுதப்பட்ட அட்டைகள் மாநாட்டு அரங்கின் எல்லாப் பகுதிகளிலும் அணி செய்து கொண்டிருந்தன. மண்டபத்திற்குள் அமர்வதற்கு இடம் இல்லாமையால் பல்லாயிரக்கணக்கான மக்கள் வெளியில் நின்றுகொண்டிருந்தார்கள். இரசிகமணி டி. கே. சிதம்பர நாத முதலியார் அவர்கள் தலைமை ஏற்க, அண்ணாமலையார் தொடக்க உரையாற்ற, மூதறிஞர் இராஜாஜி, பேரறிஞர் அண்ணா, கல்கி, இரா. கிருஷ்ணமூர்த்தி மற்றும் பல பெருமக்கள் சொற்பொழிவாற்றினார்கள்.



இந்த மாநாட்டில் இராஜாஜி குறிப்பிட்டார்:

*''நம் தாய் மொழியில் பாடினால்தான் நம் ஆத்மாவிற்கும் திருப்தி கிடைக்கும். கடவுளுக்கும் காது கேட்கும்.''*

பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்:



மிருதங்க ஆசிரியரும் மாணவர்களும்

''இந்த இசை என்ற தமிழ்ச் சொல் உண்மையிலேயே இன்றைய தினம்போல் தலைவர்கள் வேறு காரியங்களில் இசையா விட்டாலும், இந்தக் காரியத்திலாவது இசையும் வழியில் ஏற்பட்டதற்கு மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ் இசை இயக்கம் தமிழருக்கு மிகவும் பயன்பட வேண்டும் என்பதை எடுத்துச் சொல்வதுடன் நானும் என்னைச் சேர்ந்தவர்களும் வேறு விஷயங்களில் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டாலும், இந்தத் தமிழிசையைப் பொறுத்த அளவில் மற்ற தலைவர்களுடன் ஒத்துழைக்கச் சித்தமாய் இருக்கிறோம்.''

இவ்வாறு, பெரும் ஆதரவுடன் தமிழிசை இயக்கம் வளர்ந்தது. என்றாலும் அதற்கு ஏற்பட்ட எதிர்ப்புகள் ஏராளம்! ஏராளம்! தமிழ்நாட்டிலே, தமிழ் மேடையிலே தமிழ் இசை பாடப்படுவது தகாது என்றும் தியாகராயர் கீர்த்தனங்களுக்கு ஆபத்து ஏற்பட்டுவிட்டது என்றும் பலர் பலவாறு கூறிவந்தனர். அவர்களுடைய எதிர்ப்புகளுக்கெல்லாம் பேரறிஞர் அண்ணா, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், இராஜாஜி, கல்கி ஆகியோர் தக்க மறுமொழிகளைக் கூறி எதிர்ப்பாளர்களின் கருத்துக்களை முறியடித்து வந்தனர்.

அண்ணா அவர்கள் தமிழ் இசை இயக்கத்தை ஆதரித்து அந்நாளில் 'தமிழரின் மறுமலர்ச்சி' என்று ஒரு நூலே எழுதியிருக்கிறார். அந்த நூலிலே அவர் குறிப்பிட்டுள்ளார்:

''இசை, இன்பத்தைத் தர வேண்டுமானால், அது கேட்போரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ள வேண்டுமானால், யார் முன்னால் பாடல் பாடப்படுகிறதோ அதை அவர்கள் புரிந்து கொள்ளக் கூடியதான மொழியில் இருத்தல் வேண்டும். இது அறிவுத் துறையில் அரிச்சுவடி; இதனைச் சிலர் மறுக்கின்றனர். இது அறிவீனம்!

''சங்கீதம் எந்த பாஷையாய் இருந்தால் என்ன? என்று கூறுபவர்கள்—'இராக லட்சணமே முக்கியம்; சாகித்திய லட்சணம் முக்கியமாகாது' என்று கூறுபவர்கள் திருவாவடுதுறை இராசரத்தினம் அவர்களின் நாதசுரமும் கும்பகோணம் இராசமாணிக்கம் பிள்ளையின் பிடிலுமிருக்க வாய்ப்பாட்டு வேறு ஏன் தேடுகிறார்கள்? அந்த நாதசுரத்தில் இராக லட்சணங்கள் 'போதும்' என்கிற அளவுக்குக் கேட்கலாம். ஜிலுஜிலுப்பு வேண்டுமா? கமகம் தேவையா? ஆலாபனத்தில் அலங்காரம் வேண்டுமா? எது நாதசுரக்காரரால் முடியாது? தாளவரிசைகளிலே திறமைகள் கேட்க வேண்டுமோ? பக்கத்திலிருக்கும் தவுல்காரரைப் பார்த்தால்போதுமே, கோடையிடி கேட்கும்! சங்கீதம் வெறும் இராக லட்சணம், நாதம் என்று பேசுவோர் நாதத்தை நாதசுரத்தில், பிடிலில், வீணையில், புல்லாங்குழலில் கேட்கின்றனர் என்றாலும், வாய்ப்பாட்டும் தேடுகின்றனர்; காரணம் என்ன? வாய்ப்பாட்டிலே நாதமும் நெஞ்சையள்ளும் சாகித்தியமும் இருக்கின்றன என்பதற்காகத்தான். நெஞ்சை அள்ளும் சாகித்தியம் தமிழருக்குத் தமிழில் இருத்தலே முறை''-தமிழ் இசைவளர்ச்சிக்காக வழக்கறிஞரைப்போல் அண்ணா அவர்கள் எடுத்துரைத்த வாசகங்கள் இவை.





சேர நன்னாட்டின் மங்கையர் வேழத்தை விரட்டிய தமது வீரக் காதலரை வாழ்த்திப் பாடியது, தமிழில்தான்! வெற்றிக்கொடி பறக்க, எதிரியை விரட்டி அடித்துத் திரும்பிய சோழ மன்னர்கள் சிறப்பைத் தமிழில்தான் பாடினார்கள்.

பாண்டியனின் குமாரிகளுக்குப் பாங்கிகள் பாடியது தமிழ்ப் பாட்டுகள்தான்.

கதிரவன் காய்வதை அடக்கிக் கொண்டு, மேனி சிவந்து மறையும் நேரத்தில், கடலோரத்தில், பட்டுக் கூடாரத்தினுள்ளே, பக்கத்தில் இருந்த கோவலனின் உள்ளம் குழைய மாதவி பாடியது தமிழில்தான்!

—பேரறிஞர் அண்ணா





தென் ஆப்பிரிக்காவிலிருந்து வந்து பயிற்சிபெறும் செல்வி சூர்யகுமாரி

மூதறிஞர் இராஜாஜி அவர்கள் தமிழ் இசை இயக்கத்தைப்பற்றி அருங்கருத்து ஒன்றினைத் தெரிவித்தார். ''தியாகராஜர் தமிழ்நாட்டிலே வாழ்ந்தவர். தமிழை நன்கு அறிந்தவர். என்ருலும் தமிழிலே பாடலை எழுதாமல் தெலுங்கிலே எழுதினர். காரணம், தெலுங்கு அவரது தாய் மொழி. தாய் மொழியில் தியாகராயர்பாடல் எழுதியது எப்படி நியாயமானதோ, அதே போலத்தான் தமிழ்மக்கள் தங்கள் தாய்மொழியான தமிழ் மொழியில் பாடல்கள் இயற்றப்பட வேண்டும் என்று சொல்வதும் நியாயமானதாகும்!''

இவ்வாறு மாபெரும் அறிஞர்களின் ஒத்துழைப்பாலும் தமிழ் அன்பர்களின் முயற்சியாலும் உருவாகியுள்ள தமிழ் இசைச் சங்கத்தினல் தோற்றுவிக்கப்பட்டுள்ள தமிழ் இசைக் கல்லூரி, ஆல்போல் தழைத்து வேரூன்றி நிற்கிறது. ஆண்டு தோறும் சில இசைப்பாடல் போட்டிகளை நடத்தி வருகின்றது. அவை கோபாலகிருஷ்ண பாரதியார் பாடல் போட்டி, திருப்பாவை, திருவெம்பாவை, தேவாரம், திவ்வியப்பிரபந்தம், திருவாசகம், திருத்தாண்டகம், திருப்புகழ் பாடற்போட்டி, அண்ணமலையார் அவர்கள் நினைவுப் போட்டி, திரு ஆர் கே. சண்முகம் செட்டியார் நினைவுப் போட்டி ஆகிய போட்டிகள் நடத்தப் படுகின்றன. சென்ற ஆண்டு முதல் கதாகாலட்சேபப் போட்டி ஒன்றினையும் ஏற்படுத்தியுள்ளார்கள். திரு சிடி.வி.வெங்கடாசலம் செட்டியார் நினைவுப் போட்டி என்று இது அழைக்கப்படுகிறது.

கோபாலகிருஷ்ண பாரதியார் பாடல் போட்டியில் பரிசு பெறுவோர்க்குச் சுமார் 400 ரூபாய் மதிப்புள்ள தம்புரா பரிசு தரப்படுகிறது. ஏறக்குறைய 20 ஆண்டுகளாகக் கொடுக்கப்பட்டு வரும் இந்தப் பரிசு 'இராஜாஜி தம்புரா பரிசு' என்று அழைக்கப்படுகிறது. காரணம், இராஜாஜி அவர்கள் கொடுத்த அன்பளிப்புத் தொகையைக் கொண்டு இது கொடுக்கப்பட்டு வருகிறது.

இந்தப் போட்டிகளுக்கு உரிய விதிமுறைகள் பல என்ருலும் ஒரு சிலவற்றை இங்கே குறிப்பிடுவது அவசியம்.

தம்புரா, சுருதி கூட்டக்கூடியவர்கள் மட்டுமே இராஜாஜி தம்புரா பரிசுப் போட்டி, அண்ணமலை வள்ளல் நினைவுப் போட்டி, சர். ஆர்.கே. சண்முகம் செட்டியார் நினைவுப் போட்டி ஆகியவற்றில் கலந்து கொள்ளலாம். அதன் பொருட்டு முதற்போட்டி நடைபெறும். அந்தப் போட்டியில் தேர்வு பெற்றவர்களே இறுதிப் போட்டியில் கலந்து கொள்ள முடியும் கதாகாலட்சேபப் போட்டியிலும், தேவார திவ்வியப் பிரபந்தப் போட்டியிலும் கலந்து கொள்கிறவர்கள் தம்புராவை இயக்கத் தெரிந்திருக்கவேண்டும் என்ற விதி இல்லை. தம்புரா சுருதியுடன் பாடினல் போதுமானது.

வாய்ப்பாட்டுப் பாடுபவர்கள் மட்டுமே போட்டியில் கலந்து கொள்ளலாம். மற்ரெரு குறிப்பிடத் தகுந்த விதி, இசையைத் தொழிலாகக் கொண்டுள்ளவர்கள் இந்தப் போட்டியில் கலந்து கொள்ள முடியாது. முந்தைய ஆண்டு ஏதேனும் ஒரு போட்டியில் பரிசு பெற்றவர்கள் அதே போட்டியில் மீண்டும் கலந்து கொள்ள முடியாது.

ஒருவர் நான்கு போட்டியிலும் கலந்து கொள்ளலாம். ஆண்—பெண் இருபாலரும் வயது வரம்பின்றி இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ளலாம். ஒவ்வொரு போட்டிக்கும், தனித் தனி மனுச் செய்ய வேண்டும் என்பது குறிப்பிடத் தக்கது. பரிசு பெற்றவர்களுக்குரிய பரிசுகள் தமிழ் இசைச் சங்கத்தின் ஆதரவில் டிசம்பர் திங்களில் நடைபெறும் இசைவிழாவின்போது தலைமை ஏற்கும் விழாத் தலைவரால் வழங்கப்படும்.

ஒவ்வோர் ஆண்டும் நடைபெறும் இசைவிழாவின்போது தமிழ் இசைக் கல்லூரியில் பயின்று இசைத் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு இசைச்செல்வர், இசைமணி என்ற பட்டங்களுக்குரிய சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

ஆண்டுதோறும் நடைபெறுகின்ற தமிழ் இசை விழாவில் புகழ் பெற்ற இசைமேதைகளை அழைத்து அவர்களுக்கு ''இசைப்பேரறிஞர்'' என்ற சிறப்புப் பட்டத்தைத் தமிழ் இசைச் சங்கம் வழங்கி வருகிறது.

இசைப்பேரறிஞர் என்ற பட்டம் பெறுபவர்கள் மேடையில் இசை பாடுபவர்களாகத்தான் இருக்க வேண்டும் என்பது இல்லை. இசையில் ஆர்வம் உள்ளவராக—இசைப் பாடலாசிரியராக— நாட்டியத் துறையில் வல்லவராக—கதா காலட்சேபம் செய்பவராக— இவ்வாறு இசைத்துறையில் தொடர்பு உடையவராக இருந்தாலே போதும்.

கும்பகோணம் இராசமாணிக்கம் பிள்ளை, எம்.எம். தண்டபாணி தேசிகர், பேராசிரியர் சாம்பமூர்த்தி, திருவிடைமருதூர் வீருசாமி பிள்ளை, அரியக்குடி இராமானுஜ அய்யங்கார், வழுவூர் இராமய்யா பிள்ளை, மதுரை மணி அய்யர், முசிறி சுப்பிரமணிய அய்யர், சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை, பாபநாசம் சிவன், திருமதி கே.பி. சுந்தராம்பாள், பாலக்காடு மணி அய்யர், திரு கிருபானந்த வாரியார், செம்மங்குடி சீனிவாச அய்யர், திருமதி எம்.எஸ். சுப்புலெட்சுமி, மதுரை எஸ். சோமசுந்தரம், திரு பெரிய சாமித்தூரன், ஆகியோர்க்கு இசைப் பேரறிஞர் பட்டம் வழங்கியுள்ளது தமிழ் இசைச் சங்கம். இந்த ஆண்டு தொடங்க இருக்கும் இசை விழாவில் திருமதி டி.கே. பட்டம்மாள் இசைப்பேரறிஞர் என்ற சிறப்புப் பட்டத்தை அடைய இருக்கின்றார்.




கருநாடக மாநிலத்தில் நடைபெற்ற இசை மாநாட்டில் தமிழ் இசைச் சங்க ஆசிரியர்கள் பங்கு பெற்ற நிகழ்ச்சி

தமிழ் இசைச் சங்கத்தின் வெள்ளி விழா 1967-ல் நடைபெற்றபோது பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமை ஏற்றார்கள் என்பதும் மூதறிஞர் இராஜாஜி துவக்கி வைத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அது மட்டுமல்ல திரு கிருபானந்தவாரியர் அவர்களுக்கு அண்ணா அவர்கள் பொன்னாடை போர்த்து, 'இசைப்பேரறிஞர்' என்ற பட்டத்தையும் சூட்டினார்கள்.

இசைப் பேரறிஞர் பட்டம் பெறுவோர்க்கு 500 ரூபாய் பெறுமானமுள்ள தங்கப்பதக்கம் ஒன்றும் வெள்ளித்தட்டு ஒன்றும், நற்சான்றிதழ் ஒன்றும் வழங்கப்படுகின்றன.

1968-ஆம் ஆண்டு இசை விழாவை முதல்வர் கலைஞர் அவர்கள், பொதுப்பணி அமைச்சராக இருந்தபோது தொடங்கி வைத்தார்கள்.

தமிழ் இசைச் சங்க இசை விழாவில் நாதசுர நிகழ்ச்சிகளுக்குத் தனிச் சிறப்புக் கொடுக்கப்பட்டு வருகிறது. விழாவில் நடைபெறும் முப்பது கச்சேரிகளில் ஏறக்குறைய எட்டுக் கச்சேரிகள் நாயனக் கச்சேரி ஆகும். நாயனத்துக்கு இங்கே இவ்வளவு தனிச் சிறப்புக் கொடுப்பதற்குக் காரணம் என்ன தெரியுமா?

ஒன்று, நாதசுரம் தமிழ்க்கலை! இரண்டு, வெளிநாட்டிலுள்ள தமிழ் மக்கள் வானொலியின் வாயிலாகக் கேட்கப்படும் நாயன இசையை வழிபாட்டுக்குப் பயன்படுத்திக்கொள்ள முடிகிறது.

இசைவிழா துவங்கிய மறுநாளிலிருந்து நான்கு நாட்கள் காலை நேரங்களில் தேவாரப் பண் ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. கடந்த 25 ஆண்டுகளாக நடந்துவரும் இந்தப் பண் ஆராய்ச்சி, இசைத்துறையில் குறிப்பிடத் தகுந்த சாதனைகளை நிறைவேற்றுவதற்கு உதவி செய்து வருகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக அமைதிக் கலை அரங்கம் ஒன்று நடைபெறுகிறது. அமைதிக் கலையரங்கம் என்றால் என்னவென்று திகைக்கிறீர்கள் அல்லவா? ஒலிபெருக்கிக் கருவியில்லாமல் இளம் இசைக் கலைஞர்கள் அரங்கத்தில் இசை பாடுகின்ற நிகழ்ச்சிக்குத்தான் அமைதிக் கலை அரங்கம் என்று பெயர்.

இசைவிழாக் காலங்களில் பொதுவாக மாலை 6 மணிக்கு மேல் புகழ்பெற்ற இசைவாணர்களின் நிகழ்ச்சி நடைபெறும். அதற்கு முன்னதாக 4 மணி முதல் 6 மணி வரை இளம் பாடகர்கள் அரங்கிலே தங்கள் இசைப் புலமையைக் காண்பிக்கும் வண்ணம் அமைந்துள்ளது, அமைதிக் கலையரங்கம் நிகழ்ச்சி! பார்வையாளருக்குக் கட்டணம் கிடையாது. அழைப்பிதழ் மட்டும் அனுப்பப்படுகிறது. இந்த நிகழ்ச்சியின் மூலமாகப் பாடகரின் இயற்கையான குரலைக் கேட்க முடிகிறது. இளம் பாடகர்களை உற்சாகப்படுத்துவதற்கும் ஊக்குவிப்பதற்கும் இந்த நிகழ்ச்சி துணை செய்கின்றது.

இசைக் கருவிகளின் கண்காட்சி ஒன்று இங்கே உள்ளது. வீணை, மிருதங்கம், போன்ற இசைக் கருவிகள் நூற்றுக்கு மேல் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன.

இங்கே ஒரு கூடத்தில், தஞ்சை சின்னையா, தஞ்சை வடிவேல், மாயூரம் வேதநாயகம் பிள்ளை, காஞ்சிபுரம் நயினாப்பிள்ளை, திருப்பாம்புரம்

சுவாமிநாத பிள்ளை, பழனி சுப்பிரமணிய பிள்ளை, வீணை தனம்மாள், அனைவரும் ஏக காலத்தில் காட்சி தருகிறார்கள் —ஓவியங்களாக அமர்ந்து! ஆமாம்! புகழ்பெற்ற இசைக் கலைஞர்கள், பாடல் ஆசிரியர் ஆகியோரின் உருவப்படங்கள் ஒரு கூடத்தில் வைத்துப் பாது காக்கப்பட்டு வருகின்றன. தற்போது 26 இசைமேதைகளின் ஓவியங்கள் இங்கே இடம் பெற்றிருக்கின்றன. ஒவ்வோராண்டும் புதிய ஓவியங்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றன. இந்த ஓவியக் கண்காட்சியை உற்று நோக்குவோருக்கு ஓர் உண்மை புரியும்.





உயிர் வாழும் இசைக் கலைஞர்கள் எவரும் இங்கே ஓவியமாகக் காட்சி தருவதில்லை; வாழ்ந்து மறைந்த இசைவாணர்களின் ஓவியங்கள்தாம் இங்கே இடம் பெற்றிருக்கின்றன, என்ற உண்மைதான் அது! இந்தக் காட்சிக் கூடத்திற்குள் நுழைந்து அனைத்து ஓவியங்களையும் பார்த்தவுடன் நமக்கு மகிழ்ச்சி அலை மோதுகின்றது. என்றாலும் நமது கண்கள் ஏனோ ஏக்கம் அடைகின்றன. நமது இதயத்திடம் மௌன மொழியில் எதையோ தெரிவிக்கின்றன. மறு வினாடியில் நமக்குப் புரிந்து விடுகிறது. புரட்சிக் கவிஞர்-பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் ஓவியம் இந்த ஓவியக் காட்சிக் கூடத்தில் இடம் பெறவில்லையே என்ற ஏக்கத்தைத்தான் இதயம், கண்களின் வழியாகத் தெரிவிக்கின்றது!

இந்த இசைக் கல்லூரியில் ஏறக்குறைய 3,000 புத்தகங்கள் கொண்ட ஒரு நூலகம் உள்ளது. 1962-ஆம் ஆண்டில் திறக்கப்பட்ட இந்த நூலகத்தில் இசை சம்பந்தப்பட்ட புத்தகங்கள் மட்டும் ஆயிரத்திற்கு மேல் உள்ளன.

சென்ற ஆண்டு நடைபெற்ற ஒரு சுவையான நிகழ்ச்சியை இங்குக் குறிப்பிடுவது அவசியம். சென்னையில் உள்ள தமிழ் இசைச் சங்கத்தைப் போலவே பெங்களூரில் 'கர்நாடக கான கலா பரிஷத்' என்ற ஒரு நிறுவனம், கன்னட இசையை வளர்த்து வருகிறது. அந்த நிறுவனம் சென்ற ஆண்டு இசை மாநாடு ஒன்றினை ஏற்படுத்தியது. இந்த மாநாட்டில் தமிழ்நாடு, ஆந்திரம், டெல்லி ஆகிய மூன்று மாநிலங்களும் கலந்து கொண்டன. தமிழ்நாட்டின் சார்பில் தமிழ் இசைக் கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியர்கள் அங்கே சென்று தேவாரம், திருவாசகம், ஆகிய தமிழ் இசைப் பாடல்களைப் பாடிக் காண்பித்தார்கள். 'தேமதுரத் தமிழோசை' இசை மாநாட்டிற்கு வந்திருந்தவர் அனைவரையும் கவர்ந்தது. அந்த விழாவில் கலந்து கொண்ட அந்நாளைய மைசூர் மாநிலக் கல்வி அமைச்சர் திரு ஏ. ஆர். பத்ரிநாராயணா, ''இசைத் தமிழ் கேட்பதற்கு இனிமையாக இருக்கிறது. புதுமையாக இருக்கிறது — இசைவாணர்களுக்கு நன்றி'' எனக் குறிப்பிட்டார்.

வெளி மாநிலங்களுக்கும் சென்று வெற்றிக் கொடி நாட்டி வரும் அளவுக்குத் திறமை படைத்த இசை ஆசிரியர்கள் தொண்டாற்றி வரும் இந்தத் தமிழ் இசைக் கல்லூரியில் தமிழ் நாட்டவர் மட்டும்அல்ல, வெளிநாட்டைச் சேர்ந்தவர்களும் இசை கற்கிறார்கள். தென் ஆப்பிரிக்காவில் இருந்து வந்திருக்கும் சூரியகுமாரி என்ற மாணவி தமிழ் இசையை ஆர்வத்துடன் கற்று வருகின்றார். அது மட்டுமல்ல நான்காண்டுப் பாடத்தை மூன்று ஆண்டிற்குள்ளேயே கற்றுக் கொண்டு விட்டார். வீணை, வாய்ப்பாட்டு இரண்டிலும் தேர்ச்சி பெற்ற இந்தக் குமாரி, வேறொரு நாட்டியப் பள்ளிக்குச் சென்று நாட்டியமும் கற்றுக் கொண்டிருக்கிறார்.

இங்கே பயின்று வெளிவந்த பலர், இசை உலகத்திலும் திரையுலகத்திலும் புகழ் பெற்றுத் திகழ்கிறார்கள். உள்ளம் கவர இசைபாடும் இசைமணி சீர்காழி எஸ். கோவிந்தராசன் இந்தத் தமிழ் இசைக் கல்லூரியின் மாணவர்தான்!

கடந்த 6-10-1973 அன்று மயிலாப்பூரில் உள்ள சிருங்கேரி மடத்தில் ஒரு கிளைக் கல்லூரியை இந்த இசைக் கல்லூரி நிறுவியுள்ளது. இங்கே பயிற்சி காலை வேளையில் நடைபெற்று வருகிறது. வடசென்னையில் இருப்பவர்களுக்கு மட்டுமல்ல — தென் சென்னையில் இருப்பவர்களுக்கும் இப்போது ஒரு தமிழ் இசைக் கல்லூரி கிடைத்திருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரிய சேதியாகும்.

தமிழ் இசைச் சங்கம் இசை சம்பந்தமான சில நூல்களையும் வெளியிட்டுள்ளது. தண்டபாணி தேசிகர் அவர்கள் குறிப்புகள் (சுரம்) அமைத்துத் தந்துள்ள தேவார இசை நூலை வெளியிட்டுள்ளது.

தமிழ் இசையைத் தளராது வளர்த்து வரும் இசைக் கல்லூரி, புதிய திட்டம் ஒன்றை உருவாக்கிக்கொண்டிருக்கிறது. தனது சொந்தச் செலவில் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் இசை ஆசிரியர்களை அனுப்பி வைத்து, அங்குள்ள மாணவ, மாணவியருக்கு வாரத்துக்கு மூன்று நாள் இலவசமாகத் தேவாரம், திருவாசகம் ஆகிய தமிழ் இசைப் பாடல்களைக் கற்றுத் தருவது என்பதுதான் புதிய திட்டம்.

''தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்'' என்று நாவுக்கரசர் கூறியுள்ளதுபோல,— தமிழ் இசையை எந்நாளும் வளர்த்துவரும் தமிழ் இசைச் சங்கத்தின் திட்டங்கள் வெற்றி பெறுவது உறுதி! தமிழ் இசைக் கல்லூரி, மென்மேலும் புகழ் பெறுவது திண்ணம்! தமிழ் இசை, தமிழ்நாட்டு மக்களின் செவிகளை எந்நாளும் நிறைத்து வரும் என்பது ஐயமில்லாத உண்மை!

— கு.பி.

# உலகில் இரண்டு கிளிகள்

டி.என். சுகி சுப்பிரமணியன்

## 23. இணைந்த நெஞ்சங்கள்

மனித மனம் மிகவும் விசித்திரமானது. காரணம் குரங்குள்ளிருந்து இது பிறந்து வளர்ந்த பிறவி. எனவே எப்போதும் நேர் வழியைவிடக் கிளை வழி தாவுவதில் எவர் மனமும் பிரியங் கொள்ளும்.

வக்கீல் மணிவாசகன் பத்து நாளாக அன்புத் தந்தையாக அருமை விருந்தோம்பல் செய்தவராக மாறியிருந்தார். பாபுவும், முருகனும் இன்று உதகைக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கணவன்—மனைவி நடிப்புக்குத் திரை விழும் நாள்.

அவர்கள் தம் பெட்டி படுக்கைகளை ராதை சரிபார்த்து, குழந்தைகளுக்கு பட்சணம், பலகாரம், புதிய துணிமணிகள் அடங்கிய பெட்டியை நிரப்பிக் கொண்டிருக்கிறாள்.

''ஏய், ராதை! அந்தப் பயலுகள் புறப்பட்டான்களா! இல்லையா?''

கத்தினான்! ராதை அதிர்ந்து போய் ''பத்து நாள் நீங்கள் சாதுவாக இருந்தீர்களே! இன்னும் பத்து நிமிடம் சாதுவாக இருங்கள். இருவரும் போய் விடுவார்கள். தயவு செய்யுங்கள்!'' என்று வந்து மெதுவாகக் குரல் கொடுத்தாள்.

''பத்து நாளா! பத்து யுகமாக இருக்கிறது. முகத்திலே ஒரு பேச்சு; மூச்சிலே ஒரு பேச்சாக இருந்தேன். பொய்யும் போலியுமாக வாழ்ந்தேன். பத்து நாளாக நான் அன்பிலே மிதந்தேனா? அக்கினி ஆற்றில் நீந்தினேன்! எல்லாம் உனக்காக, ராதை!''

''இன்னம் ஐந்தே நிமிஷம் குளுமையாகச் சிரித்த முகத்தோடு பையன்களை உதகைக்கு அனுப்பி வையுங்கள்!''

''தொலையட்டும், சீக்கிரம்! எங்கே அந்தச் சனியன்கள்?''

கையால் சைகை செய்து ''பிளீஸ்... அத்தான் வாயை மூடிக் கொண்டிருங்கள்'' என்று கெஞ்சாத வண்ணம் கெஞ்சினாள்.

''டைவர்ஸ்—விவாக ரத்து — பாயிண்ட்ஸ்கள் —விவரங்கள் சேகரம் செய்துவிட்டாயா ?''

''பாதி சேகரித்து விட்டேன்!'' என்றவள், பாபுவின் பூட்சுக் காலடி ஓசை கேட்கவே ''முகத்தைச் சிரித்த மாதிரி வைத்துக் கொள்ளுங்கள். வழியனுப்பச் சொல்ல பாபு வருகிறான்'' என்று எச்சரிக்கை செய்தாள். மணிவாசகன் முகத்தை மாற்றி, குரலை மாற்றி குளுமையுடன் ''ஹலோ பாபு! நான் கோர்ட்டுக்குப் போகணும். உன் அம்மா காரில் ஏற்றி சென்ட்ரலில் கொண்டு வந்து விடுவாள். எங்கே உன் நண்பன் முருகன்?'' என்று கேட்டார்.

''அவனைக் கூப்பிட்டேன். அவன் எனது அறையில் நின்றபடி விம்மி விம்மி அழுகிறான்.''

''ஏன்?''

ராதை ''நான் போய்ப்பார்க்கிறேன்'' என்று போனாள். போகும் போது பாபுவையும் இழுத்துக் கொண்டு போனாள்.

டாக்டர், ''அந்தப் பையன் முருகன் அழுதபடி நிற்கிறான். நீங்கள் வந்து சமாதானம் செய்யுங்கள்'' என்று கெஞ்சுகிறாள்.

தனிமையில் கண்டதும் ''ஏய் காளி! பழிக்குப் பழி நீ வாங்குவாயா? நான் வாங்குவேன்! கோர்ட்டில் பார்க்கலாம். எனது வக்கீல் சன்னத்தைப் பறித்து விட உன்னால் முடியுமா?'' என்று சீறினான்.

''அது வேறு விஷயம். முருகனைச் சமாதானம் செய்து அனுப்புங்கள்.''

''உடம்பு வேண்டாம். கை வந்தால் போதும் என்பார்கள். நான் நடித்த நாடகம் முடிந்தது.''

அரைகுறை மனத்துடன் எழுந்து பாபுவின் அறைக்குள் போனால், முருகன் அழுது கொண்டிருக்கிறான். அவன் அழும்படி என்ன நடந்தது! எத்தனை பெரிய அன்புத் தத்துவங்களை ஒவ்வொரு காட்சியிலும் தாய் அன்பை உதிர்த்த அறிவின் உருவம் அழுகையின் உருவமாக இருப்பானேன்? தாம் ஏதாவது புண்படுத்தி விட்டோமோ என்று கவலைப் பட்டார். குரலில் குளுமை, எளிமை, பவ்வியம் யாவும் தேக்கிக் கொண்டார்.

''ஏண்டா முருகா! ஏன் அழுகிறாய்? உன்னை யாராவது திட்டினார்களா?''

இல்லையென்பதற்குத் தலையாட்டினான்.

ராதை ''உன் மனத்தில் இருப்பதைச் சொல். நாங்கள் நிவர்த்தி செய்கிறோம்'' என்று கெஞ்சினாள்.

பாபுவும் ''சொல்லுடா முருகா! ரெயிலுக்கு நேரம் ஆகிறது. யார் என்ன தப்புச் செய்தார்கள்?'' என்று நண்பனுடன் கண் கலங்கினான்.

நர்மதையும், மணிவாசகனும் சேர்ந்து அவன் அழுகைக்கு அவன் முகத்தைப் பிடித்துத் தாங்கியபடி அன்பொழுகக் காரணம் கேட்டார்கள்.

பாபு "டேய் எங்கம்மாவும் அப்பாவும் நல்லவங்கடா! நீ எது கேட்டாலும் வாங்கிக் கொடுப்பாங்க. கேளுடா முருகா" என்று சொன்னான்.

எல்லாரும் அவன் எதனை நினைத்து எதற்காக அழுகிறான் என்பதைக் கேட்டார்கள்!

"என்ன நினைச்சு நான் அழுகிறேன். பாபு எத்தனை பெரிய அதிர்ஷ்டசாலி! அவனிடம் நீங்கள் இருவரும் எவ்வளவு அன்பாக இருக்கிறீர்கள்? பாபு ... பாபு... பாபுன்னு உருகி உருகிக்கூப்பிடுகிறீர்கள்!"

ராதை "உன்னையும் முருகா! முருகா முருகான்னு உங்கம்மா அப்பா கூப்பிடத்தானே செய்தாங்க" என்று சமாதானம் செய்தாள்.

"இல்லேம்மா. என்னை அன்பாகக் கூப்பிடவும் ஆள் இல்லை அதிகாரம் செய்யவும் யாரும் இல்லை. எனக்கு யாரும் இல்லை. நான் அனாதை!"

"ஏன்டா! அதைப் போய் இப்போது நினைக்கிறாய்?" என்று கண்ணீரைத் துடைத்து விட்டான் பாபு.

"பாபு! உனக்கு இத்தனை அன்பு வெள்ளம் கிடைக்குது. எனக்கு எங்கம்மா யாரு? எங்கப்பா ஆருன்னே தெரியாது! எனக்கு எப்படியடா உன்னை மாதிரி அன்பும் ஆசையும் கிடைக்கும்?"

"முருகா! நடந்ததை மறந்திடு. ஊருக்குப் போ. பாபுவுக்கு என்னென்ன அனுப்பறமோ அத்தனையும் உனக்கு ஒரு செட் நாங்கள் அனுப்புகிறோம்" என்று சமாதானத்திற்கு இப்படி ஒரு குறுக்கு வழியைக் கையாண்டாள் நர்மதை.

"எனக்கா உங்களோட அன்பு தொடர்ந்துகிடைக்கும்? நான் அன்பு என்னது, பாசம் என்னது, இப்படித் தெரியாம வளர்ந்த பாலைவனத்துக் கள்ளிச் செடி."

"அழாமல் குறையும் சொல்லு. உனக்கு இரண்டொரு நாள் இருக்கணும்னு ஆசைப்பட்டா இங்கே இரு" என்று ராதை தைரியம் தந்தாள்.

"எனக்கு எங்கம்மாவும் அப்பாவும் கொடுத்ததண்டனையை நினைச்சு அழுகிறேன்."

"நீ என்ன குற்றம் செய்தே?" என்றார் வக்கீல்.

"நான் அனாதையாய்ப் பிறந்தது பெரிய குற்றம்! நான் பாலைவனத்துப் புல்."

"உனக்குத் துணை நான் இருக்கேன் முருகா" என்று பாபு உறுதியளித்தான்.

"உனக்கு அப்பாவும் அம்மாவும் இருக்கிறதினாலே தெம்பா இருக்கே! அழகா இருக்கே. அடிக்கடி வீட்டுக்கு கடிதம் எழுதறே, டிரங்கால் பேசறே! எனக்கு யாருடா இருக்கா?"

மனோதத்துவ ரீதியில் அவனைச் சமாதானம் செய்யப் பெரியவர்களான மூவரும் முனைந்தார்கள்.

"உன்னைப் பெத்தவங்க யாரு?"

"நான் அனாதையாய்த் திருவிழாவில் விடப்பட்டேன்!"

"எந்த ஊர்த் திருவிழாவில்?" என்றாள் நர்மதை.

"ஏழெட்டு வருடங்களுக்கு முன்னாலே உதகைக்குப் பக்கம் சின்னக் கிராமத்திலே இருந்து திருவிழா பார்க்க வந்தாங்களாம்! என்னைத் திருவிழாக் கூட்டத்திலே விட்டுட்டுப் போயிட்டாங்க, என்னைப் பெத்த படுபாவிங்க!"

நர்மதை, மணிவாசகனைப் பார்த்தாள்.

மணிவாசகன் வெட்கத்தோடு நர்மதையைப் பார்த்தான்.

ராதை "உன்னைத் தனியா விட்டு விட்டு பெத்தவங்க போனாங்க முருகா! அப்புறம் உன்னை யார் பார்த்தாங்களாம்?" என்று கேட்டாள்.

"நான் போலீஸ்காரங்க கையிலே அகப்பட்டேன்! அங்கிருந்து நடந்து ஆற்றங்கரை ஓரமா நின்னேன்! அப்போது இரண்டு பேர் வந்தாங்களாம். ஆற்றில விழ இருந்த என்னை அந்தத் தெய்வங்கள் காப்பாற்றிச்சாம். அவங்க எங்கே இருந்தாலும் நன்றாக இருக்க வேணும்."

முருகன் தன் பூர்வ கதையை ராதைக்குச் சொன்ன சமயம்--

மணிவாசகன் மனத்திலே மீண்டும் பழைய இளமை பூக்கிறது; பூரிக்கிறது.

குதிரைக்கார கோவிந்தன் வருகிறான்!

ஊட்டியின் குளுமை உடம்பெல்லாம் பரவுகிறது. பரவசம் செய்கிறது.

குறும்பும், குறுகுறுத்த விழியுமாக சண்டைக்குக் கொடி கட்டிய நர்மதையின் சவால் அவன் காதில் வந்து விழுகிறது.

நர்மதைக்கும் ஊட்டியில் நடந்த சம்பவங்கள் மனத்திரையில் ஓடிக் கொண்டிருந்தன.

"ஆண்கள் எல்லாருமே காரியக்காரர் வர்க்கம்."

"பெண்கள் பிடிவாதத்தின் மொத்த உருவம்."

## குழாய்த் தண்ணீரால் ஊர்தி ஓட்டலாம்

இத்தாலி நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானி எஸ்ரிகோ என்பவர், பெட்ரோலுக்குப் பதிலாகக் குழாய்த் தண்ணீரை ஊற்றி ஊர்தியோட்டும் புதியதொரு சாதனையைப் புரிந்துள்ளார்.

ஊர்தியில் பெட்ரோலுக்குப் பதில் ஊற்றப்படுகிற குழாய் நீர், ஹைட்ரஜன், ஆக்சிஜன் வாயுக்களாகப் பிரிக்கப்பட்டு ஊர்தி செலுத்தப் பயன்படுகிறது. இதற்காகப் புதிதாகப் பொருத்தப்படும் கருவியின் விலை ரூ. 7-00 ஆகிறது. விஞ்ஞானி எஸ்ரிகோ, இப்புதிய முறையில், 7 மைல் தொலைவுக்கு ஊர்தியை ஓட்டிச் சென்றார்.


"நீ கடவுளின் 'இனிசிய
லோடு' எங்கள்
குழந்தையாகவும் இரு!"
சாமி

''பெண்ணைக் கிள்ளுக் கீரை யாக நினைத்த காலம் மலையேறி விட்டது, மிஸ்டர் . . . ''

''எத்தனை படித்தாலும் ஆண்களிடம் அடங்கி நடக்க வேண்டியவள் பெண்!''

''ஆணுக்குப் பெண் அடிமை என்று எந்தச் சட்டத்திலும் எழுதி வைக்கவில்லை!''

''அது எழுதாச் சட்டம் அம்மணி!''

என்ற ஏச்சும் சண்டையும் அவர்கள் காதில் கண்டாமணி யாக ஓங்கி விழுந்து ஒலி எழுப் பின.

ஏட்டய்யா குழந்தையைத் தேடி வந்தது கற்பகத்தின் தாயன்பைக் கேட்டது.

''நீ டாக்டர்.''

''நீங்கள் வக்கீல்!..

''நாம் இருவருமே சமுதா யத்திற்கு நன்மை தர வேண்டி யவர்கள்.''—

இச் சொற்களும் குழந்தை யைப் பாதிரியாரிடம் ஒப்படைத்தோம் என்ற தகவலும் பசுமையாக அவர் கள் நினைவில் ஓடி வந்தன.

ஒரு கணத்தில் கணவனும் மனைவியும் காலம் என்னும் தத்துவத்தைக் கடந்து ஒரு விநாடிக்குள் பழைய வாழ்வை —சிரிப்பை—சண்டையை— காதலித்த சுகத்தை—அனுப வித்தபடியே நிற்கிறார்கள்!

அப்போது முருகன் ''என்னைக் காப்பாத்தின அவங்களை நான் கோடி கோடி காலம் கும்பிட ணும்... உன்னோட வந்ததாலே தாயன்பைத் தெரிந்து கொண் டேன். தந்தையின் அன்பை யும் கண்டேன்'' என்று நெஞ்சம் நெகிழ்ந்து சொன் ஞன் முருகன்.

கருங்கல் பாறையின் கண் கள் குளமாயின. போலியும் பொய்த் தன்மையான கௌர வமும் விட்டு விலகின. பண்பு பயனுக்குத் துடித்தது.

''ஏண்டா உங்கப்பா அழு கிறார்? பாபு!''

''உன்னைப் பிரியணுமே என்று நினைத்து அழுகிறார் முருகா!''

''சார் எனக்காகவா அழ றீங்க? அழாதிங்க சார். அழப் பிறந்தவன் நான் ஒருத் தனாகவே இருக்கட்டும்.''

''உனக்காக அழலையடா, முருகா. உன் அழுகையில் ஒரு உண்மை தெரிந்தது.''

நர்மதை, ''நீ உத்தமன் முருகா!'' என்றாள். அவளது அன்பு ஆணவத்திலிருந்து விடு பட்டு அறத்திற்குள் சங்க மிக்கத் துடித்தது.

ராதைக்குப் பழங் கதையின் உட்பொருள் தெரியாத கார ணத்தால் அவள் திகைத்து நின்றாள்.

குழந்தையைப் போல விக்கி அழுதார் மணிவாசகன். குழந் தையுள்ளமும் பெற்றார்.

''இத்தனை காலமும் அறிவுச் சூன்யத்தில் வாழ்ந்த எங்களை அழிந்து போகவொட்டாமல் காத்த மகான் நீ!'' — இது கணவன் பேச்சு.

''கணவனாக இருந்து குடும் பத்தைப் பார்க்கிறதும் தப்பு. மனைவியாக நின்று குடும்பத் தைப் பார்க்கிறதும் தப்பு. குழந்தையாக நின்று குடும் பத்தைப் பார் என்று எங்க ளுக்கு உபதேசம் செய்த ஞானி!'' — இது மனைவியின் கடமை வழிப் பேச்சு.

அழுத முருகன் அழுது பேசும் வக்கீலையும் டாக்டரை யும் பார்த்து அழுகையை நிறுத்தினான்.

''உன்னோட நண்பன் ஜி. முருகன் அழியவிருந்த குடும் பத்தைத் தடுத்து நிறுத்தினான்'' என்று தாய்மை சிறக்கப் பேசி னாள் நர்மதை.

''பிளவு பட இருந்த வாழ்வை நீ கூட்டி வைத்த புனிதன் நீ!'' என்றார் வக்கீல்.

''எங்கள் பாபுவுக்குத் துரோகம் செய்யவிருந்த எங்களைத் தடை செய்த விதி நீ!''

தான் என்ற அகந்தை விடு பட்டுத் தாங்கள் தங்களது குடும்பம் என்னும் நினைவில் ஒன்றினார்கள்.

ராதை ''அப்பாடா. நான் பிழைத்தேன்...'' என்று பெரு மூச்சு விட்டாள். பெரியவர் கள் பேசிய விவரம் குழந்தை களுக்குப் புரியவில்லை!

## உங்களுக்குப் புரிகிறதா?

கீழே உள்ள பெயர்கள் எவற்றைக் குறிக்கின்றன என்பதை உங்களால் ஊகிக்க முடிகிறதா?

குழியடிச்சான், கத்தூரி வாணன், கறுத்த கார், மணல்கார், கிரோலினா, தங்க மணி, பங்காருதிலகம், மங்கல மட்டை, மலைகுலுக்கி, ஆனைக் கொம்பன், இரங்கல் மீட்டான், சிறை மீட்டான், மொழிக் கருப்பன்.........

இவை என்னவென்று கண்டு பிடித்து விட்டீர்களா? இவை எல்லாம் நெல் வகை கள்! நெல்லில் 300 வகை கள் இருப்பதாகக் கூறுகின்ற னர்.

''இவங்க என்னபேசுறாங்கள் சித்தி?''

''பாபு, உங்கம்மாவுக்கும் அப்பாவுக்கும் ஒரு பந்தயம் நடந்ததுடா!''

''ஓட்டப் பந்தயமா? சித்தி?''

''வீட்டை விட்டு ஓட்டும் பந்தயம்!''

முருகன் ''அப்படின்னா என்ன சித்தி?'' என்று கேட் டான்.

மணிவாசகன் ''முருகா! நீ இனிமே அனாதை இல்லே!'' என்றான்.

நர்மதை ''நீ எங்கள் குழந்தை'' என்றாள்.

''நீ எனக்கு அண்ணன்!'' என்று பாபு, முருகனைக் கட்டிக் கொண்டான்.

''நான் எப்படியடா உனக்கு அண்ணன்?'' என் இனிசியல் ஜி. ஆச்சே!''

மணிவாசகன், ''முருகா! உனக்கு நீ அனாதை என்று தெரியும். எப்படி 'ஜி' என்று இனிசியல் வந்தது?'' என்றான்.

''என்னை அனாதையாக வளர்த்த பாதிரியார் பள்ளிக் கூடத்திலே கொண்டு போய்ச் சேர்த்தார்.''

''அப்போது வாத்தியார் என் இனிசியலை என்ன என்று

கேட்டார். உடனே பாதிரியார் இவன்கடவுளின் குழந்தை அதனாலே இவனுக்கு இனிசியல் 'ஜி'. இவனுக்கு ஜி. முருகன் என்று வைக்கச் சொன்னார். அன்று முதல் நான் 'ஜி. முருகன்.''

''நீ கடவுளின் இனிசியலோடு எங்கள் குழந்தையாகவும் இரு!''

மணிவாசகனும் நர்மதையும் சேர்ந்து சொன்னார்கள்.

அழுத எல்லாரும் அமைதியாக இருந்தார்கள்.

''அண்ணா . .''

''தம்பி! . .''

பாபுவும் முருகனும் ஒருவரை ஒருவர் கட்டிக் கொண்டார்கள்!

''நான் உங்கள் அப்பா''.

''நான் உங்கள் அம்மா''.

இரு குழந்தைகளுடனும் டாக்டர் நர்மதையும், வக்கீல் மணிவாசகனும் சேர்ந்து அணைத்து நின்றனர். சிரித்த படியே வீட்டிற்குள் வந்தனர்.

ஏதோ ஒரு பேப்பரை ராதை கிழித்துக் கொண்டிருந்தாள்.

''ராதைச் சித்தி, என்னத்தைக் கிழிக்கிறே?''

''நான் வக்கீலுக்குப் பெற்ற பட்டம்.''

அவள் சொன்னது பொய் என்பது நர்மதைக்கும் மணிவாசகனுக்கும் தெரியும்.

விவாக ரத்துக்காக நர்மதை கையெழுத்துப் போட்டு வைத்த வெறும் பேப்பரைக் கிழித்து எறிந்தாள்.

டெலிபோன் மணி அடித்தது.

''ஹலோ ... என்ன யார் வேண்டும்? வக்கீல் மணிவாசகன் வீடு தான்... அது என்ன லாரி கம்பெனியா? ஐயா இருக்கிறுங்க... எத்தனை மணிக்கு வரச் சொன்னுங்க... பத்து மணிக்குச் சாமான் எடுக்கவா.? இருங்க...'' என்றவள் மணிவாசகனைப் பார்த்தாள்.

''லாரி கம்பெனியின் உதவி தேவை இல்லை. கொடுத்த அட்வான்ஸ் பணத்தை அவர்களையே வைத்துக் கொள்ளச் சொல்.''

''அதை நீங்களே சொல்லுங்கள்!''

வக்கீல் சொல்லிக் கொண்டிருந்தார்.

முருகன் ''ரெயிலுக்கு நேரமாகிவிட்டதே அம்மா'' என்று டாக்டர் முகத்தைப் பார்த்தான்.

நர்மதை கணவன் முகத்தைப் பார்த்தாள்.

''ரெயில் போனால் போகட்டும். நம்முடைய காரில் எல்லாரும் உதகைக்குப் போகலாம்''.

காரில் போகும் ஆனந்தத்தை எண்ணி இரண்டு கிளிக் குஞ்சுகள் குதித்துத் துள்ளி ஆனந்தப்பட்டன.

**முற்றும்**


# சேலம் மத்திய கூட்டுறவு வங்கி, எண் : 151.

சேலம்-1. தொலைபேசி எண் : 2402

கிளைகள் : நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், சங்ககிரி, வேலூர், சேந்தமங்கலம், கொங்கணாபுரம், சிறப்பு அங்காடி, சேலம் கடைவீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்ப்பேட்டை, சேலம்-2, பெத்தநாயக்கன்பாளையம், மேட்டூர் டேம், நாமகிரிப்பேட்டை, ஏற்காடு, வாழப்பாடி, கொண்டலாம்பட்டி, மகுடஞ்சாவடி, எளம்பிள்ளை.

வட்டி விகித அட்டவணை 1-2-1971 முதல்

**கால் டெபாசிட்டுகள் :**

| | |
|---|---|
| ரூ. 5,000/-க்கும் அதற்கு மேலும் மேற்பட்ட தொகைக்கும் (முன் அறிவிப்பு இல்லாமல்) | 3¼% |
| ரூ. 10,000/-க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் (3 நாள் முன் அறிவிப்பின்பேரில்) | 3½% |

**சீசன் டெபாசிட்டுகள் :**

| | |
|---|---|
| ரூ. 1,000/-க்கும் அதற்கு மேலும் 15 நாட்களுக்கும் அதற்குமேல் 30 நாட்களுக்கும் | 4 % |
| 31 நாட்களுக்கும் அதற்குமேல் 90 நாட்களுக்கும் | 4½% |

**பிக்சட் டெபாசிட்டுகள் :**

ரூ. 50/-ம் அதற்கு மேற்பட்ட பிக்சட் டெபாசிட்டுகளுக்கு :

| | |
|---|---|
| 91 நாட்களுக்கும் அதற்குமேல் 6 மாதத்திற்குள் | 5½% |
| 6 மாதத்திற்கும் அதற்குமேல் 12 மாதத்திற்குள் | 6 % |
| 12 மாதத்திற்கும் அதற்குமேல் 24 மாதத்திற்குள் | 6¾% |
| 24 மாதத்திற்கும் அதற்குமேல் 36 மாதத்திற்குள் | 7¼% |
| 36 மாதத்திற்கும் அதற்குமேல் 60 மாதத்திற்குள் | 7½% |
| 5 வருடத்திற்கும் அதற்குமேல் 6 வருடத்திற்குள் | 7¾% |
| 6 வருடத்திற்கும் அதற்கு மேலும் | 8 % |

நடப்பு கணக்கு ½% சேமிப்பு கணக்கு 4½%

அறநிலையங்களுக்கு பிக்சட் டெபாசிட்டுகளின் பேரில் மேலே காணப்பட்ட வட்டி விகிதங்களுக்கு மேற்கொண்டு ½% கூடுதலாக கொடுக்கப்படும். ரூ. 5,000/-க்கு மேற்கொண்டு பிக்சட் டெபாசிட் போடுகிறவர்களுக்கு இலவச பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு.

பிக்சட் டெபாசிட்டுகளின் மீது மாதாந்திர வட்டி உண்டு.

ரெகரிங், பிராவிடெண்ட் டெபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்பு கொள்க.

எஸ். ஆறுமுகம், எம்.எல்ஏ., தலைவர். வை. இராமலிங்கம், செயலாளர். தி. இராஜமாணிக்கம், நிர்வாக அலுவலர்.

# தாவரங்களில் ஊடுருவி இருந்து தாக்கும் பூச்சிக் கொல்லிகள்



'ஆர்த்தீன்': இது நீரில் கரையக்கூடிய 70 சதம் திறனுள்ள தூள் வடிவத்தில் கிடைக்கிறது. பல்வகைத் தத்துப்பூச்சிகளையும், பேன்களையும் அழிக்கவல்லது.

'மீதமிடோபாஸ்': இது 'டாமரான்' என்ற பெயரில் 50 சதம் திறனுள்ள நீரில் கரையும் திரவ வடிவத்தில் கிடைக்கிறது. இதுவும் சாறு உறிஞ்சும் அசுவணி, தத்துப்பூச்சிகள், பேன் முதலியவற்றைக் கட்டுப்படுத்துகிறது. பயிர்களின் வளர்ச்சியையும் ஊக்குவிக்கிறது.

மேற்கூறிய மருந்துகள் தவிர 'பாக்சிம்', 'செஃபாஸ்' 'பார்மோதயான்', 'டமான்' போன்றவைகளும், பாஸ்வரம் கலந்த உட்கிரகிக்கப்படும் பூச்சிக்கொல்லி வகையைச் சார்ந்தவையாகும்.

'போரேட்': இது மிகவும் நச்சுத் தன்மை கொண்டது. இப்பொழுது 'திமட் 10' என்ற பெயரில் 10 சதம் குருணைகளாகக் கிடைக்கிறது. எக்டேருக்கு 1 முதல் 1.5 கிலோ மருந்துச் சத்து உள்ள அளவுக்குப் பருத்தியில் தோன்றும் உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த உதவுகிறது. சோளத்தில் குருத்து ஈயைக் கட்டுப்படுத்த சோளத்தை விதைக்கும் போது ஒரு மீட்டர் விதைச் சாலுக்கு 1.5 கிராம் 10 சதம் 'திமட்' குருணைகள் உபயோகிக்க வேண்டும். நெல்லைத் தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தவும் எக்டேருக்கு 1 கிலோ மருந்துச் சத்து அளவுக்கு இதைப் பயன்படுத்தலாம். இது பி.எச்.சி. மருந்துடன் கலக்கப்பட்டு 'பேடிகார்டு' என்ற குருணைகளாகவும் கிடைக்கின்றது.

'டைசல்போடான்': இந்த உட்கிரகிக்கப்படும் பூச்சிக்கொல்லியானது 'டைசிஸ்டான்', 'சால்வி ரெக்ஸ்' என்ற பெயர்களில் 5 சதம் குருணைகளாகக் கிடைக்கிறது. இது 1 அல்லது 1.5 கிலோ மருந்துச் சத்தளவில் பருத்தி, காய்கறிகள் போன்றவற்றில் தோன்றும் அசுவணி, தத்துப்பூச்சிகள், பேன், சிலந்தி போன்றவற்றை அழிக்கப் பயன்படுகிறது. சோளம், கம்புப் பயிர்களின் குருத்து ஈக்களை அழிக்கவும் இதைப் பயன்படுத்துகிறார்கள். எல்லா வகையான உறிஞ்சும் பூச்சிகளையும், பயிர்ச் சிலந்திகளையும், உடனே பூரணமாக அழித்து விடுகிறது. எலுமிச்சைச் சிலந்தி, ரோஜாவின் சிவப்புச் செதில் போன்றவற்றை அழிப்பதில் இது மிகவும் பயன்படுகிறது. வெண்டை, மிளகாய், கடுகு போன்ற செடிகளுக்குப் பயன்படுத்தலாம். சோளக் குருத்து ஈயைக் கட்டுப்படுத்த மீட்டர் விதைச் சாலுக்கு 1.5 கிராம் 10 சதம் குருணைகளைப் பயன்படுத்தல் நல்ல பலன் தருகிறது.

'ஆல்டிகார்ப்': 'டெமிக்' என்ற பெயரில் 10 சதம் குருணைகளாக இது கிடைக்கின்றது. மிகவும் நச்சுத் தன்மையுடையது இது. தண்ணீரில் எளிதாகக் கரையக் கூடியது. எனவே, உபயோகித்தவுடன் பெரும் பயன் அளிக்கிறது. பருத்திக்கு இது ஒரு அருமையான மருந்தாகும். எக்டேருக்கு 1—1.5 கிலோ மருந்துச் சத்தளவில் உபயோகித்தால் பூச்சிகளைக் கட்டுப்படுத்த பெரிதும் பயனளிக்கின்றது. தவிர இது 0.024 சதம் என்ற அளவில் பல்வேறு பயிர்களில் தோன்றும் உறிஞ்சும் பூச்சிகளைக் கொல்லப் பயன்படுகிறது.

'கார்போபியூரான்': இது 'பியூரான்' என்ற பெயரில் 75 சதம், 50 சதம் திறன்கொண்ட கரையும் தூளாகவும், 3 சதம், 5 சதம், 10 சதம் திறன் கொண்ட குருணைகளாகவும் கிடைக்கிறது. இதுவும் நீரில் கரையக் கூடியதாகும். இது நெல், கரும்பு, பருத்தி, புகையிலை போன்ற பயிர்களுக்குக் காப்பளிக்கப் பயன்படுகிறது. எக்டேருக்கு 1 அல்லது 1.5 கிலோ மருந்துச் சத்தளவில் உபயோகிக்கவேண்டும். இதை 6 சதவிகிதத்தில் விதையுடன் கலந்தால் சோளக் குருத்து ஈயை வியத்தகு முறையில் கட்டுப்படுத்தலாம்.

இவை தவிர 'ஜெக்ட்ரான்' 'செர்த்தோபக்ஸ்' போன்றவைகளும் 'கார்பமேட்' வகையைச் சேர்ந்த உட்கிரகிக்கப்படும் பூச்சிக்கொல்லி வகையைச் சார்ந்ததாகும்.

தங்கு நஞ்சு: உட்கிரகிக்கப்படும் பூச்சிக்கொல்லிகளை உபயோகித்தால் பயிர்களின் விளைபொருள்களில், குறிப்பாகக் குறுகிய காலக் காய்கறிப் பயிர்களில் அவைகளது நச்சுத் தன்மை ஓரளவு தங்கிவிடுகிறது. எனவே கவனக்குறைவாக ஊடுருவிப் பாயும் பூச்சிக்கொல்லிகளை உபயோகித்தால் அபாயத்தை விளைவிக்க இயலும். இதன் காரணமாக இவ்வகைப் பூச்சிக்கொல்லிகளை உணவுப் பயிர்களில் உபயோகிக்கும் முன்னர், பூச்சியல் துறை அல்லது வேளாண்மை அலுவலர்களிடம் அறிவுரை பெற வேண்டும்.

[தகவல்:—
தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை-3].

சென்ற இதழ்த் தொடர்ச்சி

# பருத்தியைத் தாக்கும் இலைப்புள்ளி நோய்கள்

**கோ**வைப் பகுதியில் புரட்டாசிப் பட்டத்தில் சுமார் 25,000 எக்டேரில் பருத்தி விதைக்கப்படுகிறது. பருத்திச் செடியில் தோன்றும் சில நோய்களைத் தடுக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். ஏனெனில், கடந்த ஓரிரண்டு ஆண்டுகளாக புரட்டாசி-ஐப்பசி மழைக்குப் பின் பருத்திப் பயிரில் பல்வேறு இலைப்புள்ளி நோய்கள் தோன்றி, அதனால் மகசூல் 20 முதல் 30 சதவிகிதம்வரை பாதிக்கப்படுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. பூச்சியினால் ஏற்படும் இழப்பைப் பூச்சி மருந்துகள் உபயோகிப்பதன் மூலம் தடுப்பதுபோல், பூசணங்களினால் ஏற்படும் நோய்களையும் தக்க தருணத்தில் தடுத்தால்தான், சீர்மிகு சாகுபடியினால் கிடைக்கும் அதிக விளைச்சல் முழுவதையும் பெற இயலும்.

பருத்தி விதைத்த இரண்டு மாதங்களுக்குப்பின் தோன்றுவது 'ஆல்டர்நேரியா' என்னும் புள்ளி நோய். இப்புள்ளிகள் பழுப்பு நிறமுள்ளதும், ஒரு சென்டிமீட்டர் அகலமுள்ளதும், கருநிற வளையங்கள் பலவற்றை உள்ளடக்கியதுமாகக் காணப்படும்.

அடுத்து, ஓரிரு வாரங்களில் காணப்படுவது 'செர்க்கோஸ்போரா' புள்ளிநோய். இப்புள்ளிகள் அரை சென்டிமீட்டர் அகலமாயும், சாம்பல் நிறமையமும், கருஞ்சிவப்பு நிறக்கரையும் உள்ள வட்ட வடிவச் சிறு புள்ளிகளாகும்.

விதைத்து மூன்று மாதங்களுக்கு மேல், இறுதியில் தோன்றுவது 'ரஸ்ட்' எனப்படும் இலைத்துரு நோய். இலைகளின் அடியில் குண்டூசித் தலை அளவுள்ள சின்னஞ்சிறு கொப்புளங்கள் தோன்றி, அதனால் இலை மேற்புறம் காய்ந்து சிறு புள்ளிகள் தோன்றும்.

மேற்கூறிய மூன்று வித புள்ளிகள் இலைகளில் ஏராளமாய்த் தோன்றுவதால் இலைகள் கருகி, பெருமளவில் இலைகள் உதிர்ந்துவிடும். இதனால் பூ பூப்பதும், காய் பிடிப்பதும் பாதிக்கப்பட்டு மகசூல் 30 சதம் வரை குறையலாம். மழை அதிகமிருந்தால் இந்த நோய்கள் வேகமாகப் பரவி, இழப்பும் அதிகமாகும்.

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தாவர நோயியல் துறையிலும், தாவர இயல் துறை—பருத்திப் பிரிவிலும் செயல்படும் அகில இந்திய ஒருங்கிணைந்த பருத்தி ஆராய்ச்சித் திட்டத்திலும் இந்த நோய்களைத் தடுக்க, ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு மேற்கொண்டுள்ள ஆராய்ச்சிகளின் முடிவுப்படி, 'ஆல்டர் நேரியா' 'செர்க்காஸ் போரோ' புள்ளிகள் மற்றும் இலைத்துரு ஆகிய நோய்களை 'தாமிர ஆக்ஸிகுளோரைடு' என்னும் தாமிரக் கலவை மருந்துகளில் ஒன்றினாலோ, அல்லது 'ஆரியோ ஃபங்கின் சோல்' என்னும் எதிர் உயிர் மருந்தினாலோ (ஆண்டிபயாடிக்) தடுத்துவிடலாம்.

பருத்தி விதைத்து 6 வாரங்களுக்குப் பிறகு, முதல் மருந்து தெளிப்பு செய்ய வேண்டும். அதன்பின், மூன்று வாரங்கள் இடைவெளியில் ஐந்து தடவைகள் மருந்து தெளிக்க வேண்டும். அதாவது விதைத்து 6, 9, 12, 15, 18-வது வாரங்களில் மருந்து தெளிக்க வேண்டும். தாமிர ஆக்ஸிகுளோரைடு என்னும் தாமிரக் கலவை மருந்து 'பைட்டலான்', 'புளூகாப்பர்', 'பிளைடாக்ஸ்', 'காப்பர் சான்டோஸ்', 'ஷெல் காப்பர்', 'குப்ரமார்' என்னும் பெயர்களில் விற்பனை செய்யப்படுகிறது. விசைத் தெளிப்பான்களை உபயோகித்தால் இம்மருந்தை ஒரு தடவை தெளிக்க ஏக்கருக்கு 1 கிலோ முதல் 2 கிலோ வரை மருந்து தேவைப்படும். கையால் இயக்கப்படும் தெளிப்பான் மூலம் உபயோகித்தால் 1 கிலோ மருந்தை 400 லிட்டர் தண்ணீரில் கலக்க வேண்டும். தாமிர ஆக்ஸிகுளோரைடு' மருந்துடன் பூச்சி நாசினிகளான, 'மிதைல் பாரதியான்' 'என்டிரின்', 'டிரைதியான்' 'தியோடான்', 'பாஸ்பமிடான்' போன்ற திரவங்களுடன் கலந்தும் உபயோகிக்கலாம்.

'ஆரியோஃபங்கின்-சோல்' என்னும் மருந்தை இந்திய அரசுக்குச் சொந்தமான 'இந்துஸ்தான் ஆண்டிபயாடிக்ஸ் லிமிடெட், பிம்ப்ரி, பூனா-18, மகாராஷ்டிர மாநிலம் என்னும் முகவரியிலிருந்து நேரிடையாகத் தருவித்துக் கொள்ளலாம். 'ஆரியோஃபங்கின்-சோல்' ஒரு தடவை தெளிப்பதற்கு ஏக்கருக்கு 75 முதல் 100 கிராம் வரை. தேவைப்படும். கையால் இயக்கப்படும் தெளிப்பான்களால் ஒரு கிராம் மருந்தை 6 லிட்டர் நீரில் கலக்க வேண்டும். இந்த ஆராய்ச்சி முடிவுகளை மேலும் உறுதிப்படுத்த இவ்வித ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

பூசணக் கொல்லிகள் உபயோகிக்கப்படும் பொழுது பூச்சியொழிப்புக்கான மருந்துகளும் தவறாது பயன்படுத்தப்பட வேண்டும். மேற்சொன்ன 'தாமிர ஆக்ஸிகுளோரைடு ' அல்லது 'ஆரியோஃபங்கின்-சோல்' உபயோகித்ததில், தமிழ்நாடு பல்கலைக் கழக வயல்களில் பருத்தி 20 முதல் 25 சதவீதம் அதிகரித்து, எக்டேருக்கு ரூபாய் 700 முதல் 800 வரை அதிக வருவாய் கிடைத்துள்ளது. இந்தத் தடுப்பு முறைகளைக் கையாளுவதால் 'ஆல்டர்நேரியா' புள்ளி, 'செர்க்காஸ்போரா' புள்ளி மற்றும் இலைத்துரு நோய்கள் தடுக்கப்படுவதோடு, பருத்திச் செடிகளில் தோன்றும் 'பாக்டீரியல் கருகல்' என்னும் நோயும், 'ஆந்திரக்நோஸ்' என்னும் நோயும், வேறு நோய்க் காரணங்களால் ஏற்படும் காயழுகலும் கட்டுப்படுத்தப்படுகிறது. எனவே, பருத்தி வேளாண்மையில் சிறந்து விளங்கும் கோவைப் பகுதி உழவர் பெருமக்கள் பயிர் நோயொழிப்பிலும் தன்னிகரற்று விளங்க வேண்டுவதோடு, நடப்புப் பட்டத்தில் பருத்தியின் இலை நோய்களைத் தவறாமல் தடுக்க உடன் செயலாற்றும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**தகவல்: தாவரநோயியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம். கோவை-3.**



தமிழ் நாட்டில் "சிட்கோ"வின் பெயர்
அனைவரும் அறிந்ததே. சிறு தொழில்களுக்கு
"சிட்கோ" அளித்துள்ள உதவிகள் பல.

**மூலப்பொருட்களை வழங்குதல்**
**தொழிற்கூடங்களை அமைத்தல்போன்ற**
தொண்டுகள் பல புரிந்து வருகிறது, சிட்கோ.

அம்பத்தூரில் நான்கு திங்கட்களுக்குள்
17 தொழிற்கூடங்களை சிட்கோ கட்டி முடித்துள்ளது.
இத் தொழிற்கூடங்கள் "உடமை உடனே, தொகை பிறகே"
என்ற தவணை முறைத் திட்டத்தின்படி உருவாக்கப்பட்டுள்ளன.

ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள இயந்திரங்களை சிட்கோ இதுகாறும்
தவணை முறையில் அளித்துள்ளது.

**மகத்தான புதிய கடன் உதவித் திட்டம் ;**

கீழ்க்கண்டவற்றுக்கு கடன்கள் வழங்கப்படும்.

அ) தொழிற்கூடங்களைக் கட்ட
ஆ) இயந்திரங்களை வாங்க
இ) நடைமுறைத் தேவைக்காக கடன்களைப் பெற.

தனி நிறுவனம் ஒன்று ஒரு இலட்சம் ரூபாய் வரையில்
கடன் வாங்க வாய்ப்பு உண்டு.
மற்ற விவரங்களை எம்மிடம் அறியவும்:

கிளைகள் : உதவி வளர்ச்சி அலுவலர்,
சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம்,
வேலூர், கோவை, திருச்சி, மதுரை,
தர்மபுரி, திருநெல்வேலி
மாவட்ட தொழில் வணிகத்துறை உதவி
இயக்குநர்களும் சிட்கோவின்
திட்டங்களைப் பற்றிய விவரங்களை
அளிப்பார்கள்.

**சிட்கோவின் உதவி பெறுங்கள்!**
**தொழில் நிறுவி வளமடையுங்கள்!**

## தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம்

*(தமிழ்நாடு அரசு நிறுவனம்)*

**கண்ணம்மைக் கட்டிடம்,**
**122 அண்ணா சாலை, சென்னை-6.**

# கேளுங்கள் கொடுக்கப்படும்

வினா : கரும்பில் தோகையை அடிக்கடி உரிக்க வேண்டும் என்று கேள்விப் பட்டேன். இது அவசியமா?

—வி. ரெங்கசாமி,
மதுராந்தகம்,
செங்கற்பட்டு மாவட்டம்

விடை : கரும்பில் உள்ள தோகையை 4-வது மாதத்தில் ஒரு தடவையும், பிறகு 6-வது மாதத்தில் ஒரு தடவையும் ஆக இரு முறை உரித்து நீக்குவது அவசியம் ஆகும். அடிக்கடி கரும்புத் தோகையை உரிக்க வேண்டியது அவசியமில்லை. இவ்வாறு தோகையை நீக்குவதால் கரும்பு வரிசைகளின் இடையே நல்ல காற்றோட்டமும், சூரிய வெளிச்சமும் ஏற்பட வாய்ப்பு ஏற்படுகிறது. இதனால் கரும்புகள் நன்கு வளர்ச்சி அடையும். மேலும் கரும்புத் தோகைகளின் அடிப்பாகத்தில் மறைந்து வாழும் மாவுப் பூச்சி, அரக்குப் பூச்சி ஆகியவைகளையும் ஓரளவிற்குக் கட்டுப்படுத்த இயலும்.

• • •

வினா : டி. எம். வி. 2 ரக எள்ளை ஜூன் மாதத்தில் விதைக்கலாமா?

—எஸ். தனபால்,
புதுப்பாளையம்,
கடலூர் அஞ்சல்,
தென் ஆர்க்காடு மாவட்டம்.

விடை : டி. எம். வி. 2 ரக எள் குளிர் காலத்தில் சாகுபடி செய்வதற்கே ஏற்றது. இந்த ரகத்தை நவம்பர், டிசம்பர், மாதங்களில் விதைக்க வேண்டும். சூரிய ஒளி கிடைக்கும் கால அளவிற்கு ஏற்றவாறு எள் பயிரின் வளர்ச்சியும், மகசூலும் வேறுபடும். இவை பருவத்திற்குப் பருவம் மாறுபடக் கூடும். ஆகையால்குளிர் காலத்திற்கு ஏற்ற டி.எம்.வி. 2 ரக எள்ளை நவம்பர், டிசம்பர் தவிர வேறு மாதங்களில் விதைத்தால் மகசூல் மிகவும் குறையும்.





வினா : மரவள்ளிக் கிழங்கு நடுவதற்குக் குச்சி எடுப்பதற்கான செடியின் வயது என்ன? குச்சியின் கணுக்கள் மேல் நோக்கி இருக்குமாறு நடுவதா? கீழ்நோக்கி நடுவதா? எவ்வளவு அங்குல ஆழம் நட வேண்டும்? மர வள்ளி அறுவடைக்குத் தயார் என்று எப்படி அறியலாம்?

—எல். கமலம்,
அமைப்பாளர்,
பெண்கள் விவாதக் குழு
இடிகரை,
கோவை மாவட்டம்.

விடை : மரவள்ளிக் கிழங்கு நடுவதற்கான கரணைகள் எடுப்பதற்கு, 9 அல்லது 10 மாத வயதுடைய செடிகள் சிறந்தவை. கரணையில் கணுக்கள் மேல் நோக்கி இருக்குமாறு நட வேண்டும். கரணைகளை 2 முதல் 3 அங்குல ஆழத்தில் நடுவது சிறந்தது.

மரவள்ளிச்செடிகளில் உள்ள இலைகள் மஞ்சள் நிறமடைந்து வாடி உதிர்தல், செடியைச் சுற்றியுள்ள மண்ணில் இலேசான வெடிப்புகள் தோன்றுதல் ஆகியவை மர வள்ளிச் செடிகள் அறுவடைக்குத் தயார் என்பதைப் புலப்படுத்துகின்றன.

வினா : பெல்லாரி வெங்காயம் ஒரு ஏக்கர் பயிரிட எவ்வளவு விதை தேவைப்படும்? எவ்வளவு நிலத்தில் நாற்றுவிட வேண்டும்? எத்தனை நாளில் நாற்றைப் பறித்து நடவேண்டும்?

—கு. முனுசாமி,
அரக்கோணம்,
வட ஆர்க்காடு மாவட்டம்.

விடை : ஒரு ஏக்கர் பெல்லாரி வெங்காயம் பயிரிட 4 கிலோ விதையை 4 முதல் 5 சென்ட் பரப்புள்ள நாற்றங்காலில் விதைக்க வேண்டும். நாற்றங்காலில் மேட்டுப்பாங்கான பாத்திகள் அமைத்து நாற்றுவிடுதல் சிறந்தது. 6 வார வயதில் நாற்றைப் பறித்து நட வேண்டும்.

வினா : நான் ஜனவரி மாதத்தில் கேழ்வரகு பயிரிட விரும்புகிறேன். எந்த ரகத்தைப்பயிரிடலாம்? எவ்வளவு விதை, உரம், தேவை என்பதைத் தெரிவிக்கவும்.

—மு. நல்லப்பன்,
பெரம்பலூர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

விடை : ஜனவரி மாதத்தில் இறைவையாகப் பயிரிட கோ. 7 ரகக் கேழ்வரகு விதைப்பதே சிறந்தது. ஏனெனில், இது 100 நாட்களில், ஏக்கருக்கு 1,500 கிலோ வரை மகசூல் தர வல்லது. இந்த ரகமே, தற்பொழுதுள்ள கேழ்வரகு ரகங்களில் அதிக மகசூல் தரக் கூடியதாக உள்ளது.

ஒரு ஏக்கரில் கோ—7 ரக கேழ்வரகு பயிரிட வேண்டுமானால், 1.5 கிலோ விதையை 3 சென்ட் நாற்றங்காலில் விதைக்க வேண்டும். 21 நாட்களில் நாற்றைப் பறித்து நடவு செய்யலாம்.

கோ. 7 கேழ்வரகு பயிரிட ஏக்கருக்கு 20 வண்டி (10 டன்) தொழு எரு அல்லது கலவை எரு (கம்போஸ்ட்) இட்டு நன்கு உழுதுவிடவேண்டும். கடைசி உழவில் ஏக்கருக்கு 18 கிலோ தழைச் சத்து, 18 கிலோ மணிச் சத்து, 18கிலோ சாம்பல் சத்து இட வேண்டும். இந்த அளவில் சத்து அளிக்க, 40 கிலோ டை-அமோனியம் பாஸ்பேட், 25 கிலோ யூரியா, 35 கிலோ மூரியேட் ஆஃப் பொட்டாஷ் ஆகியவைகளை இடுவது மிகவும் சிக்கனமானதாகும். டை-அமோனியம் பாஸ்பேட் கிடைக்காவிட்டால் 125 கிலோ 14 : 14 : 14 அல்லது 15 : 15 : 15 'காம்ப்ளெக்ஸ்' அல்லது 105 கிலோ 17 : 17 : 17 'காம்ப்ளெக்ஸ்' உரமிடலாம்.

நடவு செய்த 3 வாரங்கள் கழித்து ஏக்கருக்கு மேலுரமாக 18 கிலோ தழைச் சத்து அளிக்க வேண்டும். இந்த அளவில் சத்து அளிக்க 40 கிலோ யூரியா அல்லது 90 கிலோ அமோனியம் சல்பேட்டு உரத்தை மேலுரமாக இட வேண்டும்.

கோ. 7 ரக கேழ்வரகுவிதைகளை உங்கள் ஊராட்சி ஒன்றிய வேளாண்மைக் கிடங்கிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.








வினா : கோ. 419 ரகக் கரும்பை விட, கோ. 658 ரகக் கரும்பு எவ்வளவு சதம் அதிக சர்க்கரைச் சத்துக் கொண்டது?

—ஆ. தேவநாதன்,
குளித்தலை,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

விடை : கே. 419 ரகக் கரும்பைவிட, கோ. 658 ரகக் கரும்பில் 2 சதம் அளவுக்கு அதிக சர்க்கரை கிடைக்கும். கோ. 419 ரகத்தில் 11 சதமும், கோ. 658 ரகத்தில் 13 சதமும் சர்க்கரை உள்ளது.

* * *

வினா : கரும்பு சாகுபடி செய்யப்படும் நிலத்தில் ஏராளமான களைகள் தோன்றுகின்றன. அவைகளை வெட்டி ஒழிக்க வேண்டுமானால் அதிக செலவு ஆகிறது. அடுத்த ஆண்டில் கரும்பு பயிரிடும் நிலத்தில் களைக் கொல்லி தெளிக்க முடிவு செய்துள்ளோம். எந்த களைக் கொல்லியை எப்படித் தெளிப்பது என்பதைத் தெரிவிக்கவும்.

—க. வீரய்யா,
சோழவந்தான்,
மதுரை மாவட்டம்.

விடை : கரும்பு வயலில் தோன்றும் களைகளை அழிக்க கரும்புப் பயிர் முளைக்கும் முன்பாக '2·4-டி' அல்லது 'டையூரான்' என்ற களைக் கொல்லிகளை ஏக்கருக்கு 2 கிலோ வீதம் அல்லது 'அன்சார்' என்ற களைக் கொல்லியை ஏக்கருக்கு 2 லிட்டர் வீதம் 225 லிட்டர் தண்ணீரில்கலந்து தெளிக்க வேண்டும்.

**வினா:** *1-11-73* தேதிய 'தமிழரசு' இதழ் கண்டு வியப்புற்றேன். கோழி வளர்ப்பின் மூலம் இவ்வளவு பயன்கள் உண்டு என்பது தெரியாமல் இதுவரை இருந்தோமே என, என்மீதே எனக்குக் கோபமும் வந்தது! இனி நானும் கோழிப் பண்ணை அமைக்க முடிவு செய்துள்ளேன். என்னை இப்பணியில் ஈடுபடச் செய்த 'தமிழரசு' இதழுக்கு என் நன்றி.

நான் நெல்லை மாவட்டம் புதூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்தவன். புதூர் ஊராட்சி ஒன்றிய விதைப் பண்ணையில் சூரியகாந்தி விதைகள் வாங்கி விதைத்துள்ளேன். ஆனால், அவை, சரிவர முளைக்காமல் அங்கொன்றும் இங்கொன்றுமாக முளைத்துள்ளன. இதே போன்றுதான், வேறு சிலருக்கும் என் கிராமத்தில் சூரியகாந்தி விதைகள் முளைத்துள்ளன. இதற்குக் காரணம் யாது? சூரியகாந்தி விதைகள் முளைக்காமைக்குக் காரணம் எதுவெனத் தெரிவித்தால் நல்லது என வேண்டுகின்றேன்.

—பா. சங்கரக்குமாரசாமி, வீரப்பட்டி, முத்தாலாபுரம் (அஞ்சல்), விளாத்திகுளம் வட்டம், நெல்லை மாவட்டம்.



**விடை:** சூரியகாந்தி விதைகள் பின்கண்ட காரணங்களால் முளைக்காமல் இருக்கக்கூடும்.

*(1)* நன்கு முற்றாத விதைகள்.

*(2)* விதைக்கும் நிலத்தில் போதிய ஈரம் இல்லாதிருப்பது.

தாங்கள் வாங்கிய சூரியகாந்தி விதைகள் நன்கு முதிர்ந்து விளையாமல் சாவியான விதைகளாக இருந்திருக்கக்கூடும். எப்பொழுதும் முளைப்புச் சோதனை செய்து பார்த்த பிறகு, விதைகளை வாங்குவதே சிறந்தது. சூரியகாந்தி, பூ பூத்ததிலிருந்து அறுவடை வரை பெரும் மழை இருந்திருக்குமானால், அப்போது உருவாகிய விதைகள் சாவியாக ஆகிவிடுவதுடன், முளைப்புத்திறன் குறைந்ததாகவும் ஆகிவிடுகின்றன. இத்தகைய விதைகளை விதைத்திருப்பின் சரியாக முளைத்திருக்காது.

போதிய ஈரம் இல்லாத நிலத்தில் சூரியகாந்தி விதைகள் நன்கு முளைக்கா. சூரியகாந்தி விதைகளின் மேல்தோல் கெட்டியாக அமைந்துள்ளதால், போதிய ஈரம் இல்லாவிட்டால் சூரியகாந்தி விதைகள் சரியாக முளைக்காது. இதற்காகவே, சூரியகாந்தி விதைகளை விதைப்பதற்கு முன்இரவு ஈரமண்ணுடன் கலந்து வைத்திருந்து விதைக்கும்படி பரிந்துரைக்கப்படுகிறது. இவ்வாறு செய்தால் விதைகள் நன்கு ஊறி, விதைத்தவுடன்-நிலத்தில் போதிய ஈரம் இல்லாவிட்டாலும்-முளைத்துவிடும்.

அதிக ஈரம் நிலத்தில் இருந்தாலும், விதைகள் அழுகி முளைப்புக் குறைந்துவிடும்.

சென்ற ஆண்டு சூரியகாந்தி விதைத்த நிலத்தில் இந்த ஆண்டும் சூரியகாந்தி விதைத்தால், முளைப்புத்திறன் குறைந்திருக்கும் என்று தாங்கள் கருதினால் அது தவறு!

எனவே, நல்ல தரமான முளைப்புத்திறன் கொண்ட சூரியகாந்தி விதைகளைப் போதிய ஈரம் உள்ள நிலத்தில் விதைப்பதே சிறந்தது.



**வினா:** வேர்க்கடலைச் செடியில் 'டிக்கா' நோய் வருவது எதனால்? அதைப்போக்க வழி என்ன? விவரமாகக் கூறவும்.

—சிவகிரி இரா. மீனாட்சி சுந்தரம்.

**விடை:** ''டிக்கா'' இலைப்புள்ளி நோய் ஒருவகைப் பூசணத்தால் ஏற்படுகிறது. இந்நோய் நிலக்கடலைச் செடிகளில், விதைத்த ஒருமாத காலத்திற்குப் பிறகு தோன்றக்கூடும். இந்த நோய் தோன்றியவுடன் இலைகளில் வட்டமான சிவப்புக் கலந்த கரும்புள்ளிகள் காணப்படும். நோய் பரவப்பரவ, புள்ளிகளின் எண்ணிக்கை அதிகமாகி, இலைகள் முழுவதையும் பாதிக்கிறது. அதன் பின் இலைகள் வாடி உதிர்ந்துவிடும்.

''டிக்கா'' இலைப்புள்ளி நோய் தாக்கினால், நிலக்கடலைச் செடிகளின் வளர்ச்சி குன்றிவிடும். இந்நோய் கடுமையாகத் தாக்கினால் நிலக்கடலைச் செடியின் கொடிகளும், விழுதுகளும் (காம்பு) பாதிக்கப்படும். இதனால் மகசூல் பெருமளவில் குறைந்துவிடும்!

இந்த நோயைத் தடுக்க நிலக்கடலை விதைத்த 5-வது வாரத்தில், ஏதேனும் ஒரு தாமிரப் பூசணக் கொல்லியில் ஒரு, கிலோவை, *400* லிட்டர் தண்ணீரில் கரைத்துத் தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். முதல்முறை மருந்து தெளித்த *15* நாட்கள் கழித்து மறுமுறையும் மருந்து தெளித்தல் சிறந்தது. கந்தகத்தூளை ஏக்கருக்கு *10* கிலோ வீதம் தூவியும் இந்நோயைக் கட்டுப்படுத்தலாம்.



**வினா:** எம்.சி.யு. 5 பருத்தியின் முழுவிவரங்கள் அடங்கிய கட்டுக்கோப்பு சாகுபடி முறையை தங்கள் இதழில் வெளியிட வேண்டுகின்றோம்.

—வேளாண்மை உதவியாளர்கள், தீவிர பருத்திச் சாகுபடித் திட்டம், சூலூர், கோவை மாவட்டம்.

**விடை:** 'எம்.சி.யு. 5' பருத்தி பயிரிடுவது பற்றிய ஒருமித்த செய் நேர்த்தி முறைகள் *1-9-73* தேதிய 'தமிழரசு' இதழில், *31,32,33,35,36* பக்கங்களில் விளக்கமாக தெரிவிக்கப்பட்டுள்ளன. எனவே, அந்த இதழைத் தயவு செய்து படித்து, அறிந்து கொள்ளும் படிக்கேட்டுக் கொள்கின்றோம்.



**வினா:** நான் புகுமுக வகுப்பு (பி.யு.சி.) படித்துப் பாஸ் செய்துள்ளேன். தற்போது நான் வீட்டில்தான் இருக்கின்றேன். எனவே, நான் 'கிராம முன்சீப்' தேர்வு எழுதலாம் என்று இருக்கின்றேன். அதற்குரிய வழிமுறைகள் யாவை என்றும், யாரிடம் சென்று கேட்பது என்றும், தேர்வு எழுதுவது எந்த மாதம் என்றும் அதற்குரிய விவரங்களையும் ''தமிழரசு'' இதழில் வெளியிடும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

—வீ. தங்கவேலு, சேர்குடி (அஞ்சல்), முசிறி வட்டம், திருச்சி மாவட்டம்.

**விடை:** 'கிராம முன்சீப்' தேர்வு எழுதுவதற்குரிய பயிற்சி அளிக்கும் தனியார் பயிற்சி நிலையங்கள் சில திருச்சி நகரில் உள்ளன. ஆனால் அவைகளின் சரியான முகவரிகள் எங்களுக்குக் கிடைக்கவில்லை. தாங்கள் திருச்சியில் உள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திற்குச் சென்று இதுபற்றி விசாரித்து அறிந்து கொள்வதே மேல்! 'கிராம முன்சீப்' தேர்வு ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது. அது எந்த மாதத்தில் நடைபெறுகிறது என்பதைத் தங்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலேயே அறிந்து கொள்ள முடியும். முசிறியில் உள்ள வட்ட ஆட்சியர் (தாசில்தார்) அலுவலகத்தில் கூட இதுபற்றிய விவரங்களை அறிந்து கொள்ள முடியும். எனவே, அங்குச் சென்று விசாரித்து அறிந்து கொள்ளுங்கள்.




**வினா:** தமிழ்நாடு அரசு இரண்டாவது சம்பளக் கமிஷன் உத்தரவுப்படி நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு (ஒரு நபர் கமிஷன் சிபாரிசுப்படி) அடிப்படைச் சம்பளம் ரூபாய் 250 என்று சொல்லப்படுகிறது. மேற்படி சம்பளத்திற்கு 'வெயிட்டேஜ்' உண்டா? அல்லது இல்லையா என்பதைத் 'தமிழரசு' மூலம் தெரிவிக்கவும்.

—ஏ.எஸ். வேலுசாமி, கலங்கல் அஞ்சல், சூலூர் வழி, கோவை மாவட்டம்.

**விடை:** இரண்டாவது சம்பளக் குழுவின் பரிந்துரைகளில் கண்ட குறைபாடுகளை நீக்குவதற்காக நியமிக்கப்பட்ட தனிநபர் குழுவின் பரிந்துரைகளை ஏற்று, அரசு அளித்த ஆணைப்படி [எண். 1363 நாள் 7-10-72 நிதி (சிறப்புத் துறை)] ரூபாய் 130-3-160-4-180-5-195 அல்லது 140-3-155-4-175-5-210 என்ற திருத்தப்பட்ட விகித அடிப்படைச் சம்பளத்தில் உள்ளவர்களுக்கு முன் பணிக்காலத்திற்கு 'வெயிட்டேஜ்' ஆக உச்ச அளவாக 5 உயர்வும் (5 increments) இதர விகித அடிப்படைச் சம்பளத்தில் உள்ளவர்களுக்கு உச்ச அளவாக 4 உயர்வும் உண்டு. இந்த ஆணைப்படி நடுநிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கும் முன்பணிக்காலத்திற்கு ஏற்ப 'வெயிட்டேஜ்' உண்டு. முன்பணிக்காலத்தைக் கணக்கிட்டுக்கொண்டு, முதல் நான்கு ஆண்டுப் பணிக்காலத்திற்கு, இரண்டு ஆண்டிற்கு ஓர் உயர்வு வீதமும், பிறகு உள்ள பணிக்காலத்திற்கு மூன்று ஆண்டிற்கு ஓர் உயர்வு வீதமும் 'வெயிட்டேஜ்' அளிக்கப்படும். ஆனால் மொத்தத்தில் உச்ச அளவாக 4 உயர்வுகளே 'வெயிட்டேஜ்' ஆக கிடைக்கும். இதே அடிப்படையில், 250 ரூபாய் அடிப்படை சம்பளத்தில் உள்ள நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் - முன்பணிக்காலத்திற்கு ஏற்ப-'வெயிட்டேஜ்' கிடைக்கும்.

**வினா:** 1-11-73, 16-11-73 தேதிய 'தமிழரசு' இதழ்களில் கோழிப்பண்ணை பற்றி இன்றியமையாத செய்திகளை வெளியிட்டிருந்தீர்கள். மிக்க மகிழ்ச்சி. நெல்லை மாவட்டத்தில் அரசாங்க கோழிப்பண்ணை எங்கு உள்ளது? எனது பண்ணைக்கு உயர்ந்த ரகக் கோழிக் குஞ்சுகளைப் பெற்றுக்கொள்வது எப்படி என்பது பற்றிய குறிப்புகளை வெளியிடவில்லை. ஆகவே, தயவு செய்து நெல்லை மாவட்டத்தில் உள்ள அரசாங்க கோழிப்பண்ணை பற்றிய விவரம், அரசாங்க உதவிகள், உதவிகளைப் பெறும்முறை ஆகியவைகளைப் பற்றி அறிய ஆவலுடன் எதிர்பார்க்கின்றேன்.

—ஜி. சொக்கலிங்கம், 'தமிழரசு' ஏஜெண்ட், கட்டப்பாறை-628304, நெல்லை மாவட்டம்.

**விடை:** நெல்லை மாவட்டத்தில் கோழிக்குஞ்சு பொரிப்பு நிலையம் இல்லை. மதுரை மாவட்டத்திலுள்ள கப்பலூர் கோழிக்குஞ்சு பொரிப்பு நிலையத்திலிருந்து நெல்லை மாவட்டத்தினர் தங்களுக்குத் தேவையான கோழிக்குஞ்சுகளைப் பெற்றுக்கொள்ளலாம். உங்கள் அருகாமையில் உள்ள கால்நடை உதவி மருத்துவர் அல்லது கால்நடைப் பராமரிப்புத்துறை உதவி இயக்குநர் மூலம் தங்களுக்குத் தேவையான கோழிக்குஞ்சுகளை கப்பலூரிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். தங்கள் பகுதியில் உள்ள கோழி விஸ்தரிப்பு நிலையத்திலிருந்தும் தரமான உயர்ரகக் கோழிக்குஞ்சுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

தாங்கள் கப்பலூரில் உள்ள கோழிக்குஞ்சு நிலையத்திலிருந்து தரமான உயர்ரகக் கோழிக்குஞ்சுகளை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். கோழிக்குஞ்சுகளை கூடைகளில் விட்டு, லாரியில் நெல்லை மாவட்டத்திற்குக் கொண்டு செல்லலாம். கோழிப்பண்ணை அமைக்க தற்பொழுது தமிழ்நாடு அரசு நேரடியாகக் கடன் கொடுப்பதில்லை. நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளும், ஸ்டேட் பாங் ஆப் இந்தியாவும் கோழிப்பண்ணை அமைக்க கடன் கொடுத்து வருகின்றன. கால்நடை பராமரிப்புத்துறையினர் கோழிப்பண்ணை பற்றிய நுட்பங்களை உங்களுக்குத் தெரிவிப்பதுடன், நோய் தடுப்பும் செய்வார்கள். உங்கள் ஊராட்சி ஒன்றிய எல்லையில் பணியாற்றும் கால்நடை மருத்துவர்கள் தங்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்ய முன்வருவார். எனவே, அவர்களது சேவையைப் பயன்படுத்தி கோழிப்பண்ணை அமைக்க முற்படுங்கள்.

—ஆர்.எம்.



# பதிவுத் துறையின் பயனுள்ள பணிகள்!

அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகள் நமக்கு எத்தனையோ உள்ளன. வீடு, நிலம், சொத்து, உயில் என்று பல சிக்கல்கள் பலரைச் 'சிக்'கெனப் பிடித்தாட்டுகின்றன. இந்தப் பிடியிலிருந்து விடுபடப் பெருந்துணை புரிகிறது பதிவுத்துறை! எப்படி?

அசையும், அசையாச் சொத்துக்கள், உயில் போன்றவைகளைப் பதிவு செய்வதைப் பத்திரப்பதிவு என்கிறோம். இவ்வாறு பத்திரத்தை அரசிடம் பதிவு செய்வதன் நோக்கமென்ன?

முதலாவதாக அந்தப் பத்திரம் ஒன்று பிறந்துள்ளது என்று உலகத்துக்கு அறிவிப்பது; இரண்டாவது ஏமாற்றுதலும் பொய்க் கையெழுத்தும் உண்டாகாமல் தடுப்பது; மூன்றாவதாகப் பதிவு செய்ய வேண்டிய பத்திரத்தில் கூறும் சொத்தின் உரிமை, எவ்வாறெல்லாம் பாதிக்கப்பட்டுள்ளது என்ற முழு விவரங்களும் பத்திரப் பதிவு நிலையத்திலுள்ள பதிவுப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ளன என்று நம்பத்தக்கதாக இருப்பதுமாகும்.

பதிவுத்துறை 1864-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி நிறுவப்பட்டது. இதற்கு முன்னர் இந்தியா முழுவதிலும் அமலாகத்தக்க பத்திரப்பதிவுச் சட்டம் எதுவும் இருக்கவில்லை. வங்காளம், பம்பாய், சென்னை ஆகிய மாநிலங்கள் ஒவ்வொன்றுக்குமான சட்டவிதிகள் (Regulations) என்னும் தொகுதியில் பத்திரப்பதிவுக்கான விதிகள் அடங்கியிருந்தன.

இந்த விதிகள் அசையாச் சொத்து பற்றிய விற்பனை, அடைமானம், குத்தகைப் பத்திரங்கள், உயில்கள், சுவீகாரம் செய்ய அதிகாரம் அளிக்கும் பத்திரங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்வது பற்றிக் கூறுகின்றன. ஆனால், பதிவு செய்வது அவரவர் விருப்பம்; சட்டப்படி கட்டாயமில்லை.

பத்திரங்கள் கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டும் என்று தெரிவித்த முதல் பத்திரப்பதிவுச் சட்டம் 1864-ஆம் ஆண்டில் இயற்றப்பெற்ற பதினாறாம் சட்டமாகும்.

1908-ஆம் ஆண்டுக்கு முன்னர் பத்திரப்பதிவு பற்றிய விதிகள் ஏழு சட்டங்களில் சிதறிக் காணப்பட்டன. 1908-ஆம் ஆண்டில் இவ்வாறு சிதறியிருந்த விதிகளெல்லாம் ஒன்றாகத் திரட்டப் பெற்று ஒரே சட்டமாகச் செய்யப்பட்டது. அதுதான் இப்போது அமலில் இருந்து வருகிறது.

கட்டாயமாகப் பதிவு செய்யப்படவேண்டிய பத்திரங்கள் இவை என்றும், விரும்பினால் பதிவு செய்யக்கூடிய பத்திரங்கள் இவை என்றும் இந்தச் சட்டம் கூறுகிறது. எந்த விவகாரங்கள் பத்திரிகைகளில் எழுதப்பட வேண்டும் என்று பதிவுச் சட்டம் கூறுது; எந்தப் பத்திரங்கள் பதிவு செய்யப்பட வேண்டும் என்றே அது கூறும். குறிப்பிட்ட விவகாரம் நடந்தது என்பதற்குரிய சான்றாகவே பத்திரப் பதிவு அமைகின்றது.

கடந்த நூற்றெட்டாண்டுகளாக மக்கள் தொண்டில் ஈடுபட்டிருக்கும் தொன்மையான துறை பதிவுத் துறையாகும். விடுதலைக்குப் பின்னர் பல திட்டங்களின் விளைவாக அரசுத்துறை விரிவடைவதற்கு முன்புவரை நமது நாட்டின் ஏழை உழவர்களுக்கு முதல் முதலில் அறிமுகமாகும் துறை இத்துறையாகவே இருந்து வந்துள்ளது.

ஆரவாரமற்ற, எளிய முறையில், சீரிய பணியைக் காட்சிக்கு எளியராக இருந்து, சார் பதிவாளர்கள் பணியாற்றி வந்ததன் பயனாகக் கிராம மக்களுக்கும் அரசுக்கும் ஓர் இணைப்பை இத்துறை ஏற்படுத்தி வந்துள்ளது. மேலும், சிற்றூர்களிலும் இத்துறை அலுவலகங்கள் பன்னெடுங்காலமாக இருந்து வந்துள்ளன. இச்சிற்றூர்களில் வேறு அரசு அலுவலகங்கள் ஏற்பட்டிராத நிலையில் பொது மக்கள் சார் பதிவாளர்களையே தங்களுடைய ஆலோசகர்களாகவும், நண்பர்களாகவும், வழிகாட்டிகளாகவும் கருதி வந்துள்ளனர்.

இத்துறையின் தலைவர், பதிவுத்துறைத் தலைவர் ஆவார். இவருக்கு உதவியாக ஓர் உதவிப் பதிவுத்துறைத் தலைவரும், ஒரு நேர்முக உதவியாளரும் உள்ளனர். இத்துறையின் அலுவலகம் முதலாவது கடற்கரைச் சாலையில், அதாவது கடற்கரை ரயில் நிலையத்துக்கு எதிரில் உள்ளது.

இம்மாநிலம் 21 பதிவு மாவட்டங்களாகவும், 416 சார் மாவட்டங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பதிவு மாவட்டமும் ஒரு மாவட்டப் பதிவாளர் என்ற கெஜட் பதிவு பெற்ற அலுவலரின் கீழ் இயங்கி வருகிறது. இந்தச் சார் பதிவகங்கள் ஒவ்வொன்றிலும், சார் பதிவாளரும் அவருக்குக் கீழ் உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள், பிரிவு எழுத்தர்கள், கடைநிலைப் பணியாளர்கள் போன்ற பணியாளர்கள் பணி புரிகின்றனர்.

இத்துறையில் ஒவ்வொரு இனத்தின் கீழும் உள்ள மேற்குறித்த அலுவலர்களின் எண்ணிக்கை வருமாறு; உதவிப் பதிவாளர்கள் 448; உதவியாளர்கள் 559; இளநிலை உதவியாளர்கள் 729; பிரிவு எழுத்தர்கள் 617; கடைநிலைப் பணியாளர்கள் 965. இவர்கள் தத்தம் கடமைகளைச் செவ்வனே செய்ய மாநிலம் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு கெஜட் பதிவு பெற்ற ஆய்வாளர் என்று நான்கு ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பதிவுத்துறைத் தலைவரும், அவரின் கீழ் பணியாற்றும் அலுவலர்களும் விழிப்புடன் கண்காணிப்பதன் பயனாக, பொதுமக்களுக்கு இத்துறையின்பால் முறையீடு எதுவும் இல்லாதநிலை ஏற்பட முயலப்படுகிறது. முறையீடு ஏதேனும் பெறப்படின் குறை நீக்கப்படும் வண்ணம் தக்க நடவடிக்கைகள் தாமதமின்றி எடுக்கப்பட்டு வருகின்றன.

1970-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ஆம் தேதியில் இம்மாநிலத்தில் பத்திரப் பதிவு



ஆம்...வகை வகையான பீங்கான் சாமான்கள் மலர்க் கிண்ணங்கள், மற்றும் சுகாதார சாதனங்களையும் மரச் சாமான்களையும் தயாரிக்கும் டான்ஸியில் வாங்கியவை அவை.

விருத்தாசலத்தில் உள்ள டான்ஸி ஸிராமிக்ஸ் உங்களது இல்லத்துக்கு எழில் ஊட்டும் பீங்கான் பொருட்களை தயாரிக்கிறது.

விருத்தாசலத்தில் உள்ள டான்ஸி ஸ்டோன்வேர் பைப்ஸ் உப்பு மெருகிட்ட குழாய் வகைகளை தயாரிக்கிறது.

வீட்டுக்கும், காரியாலயத்திற்கும் தேவையான மரச்சாமான்கள் கடலூரில் உள்ள் டான்ஸி பர்னிச்சர் மற்றும் ஸ்மித்தி தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகின்றன.

*எழில் மிக்க பொருட்கள் வாங்க ஏற்ற இடம் 'டான்ஸி'.*

**தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்,**
'அருள்மனை' 26, ஒயிட்ஸ் ரோடு,
சென்னை-600014.

# ஆகா! என்ன எழில்!





மாவட்டங்களின் எண்ணிக்கை தொடர்ந்து 21 ஆக இருந்து வருகிறது. இந்த ஆண்டில், 6 இடங்களில் புதிய துணைப் பத்திரப்பதிவு அலுவலகங்கள் திறக்கப்பட்டன. இதனால் நமது மாநிலத்தில் உள்ள துணைப்பத்திரப் பதிவு அலுவலகங்களின் எண்ணிக்கை 375 ஆக அதிகரித்துள்ளது. 1970-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31-ஆம் தேதியில் இம்மாநிலத்திலுள்ள பத்திரப்பதிவு அலுவலகங்களின் மொத்த எண்ணிக்கை 396 ஆகும்.

ஆரம்பத்திலிருந்து பதிவுத் துறை ஆற்றிவரும் முக்கியப் பணிகள் பத்திரங்களைப் பதிவு செய்தல், அவற்றின் படிகளை நிலையாகப் பாதுகாத்தல், அவற்றை ஆய்வு செய்ய மக்களை அனுமதித்தல், அவற்றின் படிகளையும், வில்லங்கச் சான்றுகளையும் வழங்குதல் ஆகியவையாகும். கூட்டுறவு வங்கிகளும், வணிக வங்கிகளும் தமிழகத்தில் மிகுதியாக செயல்பட்டு வருவதாலும், பொதுமக்களுக்கும், உழவர்களுக்கும் இவை கடன்களைத் தாராளமாக வழங்குவதாலும் பதிவுத் துறையின் பணி தனி முக்கியத்துவம் அடைந்துள்ளது.

பத்திரப் பதிவுச் சட்டத்தின் கீழ் வரும் பணிகளே தலையாய பணிகள் எனினும், பல்வேறு சட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பும் இத்துறையிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. அவற்றுள் மிகவும் முக்கியமானது தமிழ்நாடு சீட்டுநிதிச் சட்டம். இச்சட்டத்தின் கீழ் பதிவுத்துறைத் தலைவரே சீட்டு நிதிகள் இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு உதவியாக ஓர் இணை இயக்குநரும் நியமிக்கப்பட்டுள்ளார். மாவட்டப் பதிவாளர் தமது ஆட்சி எல்லையில் சீட்டு நிதிகள் ஆய்வாளராகவும், சார் பதிவாளர் தமது ஆட்சி எல்லையில் சீட்டுப் பதிவாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். பதிவின்றி நடைபெறும் சீட்டு நிதிகளை ஒடுக்கவும், பதிவுபெற்று நடைபெறும் சீட்டு நிதிகள் முறையாகச் செயல்படுவதைக் கண்காணிக்கவும் ஒவ்வொரு பதிவு மாவட்டங்களிலும் ஒரு புலனாய்வு வழக்குச் சீட்டுப்பதிவாளர் செயல்படுகிறார்.

மேலும், சங்கங்கள் பதிவுச் சட்டம், திருவாங்கூர்-கொச்சிச் சட்டம், இந்திய கூட்டாண்மைச் சட்டம், இந்திய-கிருத்துவத் திருமணச் சட்டம், தனித் திருமணங்கள் சட்டம், பார்சி திருமணங்கள் மணமுறிவுச் சட்டம், பிறப்பு, இறப்பு, மற்றும் திருமணங்கள் பதிவுச் சட்டம், இந்து திருமணச் சட்டம், வரதட்சிணைத் தடுப்புச் சட்டம் முதலான சட்டங்களையும் இத்துறை செயற்படுத்தி வருகிறது. மேலும், சிற்சில இடங்களில் மழைப் பதிவு கருவூல அலுவல், சிறைச்சாலைக் கண்காணிப்பு போன்ற பல்வேறு அரசுப்பணிகளையும் இத்துறையினர் செய்து வருகின்றனர்.



ஓர் ஆண்டில் சராசரியாக 10 இலட்சம் பத்திரங்கள் இத்துறையில் பதிவு செய்யப்படுகின்றன. மூன்று இலட்சங்களுக்கு மேல் வில்லங்கச் சான்றுகளும், ஓர் இலட்சத்துக்கும் மேலான நகல்களும் வழங்கப்படுகின்றன. பதிவு செய்யப்படும் பத்திரங்களில் சுமார் 75 சதவீதம் பத்திரங்கள் பதிவான அதே நாளில் பொதுமக்களுக்குத் திருப்பி வழங்கத் தயார் செய்யப்படுகின்றன. இதேபோல் வில்லங்கச்சான்றுகளும், நகல்களும் காலதாமதமின்றி உடனுக்குடன் வழங்கப்படுகின்றன.

பத்திரங்கள் மூலம் அரசுக்கு ஆண்டுதோறும் கிடைக்கும் முத்திரைத் தீர்வை சுமார் ரூ. 16 கோடிக்கும் மேலாகும். இத்துறையில் பல்வேறு கட்டணங்கள் மூலம் கிடைக்கும் ஆண்டு வருமானம் ரூ. 3 கோடிக்கும் மேலாகும். செலவு சுமார் ரூ. 1 கோடி மட்டுமாகும். இது தவிர சீட்டுநிதிச் சட்டத்தின் கீழ் ஆண்டு வருமானம் சுமார் ரூ. 6 இலட்சம், செலவு சுமார் ரூ. 4 இலட்சம்.



பத்திரங்களைப் பதிவு செய்வதற்கும், பதிவுப் புத்தகங்களில் விவரம் தேடுவதற்கும், பத்திரங்களுக்குப் படிகள் தரவும், பதிவு செய்வதற்காக வீடுகளுக்கு வரவும், இவை போன்ற காரியங்களுக்குரிய கட்டணங்களைக் குறித்து ஒரு பட்டி தயாரிக்கப் பத்திரப் பதிவுச்சட்டம் மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்கின்றது.

பதிவு பற்றிப் பொய் வாக்கு மூலம் தருதல், பத்திரங்களின் பொய்ப்படிகளைத் தருதல், ஆள் மாறாட்டம் செய்தல் அல்லது அதற்குத் தூண்டுதல் ஆகியவை பத்திரப்பதிவுச் சட்டப்படி குற்றங்களாகும் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

—பி.வி.ஜி.

## எரிவாயுவினால் ஊர்தி ஓட்டலாம்!

நாம் சாதாரணமாக அடுப்புக்குப் பயன்படுத்துகிற எரிவாயுவின் உதவியால் ஊர்தியை ஓட்டமுடியும் என்பதை மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறார் காசியைச் சேர்ந்த இக்பால்சிங் என்பவர். 35 ரூபாய் விலையுள்ள எரிவாயுவைக் கொண்டு, 300 மைல் தொலைவுக்கு ஊர்தியை ஓட்டிச் செல்லமுடியும் என்கிறார் திரு. இக்பால்சிங்.





# நேரு பிறந்தநாள் கவியரங்கம்

புதிய இந்தியாவை உருவாக்கும் பொன்னன பணிக்குத் தன்னையே முழு தீந்த தலைவர் நேருவின் 85–வது பிறந்த நாள் விழாவினை யொட்டித் தமிழகக் கல்லூரிக் கல்வி இயக்ககமும் தமிழ்நாடு அரசு செய்தித்துறை இயக்கக மும் ஒருங்கிணைந்து, கல்லூரி மாணவர் களுக்காக ஒரு கவிதைப் போட்டியை ஏற்பாடு செய்தன. இந்தப் போட்டி, 11–11–73–ல் சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது. போட்டி யில், பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த 36 பேர் பங்கு பெற்றனர். இவர்களில் பெண்கள் 10 பேர்; ஆண்கள் 26 பேர். இவர்கள் அனைவரும் நேருவைப் பற்றித் தாம் எழுதிய கவிதைகளை 11–11–73ல் அரங்கேற்றினர். கவி

கவிஞர் கா. வேழவேந்தன், புலவர் பொன்னிவளவன் திருமதி கிருஷ்ண சஞ்சீவி ஆனை[illegible]ர் நடுவர்களாக இருந்து பரிசுக்கு[illegible] கவிதைகளைத் தேர்ந்தெடுத்தனர்.

14–11–73ல் நேரு அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் கல்வி அமைச்சர் நாவலர் அவர்கள் பரிசுகளைவழங்கினர்.

# தேவமலர்




இரா. வைரமுத்து

பச்சையப்பன் கல்லூரி,
சென்னை-30.


முதற் பரிசு பெற்ற கவிதை

வரங்களெலாம் தவமிருந்த கார ணத்தால்
வந்துதித்த தேவமகன்; சிறைக்கோட் டத்தில்
நரம்பெடுத்து வலைபின்னிப் பின்னி, வெள்ளை
நதிகளுக்குள் சுதந்திரமீன் பிடித்த கைகள்!
இரவுகளைப் புலரவைத்து விடிந்த பின்னே
எரிந்துவிட்ட விடிவெள்ளி; எங்கள் நாட்டு
மரங்களுக்கே நிழல்கொடுத்த தெய்வப் பந்தல்,
மரணத்தின் நிழலுக்குள் மறைந்தா போகும்?

புன்னகைப்பூ மகுடியிலே சீனப் பாம்பின்
புற்றினையே ஆடவைத்தான்; இனிப்பைச் சிந்தும்
கண்ணசைப்பு வெடிகளினால் வறுமைத் தீயைக்
கருகவைத்துப் பூவுதிர்த்தான்; மனவா னத்தில்
அன்னைநிலா ஆனவன்தன் பிள்ளைக் கெல்லாம்
ஆண்மையினால் பால்கொடுத்தான்; காந்தி தந்த
இன்னமுதப் பூங்குழந்தை, நாங்கள் தூங்க
இழைபிரித்துக் கட்டியதே இதயத் தொட்டில்!

அந்திமுகில் அவன்பாதம் தொட்டுக் கொஞ்ச
ஆகாயக் கிண்ணத்தில் வழிந்து சிந்தும்!
சந்திரப்பூ, மலர்வதற்கு வரங்கள் கேட்டுத்
தங்கியவன் இமையடியில் தவங்கள் செய்யும்!
அந்தமகன் பேச்சொலிக்குக் கைகள் கொட்ட
அலைக்கைகள், கடலுடம்பை இழுத்துப் போகும்!
செந்தளிர்ப்பூ நெய்தெடுத்த தேவ மேனி,
தேனாற்றைத் தேக்கியதே அணையாய் மாறி!

விழிநாக்கில் மௌனங்கள் வார்த்தை யாகும்!
விடிவெள்ளி அவன்கண்ணில் திசையைக் காணும்!
பொழிந்தமழை தானியமே பொழிந்த தென்று
பூக்களெலாம் பயிர்வளர்த்த புனித நேரம்
அழிந்ததம்மா கவிவானம்! அதனால் நாங்கள்
அதனின்றும் உதிர்ந்துவிட்ட விண்மீன் ஆனோம்!
விழிவிளக்கைக் கண்ணீரால் அணைத்தோம்; நாங்கள்
விரல்களையே இழந்துவிட்ட நகங்கள் ஆனோம்!

பங்குவைத்துக் கொண்டதம்மா மரணம்; இங்கு
பந்திவைத்த கைகளையே; தேவ தூதன்
அங்கமலர் பாடையிலே பூத்த தம்மா!
அல்லியுடன் எரித்தெடுத்த சாம்ப லாலே
கங்கை நதி தன்பாரம் கழுவிக் கொள்ளக்
கண்ணீரில் எம்மிமைகள் கரைந்து துள்ள
பொங்கி வந்த இமயநதி நெருப்பாய்ச் செல்ல
போகின்றோம், இனிமேலும் என்ன சொல்ல?



# மனிதருள் மாணிக்கம்



வசந்தத்தில் பூத்த வாடாத "ரோஜா"
வாழ்வில் இன்பம் தேடாத "ராஜா"
"ஆனந்த பவனத்து" அஞ்சாத சிங்கம்
அண்ணல் காந்தி புடம்போட்ட தங்கம்
மேலை நாட்டில் "பாரிஸ்டர்" பட்டம்
மேதினி போற்றும் "ஐந்தாண்டுத்" திட்டம்
தேசத் தொண்டில் மனையகம் மறக்கும்
சிறையகம் புக்கால் புத்தகம் பிறக்கும்
புலியாம் "மோதிலால்" பெற்றிட்ட குட்டி
பகையார்ம் யானைமேல் பாய்ந்தது முட்டி
மனைவி "கமலா" மாணிக்கக் கட்டி
மாண்டது "இந்திரா" வைரத்தைக் கொட்டி
கொஞ்சு மழலையில் பிஞ்சு முகந்தனில்
"கொள்ளை ஆசை" அவர்க்கு;
பாரைக் கொத்தவரும் உயிர் தின்னவரும்
"போர்நச் சரவம்", எதற்கு?
பூசல் ஒழிந்திட "சோசலிஷம்" வர
போற்றுக "பஞ்சசீலம்" அதற்கு;
சீனத்துப் "பேயொன்று" போர்தொடுத் தேவரின்
சீறிச் சிங்கமென நொறுக்கு.
மாண்டபின்னேயென் "மேனியை" நெருப்பில்
மூட்டி எரிக்க வேண்டும்;
மீண்ட "சாம்பலை" முழுவதும் எடுத்து
மண்ணில் கொட்ட வேண்டும்;
காணும் இடமெல்லாம் "காற்ருய் நீராய்"
கலந்து வாழ வேண்டும்
மீண்டும் பிறந்தால் "பாரத மண்ணே!"
எனக்கு ஓரிடம் வேண்டும்
என வாழ்ந்த பிரான் எந்தைநேருபிரான்
திருவடி போற்றுகின்றேன்;
அவர்வாழ்ந்த நாட்டிலே அடியேன் வாழும்
பேற்றினைப் போற்றுகிறேன்.



டி. அமிர்தலிங்கம்

இரண்டாமாண்டு,
முதுகலைத் தமிழ் இலக்கிய மாணவர்,
மாநிலக் கல்லூரி,
சென்னை-5.

இரண்டாம் பரிசு பெற்ற கவிதை





# புகழ் வாழ்க!

மணி மகுடம் புனையாத மன்னனவன்
மனிதரிலே மாணிக்கம்; மகாத்மாவின்
தனிச்சீடன்; தன்னலம் சிறிதுமில்லான்;
தமிழேபோல் இனிக்கின்ற குணமுடையான்;
இனத்தாரின் விடுதலைக்கு வெள்ளையர் தம்
எண்ணற்ற இன்னல்களைச் சகித்தோன்
சினம்வந்தால் சிங்கமென உறுமிநிற்பான்
சிற்றளவில் சிறுகுழந்தை யாய்த்திகழ்வான்.
அந்தமில் அழகனவன் ஆடையிலே
அன்றலர்ந்த ரோசா அழகு செய்யும்
சிந்தனைச்சிற்பி சீர் திருத்த செம்மல்
சிறுமைதனைக் காணுங்கால் சீறிடும் சிங்கம்
மந்திரத்தால் மாங்கனி வீழாதென்று
மனம்விட்டுப்பேசி மக்கள் தாம்
சந்ததமும் உழைத்தால்தான் உயர்வோ மென்றார்
சரித்திர நாயகனாய் விளங்குகின்றார்.
இந் நாடு விடுதலை பெற்ற பின்பு
இங்கிலாந்து சென்றிருந்தார் நேருமகான்
அந்நாட்டுப் பேரரசி ஆதி நண்பர்
அனைவரையும் சந்தித்து மகிழ்ந்தார் அண்ணல்
செந்நாய் முகமுடைய சர்ச்சிலையும்
சந்தித்தார் இறுதியிலே பகர்ந்தார் சர்ச்சில்
"மாந்தரிலே மாணிக்கம் இவர்தான்" என்றான்
அச்சமொடுவெறுப்பினை வென்றதினால் என்றான்.
பெரும்பதவி வகித்திட்ட பெம்மான் நாளும்
பிறர்வாழத் தான் தேய்ந்த பெரியோன்
இறக்கின்ற போது அவன் எழுதிவைத்தான்
எவருமே வரையாத உயில் ஒன்றை
சுரக்கின்ற அன்போடு சொல்லிப் போனார்
சுட்டெரித்த சாம்பலிலே ஒரு பிடியைத்
திரை மோதும் கங்கையிலே தூவுகென்றார்
திண்தோள்கள் படைத்திட்ட உழவன் உழும்
கழனியிலே வயல்களிலே தூவு கென்றார்
பிறந்த மண்ணோடு மக்களொடு ஒன்றிநிற்க
எழுத்தாலும் பேச்சாலும் எடுத்தியம்பா
எண்ணத்தின் எல்லையிது ஏற்றத்தின் சிகரம்.
தாழ்ந்து சென்னி வணங்கிடுவோம் நேருவிற்கு
தலைவரவர் மேதையவர் ஞானியுங்காண்!
வாழ்ந்திருக்கும் அவர் நாமம் கீர்த்தியுந்தான்
வையமுள்ளளவும், புகழ் வாழ்க வாழ்க!






எ. இராஜேஸ்வரி

இரண்டாமாண்டு, பி. எஸ்ஸி,
அரசினர் மகளிர் கலைக்கல்லூரி,
வடசென்னை.


மூன்றும் பரிசு

# நேரு

பாரத நாட்டின் விடுதலை வேண்டிப் போரிடப்பலர் வந்தார்
ஆரும் துயரில் நீந்திட இங்கே அனைவரும் முன்வந்தார்
சீருற நாட்டின் பணிகளை யுன்றன் சிரமேற் றருகின்றேன்
நேரு இதனை யேற்றிடு என்று அண்ணல் தான்மொழிந்தார்
நேரிய வழியில் பாரதப் பணியைச் செய்தே முடித்தானே
ஆர்வத் தாலே அவனது புகழைப் பாடிட வந்தேனே;
கற்றவர் நடுவே பெற்றான் இடத்தைக் கல்வித் திறத்தாலே
மற்றவ ரிடையே பெற்றா னிடத்தை அன்பின் பலத்தாலே
ஆட்சிப் பீடம் ஏறிடற் கான ஆசை யங்கில்லை
மாட்சிமை குன்றும் செயலைத் தூண்டும் மனமு மங்கில்லை
சிந்தனை வேறாய்ச் செயலும் வேறாய்ப் புவியிற் பலர்வாழ
சிந்தனை செயலும் ஒன்றே என்று செயலில் காட்டினனே
மந்தைக ளென்று வாழ்ந்த மக்கள் மனத்தைத் தெளிவாக்கி
தந்திட வேண்டும் விடுதலை யென்னும் ஒலியைக் கொடுத்தானே
வெள்ளைய ராட்சி வீழ்கெனச் சொல்லிப் புரட்சிக் கனலாக
தொல்லைக ளேற்கத் துணிந்தே மொழிந்தான் தியாகச் சுடராக
அல்லும் பகலும் சிறையில் வாடி அந்தோ பரிதாபம்
செம்மல் நேரு ஏற்றிய தன்றே விடுதலைப் பெருந்தீபம்
இருளில் சிக்கி வாழ்ந்திடும் போது எல்லாம் சரியென்றோம்
இருளைப் போக்கி ஒளியைக் கண்டோம் எல்லாம் தவறென்றோம்
அண்ணல் காந்தி நெறியில் நின்று அமைதிப் பொருள் சொன்னான்
மண்ணில் மாந்தர் நலமே வேண்டித் தேறும்முறை சொன்னான்
ஐவகை வழியில் புவிதான் சென்றால் பகைமை யொழியாதோ?
உய்யும் நெறியை யுலக மேற்றால் உயிர்கள் மகிழாவோ?
அன்னை நாட்டை அந்நியம் தாக்கிட சிங்கம் என்றானும்
புண்ணிய பூமியின் புகழைக் காக்கப் போரைக் கண்டானே
எல்லா மக்களும் இன்புற வேண்டு மென்றே மொழிந்தானே
வல்லான் குவிக்கும் பொருளைத் தடுக்கத் திட்டம் வகுத்தானே
வறுமைப் பேயை யோட்டிட நாட்டில் தொழிலை மிகுத்தானே
உரிமை பெற்றே மக்கள் வாழ வழியும் உரைத்தானே
வீசும் தென்றல் காற்றும் அவன்றன் புகழை இசைத்திடுமே
பேசும் கிள்ளை மாமா வென்று உறவைக் கூறிடுமே
மாசில் அந்த மன்னவன் புகழைப் பாடச் சொன்னீரே
பேசும் கிள்ளை மொழியில் நானும் கவிதை சொன்னேனே!

**ஆறுதல் பரிசு**



வே. சுகுமாரன்
விவேகானந்தா கல்லூரி.
சென்னை.





# எழுத்தாளர் ஏற்றம் பெற

ஒரு விழாவோ அல்லது பொதுக் கூட்டமோ நடக்கிறது என்றால், ஒரு சில பத்திரிகை நிருபர்கள் செய்திகள் சேகரிக்க வந்திருப்பதை நாம் பார்த்திருக்கிறோம். ஆனால், முழுக்க முழுக்கப் பத்திரிகையைச்சேர்ந்த நிருபர்கள், ஆசிரியர் குழுவினர் ஆகியோர் கலந்து கொண்ட ஒரு விழா அண்மையில் நடந்தது. அது எதுவாக இருக்கும்?

நவம்பர் 8-ஆம் நாள் அன்று, சென்னை இராயப்பேட்டை 'சிண்டிகேட் வங்கியின்' சார்பில் நடந்த 'பத்திரிகையாளர் வார விழா' தான் அது!

இந்த விழாவில் பல பத்திரிகையைச் சேர்ந்த நிருபர்கள் பேசினார்கள். அவர்களில் ஒருவர் பேசும்போது, ''இங்கே எழுத்தாளர் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் வந்திருக்கிறார்கள்; எழுத்தாளர் அமைச்சர் க. இராசாராம் அவர்கள் வந்திருக்கிறார்கள்; எழுத்தாளர் இராம. அரங்கண்ணல் அவர்கள் வந்திருக்கிறார்கள்...'' என்று குறிப்பிட்டது மிகவும் பொருத்தமாக இருந்தது.

பொதுவாக நிருபர்கள் எல்லாம் பேசும் பொழுது, 'பத்திரிகையில் பணி புரியும் எழுத்தாளர்களுக்கு வீட்டு வசதி செய்து தர வேண்டும்' என்பதை வலியுறுத்தினார்கள். விழாவிற்குத் தலைமை வகித்த முதல்வர் அவர்கள் அதற்கு விடை தரும் வகையில் இவ்வாறு குறிப்பிட்டார் :

''பத்திரிகை நிருபர்களுக்குக் கூடுமான உதவிகளைச் செய்து வருகிறோம். கூடுமான உதவி என்றுதான் சொன்னேன். போதுமான உதவி என்று சொல்லவில்லை.

பீட்டர்சு ரோடு குடியிருப்பில் பத்திரிகையாளர்களுக்குச் சில வீடுகள் தந்துள்ளோம். பத்திரிகையாளர்களுக்குத் தனியாக வீடு கட்டித் தருவது குறித்து அமைச்சர் இராசாராமுடன் கலந்து ஆவன செய்வேன். அந்தப் பணியில் சிண்டிகேட் போன்ற தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் ஒத்துழைக்க வேண்டும்.''

தொழிலாளர் நல அமைச்சர் திரு க. இராசாராம் அவர்கள் பேசுகையில், ''வீடுகள் கட்டுவதற்குப் பணம்கொடுக்க முன்னுரிமை கொடுக்கப்படாததால், வீடுகள் கட்டத் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் நீண்ட காலக் கடன் கொடுக்க மறுக்கிறார்கள். இந்த நிலை மாற்றப்பட்டால்தான் நிரம்ப வீடுகள் கட்டமுடியும்'' என்றார்.

குடிசை மாற்று வாரியத் தலைவர் திரு இராம. அரங்கண்ணல் அவர்கள் பேசுகையில், ''மக்களுடன் தொடர்பு கொள்ளுவதில் 'சிண்டிகேட் வங்கி' மிகுந்த அக்கறை கொண்டுள்ளது என்றும், பத்திரிகையாளர்கள் தங்களுக்கு வீடுகள் எந்த முறையில் கட்டிக் கொடுக்கப்பட வேண்டும் என்று திட்டம் வகுத்தால் அரசு அதை நிச்சயமாகக் கவனிக்கும்'' என்றும் கூறினார்.



பத்திரிகையாளர் வார விழாவுக்கு முன், இந்த வங்கி தனது எல்லாக் கிளைகளின் சார்பிலும் ஆசிரியர், மாணவர், மருத்துவர், வழக்கறிஞர் ஆகியோருக்கான வார விழாக்களை மிகச் சிறப்பாகக் கொண்டாடி அவர்களுக்கு ஏற்ற வகையில் உதவிகள் தந்து மகிழ்வித்திருக்கிறது.

ஆசிரியர்கள் புத்தகங்கள் வாங்கவும், மேற்படிப்புப் படிப்பதற்கான செலவுகளுக்கும், குடும்ப நலத்துக்கான மருத்துவ உதவிகளுக்கும் இந்த வங்கியின் கிளைகள் உதவி புரிந்திருக்கின்றன; மாணவர்களின் உயர் தரக் கல்விக்காகவும், மருத்துவர்கள் சொந்தமாக மருத்துவமனை வைத்து நடத்தவும், மருத்துவ சம்பந்தமான கருவிகளை வாங்கிக் கொள்ளவும் பண உதவிகள் புரிந்திருக்கின்றன; வழக்கறிஞர்கள் தமக்குத் தேவையான சட்ட நூல்கள், தட்டெழுத்துப் பொறி, மேசை, நாற்காலி முதலான மரச் சாமான்கள் வாங்கிக் கொள்ளவும் இந்த வங்கிகள் பணம் தந்து உதவியிருக்கின்றன.

பத்திரிகையாளர் வார விழா நவம்பர் 5 முதல் 10 வரை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்வார விழாவில் உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கு 'ஸ்கூட்டர்' அல்லது 'மோட்டார் சைக்கிள்' வாங்குவதற்கும், குடும்பத்திற்குத் தேவையான பொருள்களை வாங்குவதற்குக் கடனுதவியும் வழங்கப்பட்டன.

குறிப்பாக உயர் தரக் கல்வியின் வளர்ச்சிக்காக இந்த வங்கி பத்தாண்டுகளுக்கு மேலாகப் பெரும் பணிபுரிந்து வருகிறது. அதாவது உள் நாட்டிலும், வெளி நாட்டிலும் தங்களுக்குப் பிடித்தமான துறைகளில் தேர்ச்சி பெற விரும்பும் மாணவர்களுக்குக் கடன் உதவி அளித்து வருகிறது.

*1968*-ஆம் ஆண்டு இறுதி வரையில் வெளிநாட்டுக்கல்விக்காக மட்டும் மொத்தம் ரூ. *40,43,000* கொண்ட *719* கடன்களை வழங்கி இருக்கிறது. இதனால் *719* மாணவர்கள் பயனடைந்திருக்கிறார்கள்.

வெளிநாட்டில் கல்வி கற்பதற்காக ரூ.*7,000* வரையிலும், உள் நாட்டில் உயர்தரக் கல்வி கற்பதற்காக ரூ. *3,000* வரையிலும் கடன்கள் வழங்கப்படுகின்றன. இவை மட்டுமா?

மாதந்தோறும் சேமிக்கும் திட்டம், கூடிப் பெருகும் திட்டம் (Cumulative Deposits), ஒரு தொகையை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வைத்து மாதந் தோறும் வட்டி பெறும் திட்டம் (Fixed Deposits), நாள்தோறும் நலிவில்லாமல் சேமிக்கும் திட்டம் (Pigmy Deposits) போன்ற பல்வேறு திட்டங்கள் இந்த வங்கிகளின் சார்பில் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. நாள்தோறும் சேமிக்கும் திட்டத்தில், வங்கியில் உள்ளவரே வீடு தேடி வந்து நாம் சேமிக்க விரும்பும் எந்தத் தொகையையும் பெற்றுச் செல்வார். குறைந்த அளவு 25 காசுகள் சேமிப்பாகத் தரலாம்.

சேமிப்புத் திட்டங்கள் மட்டும் அல்லாமல் கடனுதவித் திட்டங்கள் பலவும் உள்ளன. சிறு தொழில் நடத்த, தொழில் வளம் பெருக்க, அன்றாட எதிர் பாராத செலவினங்களைச் சமாளிக்கக் கடனுதவி போன்ற பல நல்ல திட்டங்கள் உள்ளன.



*1925*-ஆம் ஆண்டு சிறு மூலதனத்துடன் அதாவது ரூ. *8,000* முதலுடன் துவக்கப்பட்ட இந்த வங்கி, இன்று *12* மாநிலங்களில் *600*-க்கு மேற்பட்ட கிளைகளைக் கொண்டிருக்கிறது. இன்று இந்தியாவில் *8*-வது இடத்தைப் பெற்றிருக்கும் இது, வங்கிகள் நாட்டுடைமை ஆக்கப்படுவதற்கு முன்பே விவசாயிகளுக்குப் பெருமளவில் கடன் உதவிகள் புரிந்து வந்துள்ளது.

*1968*-ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா அவர்களுடன் கலந்து இவ்வங்கியின் முன்னாள் தலைவர் திரு. டி.ஏ. பாய் அவர்கள் செங்கற்பட்டு மாவட்ட விவசாயிகளுக்கு ரூ. *50* இலட்சம் கடனுதவியாக அளித்துள்ளார். இந்த வங்கியின் தமிழ் நாட்டுக் கிளைகள் மூலமாகச் சுமார் ரூ. *30* கோடி இருப்பாக வசூலிக்கப்பட்டுள்ளது. இவ்வங்கி தமிழ்நாட்டில் கடனுதவியாக வழங்கியுள்ள தொகையோ சுமார் ரூ. *45* கோடி! கிராமப்புறங்களில் ரூ. 5 கூடக் கடனுதவியாக வழங்கப்பட்டுள்ளது. இப்படி இவ் வங்கியின் மூலமாக ஏழ்மை நிலையில் இருப்பவர்களுக்கும், படித்து வேலையில்லாமல் இருப்பவர்களுக்கும் சிறு தொழில் நடத்துபவர்களுக்கும் சிறப்பான திட்டங்கள் அமைத்துக் கொடுத்துக் கடனுதவியும் வழங்கப்படுவதை நாம் வெகுவாகப் பாராட்டவேண்டும்.



—பி. வி. ஜி.

# பல்கலைக் கழகம்-உருவாக்கிய பைந்தமிழ்க் கருத்தரங்கு

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை, 'இந்திய விடுதலையும் தமிழ் இலக்கியமும்' என்ற தலைப்பில் மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தியது. அக்டோபர் 27, 28, 29 ஆகிய நாட்களில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர்களும், பேராசிரியர்களும், ஆராய்ச்சி வகுப்பு மாணவர்களும் என மொத்தம் 40 கட்டுரையாளர்கள் கலந்து கொண்டனர்.

விடுதலைக்குப் பின் தமிழ்க் கவிதை, சட்டத் தமிழ் வளர்ச்சி, தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சித் துறையின் தோற்றமும் வளர்ச்சியும் திட்டங்களும், விடுதலைக்குப் பின் தமிழ் நாவல் வளர்ச்சியில் மகளிர் பங்கு, விடுதலைக்குப் பின் பக்தி இலக்கியங்கள், விடுதலைக்குப் பின்னர் தமிழ் நாடக வளர்ச்சி, விடுதலைக்குப் பின் கட்டுரை வளர்ச்சியில் மகளிர் பங்கு, விடுதலை இந்தியாவில் தமிழகம் பெற்ற புதுமை நூற்கள், தமிழ்நாட்டுச் சட்ட மன்றத்தில் இந்திய விடுதலை வெள்ளிவிழா உரைகள்—ஆகிய தலைப்புகளில் அறிமுகம் செய்யப்பட்ட கட்டுரைகள் குறிப்பிடத்தக்கவை.

இந்தக் கருத்தரங்கிலே மேலும் ஒரு சிறப்புச் செய்தி உண்டு. கல்லூரிக்குச் சென்று பட்டம் பெறாத தமிழ்க் கவிஞர் பெருமக்களின் கவிதை நூல்களைப் பட்டம் பெற்ற பேராசிரியர்களும், ஆராய்ச்சி மாணவர்களும் பாராட்டிப் பேசியதுதான் அந்தச் சிறப்புச் செய்தி.

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர், நாமக்கல் கவிஞர், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, முடியரசன், வாணிதாசன், தமிழ்ஒளி, கா. மு. ஷெரிப் ஆகியோரின் கவிதைகள் பேராசிரியர்களாலும், ஆராய்ச்சி மாணவர்களாலும் திறனாய்வு செய்யப்பட்டன.

மூன்றுநாள் கருத்தரங்கும், தமிழ் வளர்ச்சிக்கும் தமிழ்ச் சமுதாயத்தின் எதிர்கால வாழ்வுக்கும் பல அரிய திட்டங்களை-உருவாக்கித் தந்துள்ளன என்பது உறுதி.

# மணிப்பூர் மான்

மணிப்பூரில் மட்டுமே காணப்படும் இந்தவகை மான் மிகவும் அரிய பிராணி. இந்தியாவுக்கு வெளியே, பர்மா, தாய்லாந்து ஆகிய நாடுகளில்தான் இது வசிக்கிறது.

இந்த மானின் கொம்பு 106 சென்டிமீடர் நீளமானது. பார்ப்பதற்கு மிக அழகாக இருக்கும். கொம்புகள் உண்டு, வட்ட வடிவத்தில் தோற்றமளிக்கும். புருவ நுனியிலிருந்து கொம்பு கிளம்பி நளினமாக வளைந்து வளர்ந்திருக்கும். கொம்பில் இரண்டிலிருந்து பத்துக் கிளைகள் வரை இருக்கும். மான்களின் இரண்டாவது வயதில் கொம்பு தோன்ற ஆரம்பிக்கிறது. ஏழு வயதில் நல்ல வளர்ச்சியான கொம்புகள் இருக்கும். இந்த மானின் தோல் சற்று சொரசொரப்பானது. ஆனால் மெல்லியது. ஆண் மான்களின் நிறம் ஆழ்ந்த பழுப்பாகவோ, கிட்டத்தட்ட கறுப்பாகவோ இருக்கும். சந்தன நிறம் கொண்டவை பெண் மான்கள். குட்டி மான்களுக்குப் புள்ளிகள் இருக்கும். பருவ காலத்திற்கேற்றபடி மான்களின் நிறமும் மாறுகிறது. குளிர் காலத்தில் ஆழ்ந்த பழுப்பு நிறமாக இருக்கும் மான், கோடையில் லேசான பழுப்பு நிறமுள்ளதாக மாறக்கூடும்.

குன்றுகளும், அடர்ந்த காடுகளும் இவற்றுக்குப் பிடிக்காது; திறந்தவெளி புதர்க் காடுகளையும், நதிக்கும் குன்றுக்கும் இடையேயுள்ள நிலப் பகுதிகளையுமே இவை விரும்புகின்றன. சிறிய கூட்டங்களாக வசிக்கும் இம்மான்கள் வெப்பம் அதிகமாக இருக்கும் நேரத்தில் நிழலில் பதுங்குகின்றன. காலையிலும் மாலையிலும் தீனி ஏற்கின்றன.

ஆண் மான்கள் ஆகஸ்டு மத்தியில் கிளைக் கொம்புகளை உதிர்த்துவிடுகின்றன. டிசம்பர் இறுதியில் மான்களின் 'வெல்வட்' போன்ற ரோமம் உதிர்ந்துவிடும்போது, மான்களின் கொம்பு நல்ல வளர்ச்சியுடன் காணப்படுகிறது.



# காதி கிராப்ட் – கதர்—கிராமத் தொழில் பொருள்கள் வாங்குவதற்கு நம்பகமான இடம்



குடும்பத்துக்கு அன்றாடம் தேவைப்படும் பொருள்களிலிருந்து கலையழகு கொஞ்சும் கைவண்ணப் பொருள்கள் வரை காதி கிராப்ட்களில் நியாய விலையில் கிடைக்கிறது!

தமிழ் நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களில் 200 க்கும் மேலான காதி கிராப்ட்கள் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன.
















**தமிழ்நாடு கதர்—**
**கிராமத் தொழில் வாரியம்**

குறளகம்
சென்னை–600001

# இராணிப்பேட்டை தொழிற்பேட்டையாகிறது





பசி-பட்டினி-பஞ்சம் பறந்திட, நாடு செழிக்க, வளம் கொழித்து மக்கள் வாழ்வுயர வேளாண்மைத் துறையும், தொழில்துறையும் ஏற்றம் பெறவேண்டும். தமிழ்நாடு அரசு பசுமைப்புரட்சித் திட்டத்தை ஆரம்பித்துத் தீவிர சாகுபடித் திட்டத்தை ஏற்படுத்தி, உணவு உற்பத்தியைப் பன்மடங்கு பெருக்கித் தன்னிறைவு பெற்றுள்ளது மட்டுமல்லாமல், மற்ற மாநிலங்களின் தேவையை அறிந்தும் ஆயிரக்கணக்கான டன் அரிசியை அனுப்பி வருகிறது. தமிழ்நாடெங்கும் தொழில் மயமாக்க அரசு மிகுந்த முயற்சி செய்து வருகிறது. தொழில் தொடங்குவோருக்கு ஊக்கம் அளித்து, உதவிகள் பல புரிந்து உற்சாகப்படுத்துகிறது. தமிழ்நாட்டில் தொழில் தொடங்கிட—தொழிலில் அமைதி நிலவிட, உற்பத்தியான பொருட்களுக்கு நல்ல விற்பனை கிடைக்க, வரிச்சலுகை அளித்தல், இப்படி ஏராளமான முயற்சியும் உதவியும் செய்து வருகிறது.

தமிழ்நாட்டில் கனிவளம் (Mineral resources) குறைந்திருந்தும், இந்தியாவில் தொழில்துறையில் முக்கிய இடத்தைத் தமிழகம் பெற்றிருக்கிறது. நிலையான அரசும், தொழில் தொடங்க வருவோருக்கு வரவேற்புத் தரும் அளவிற்குப் பொருளாதாரச் சூழ்நிலையும், திறமைமிக்க நிர்வாகமும் தொழில் தொடங்க வாய்ப்பாக அமைந்துள்ளது. பொருளாதாரத்தைச் சரியான வழிகளில் திருப்பிவிட்டுத் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துவதன் மூலமாகவே, வேலை வாய்ப்பளித்தல், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் போன்ற சாதனைகளைப் புரிய முடியும்.

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்குத் தொழில்துறை உறுதியான அடிப்படையாக விளங்குகிறது. தொழில்துறையில் குறிப்பிடத்தக்க அளவிற்கான வளர்ச்சியை நாம் பெற்றிருக்கிறோம்; ஆனாலும் செய்ய வேண்டியவைகள் ஏராளமாக உள்ளன. பொதுவாகத் தொழிற்சாலைகளை நகர்ப்புறங்களில் கூட்டாக நிறுவுகிற வாடிக்கையான மனநிலை உள்ளது. காரணம்; உற்பத்தியான பொருட்களை விற்பதற்கு நல்ல வாய்ப்பாகவும், போதுமான பண வசதிக்காகவும் மற்றும் எண்ணற்ற சாதகங்களுக்காவுமே அந்த எண்ணம் தோன்றுகிறது. தொழிலில் பின்தங்கிய பகுதிகளின் வளர்ச்சிக்காகத் தொழிற்சாலைகளை நிறைந்த அளவில் பரவலாக்குவதே நமது அரசின் தொழிற் கொள்கையாகும். இந்த நோக்கத்தில் கொள்கையை நிறைவேற்றிடத் தமிழ்நாடு அரசு மாநிலத் தொழில் நிறுவனக் கழகத்தை (SIPCOT) ஏற்படுத்தியுள்ளது.

புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்த அநேக பொது, மற்றும் தனியார் நிதி, நிறுவனங்கள் இருந்தபோதிலும், தொழில் நிறுவனக் கழகத்தின் தேவையின் காரணம்-இது பண உதவி தருவது மட்டுமல்லாமல் மற்ற துணை உதவிப் பணிகளையும் திட்டத்தை நிறைவேற்றுவதற்காகச் செய்து வருகிறது. திட்டத்தின் வளர்ச்சியில் தன்னைப் பங்குதாரராகக் கருதி அக்கறையுடன் செயலாற்றுகிறது.

சிப்காட் வரையறுக்கப்பட்ட பொது நிறுவனமாகும். ரூ. 5 கோடி மூலதனத்தைக் கொண்டு இயங்கி வருகிறது. இயக்குநர் குழு (Board of Directors), தமிழ்நாடு அரசின் நீண்ட அனுபவமிக்க அதிகாரிகள், கீர்த்தி வாய்ந்த தொழிலதிபர்களைக்கொண்டு இணைந்து நிர்வகிக்கப்பட்டு வருகிறது. சிப்காட், திறமை மிக்க அலுவலர்களுடன் தொழில் நுட்ப நிபுணர்கள் மற்றும் பொறியாளர்களைக்கொண்டு செயல்படுகிறது.

தமிழ்நாட்டில் நடுத்தர, மற்றும் பெரிய தொழிற்சாலைகள்வளர்ச்சிபெறச் செய்வதும், தொழில் தொடங்கும் முன்னேற்றமான பங்குதாரர்களுக்குக் குறிப்பாகப் பின்தங்கிய பகுதிகளில் தொழில் தொடங்குவோருக்கு ஊக்கமளிப்பதும் அரசின் நோக்கமாகும். சிப்காட், பிற்பட்ட மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில் வட்டாரத்தை வளர்ச்சி பெறச் செய்கிறது. தொழில் தொடங்குவோருக்குப் பல்வேறு வகையான உதவிகளைச் செய்கிறது.

பொது மற்றும் தனியார் நிறுவனத்திற்கு மட்டுமல்லாமல் கூட்டுறவுக் கழகம் மற்றும் பங்குதாரர்களின் நிறுவனத்திற்கும் உதவியளிக்கிறது. திட்டத்திற்கு நிதியுதவி அளிக்கு முன்னர் சமூகநலன், வேலை வாய்ப்பு, பிற்பட்ட வட்டாரத்தின் வளர்ச்சி இவற்றில் ஆராய்ச்சி முடிவெடுக்கப்படுகிறது. நிதியுதவி அளிக்கு முன்னர் திட்டத்திற்குத் தேவையான அனுமதி (Licence.) மற்றும் இதர ஒப்புதல்களும் பெற்றிருக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் நடுத்தர மற்றும் பெரிய தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்கு, தொழில் தொடங்குவோருக்கு ஊக்கமளிக்கும் வகையில், தொழிலின் ஆரம்ப வேலைக்கான பூர்வாங்கச் செலவுக்கு இத்திட்டத்தின் கீழ் மானியம் வழங்கப்படுகிறது. இலாபகரமான தொழில்பற்றிக் கண்டறிவதற்கு 10,000 ரூபாய்க்குக் குறைவான பூர்வாங்கச் செலவை சிப்காட் நிறுவனமே முழுதும் ஏற்றுக்கொள்கிறது.

ரூ. 10,000 முதல் ரூ. 20,000 வரை 90 சதவிகிதமும் ரூ. 30,000 வரை 80 சதவிகிதமும், ரூ. 30,000க்கு மேற்பட்டால் 75 சதவிகிதமும் பூர்வாங்கச் செலவிற்கு மானியமாக சிப்காட் வழங்குகிறது. மீதித் தொகையை மட்டுமே தொழில் தொடங்குவோர் ஏற்க வேண்டும்.

தருமபுரி, கன்னியாகுமரி, மதுரை, வடஆர்க்காடு, இராமனுதபுரம், தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய எட்டு மாவட்டங்களில் நடுத்தர மற்றும் பெரிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டால் விற்பனை வரி கட்ட வட்டியில்லாக் கடன் (Interest free Sales Tax loans) வழங்கப் படுகிறது.

சிப்காட் நிறுவனத்தின் பூரண ஒத்துழைப்புடன் வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள இராணிப்பேட்டையில் பல தரப்பட்ட தொழிற்சாலைகள் நிறுவிட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பலதரப்பான தொழில்கள் நிறைந்த அந்த இடம் 5 பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது.

1. கனரகத் தொழிற்சாலை

2. இரசாயனத் தொழிற் சாலை

3. மின்னியல் தொழிற்சாலை



இராணிப் பேட்டையில் அமையவிருக்கும் தொழிற்பேட்டையின் மாதிரி அமைப்பை (Model) அமைச்சர்கள் பார்வையிடுதல்.

4. நடுத்தரத் தொழிற்சாலை

5. சிறு தொழிற்சாலை

ஆகிய ஐந்து தொழிற்சாலைகளுக்குத் தேவையான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொழிற்சாலைகளுக்குப் போதுமான தண்ணீர் வசதி மிக முக்கியமான தேவையாக இருப்பதால், நாள் ஒன்றுக்கு 2 மில்லியன் கேலன் தண்ணீர் கொண்டு வருவதற்கு 46 இலட்சம் ரூபாய் செலவில் தண்ணீர் வழங்கும் திட்டம் ஏற்படுத்தப் பட்டுள்ளது. தொழிற்பேட்டையிலிருந்து 3 கி.மீ. தொலைவிலுள்ள பாலாறு, பொன்னை நதிகளிலிருந்து தண்ணீர் கொண்டு வரத் திட்டம் உள்ளது. 110/11 கேவி உள்ள தனியான துணை மின் நிலையம் தமிழ்நாடு மின்வாரியத்தால் கட்டப்பட இருக்கிறது.

தொழிற்- பேட்டைக்குத் தேவையான பொருட்களை எடுத்துச் செல்லத் தனி இரயில் நிலையம் அமைக்கப்பட்டு, அது ராணிப்பேட்டை இரயில் நிலையத்துடன் இணைக்கப்பட உள்ளது. தொழிற்பேட்டைக்கு வடிகால் வசதியும் அமைக்கத் திட்டம் ஒன்று உள்ளது. நிர்வாகக் கட்டடம் கட்டிக் கொண்டுள்ளனர். சிப்காட்டின் நிர்வாக அலுவலகம், அஞ்சல் அலுவலகம், வங்கியின் கிளை, தீயணைப்பு நிலையம் இன்னும் பிறவும் அதில் அமைய உள்ளன.

ஐந்து திட்டங்களுக்கான ஆரம்ப வேலைகளுக்கு அடிக்கல் நாட்டுவிழா 1973 நவம்பர் 15-ஆம் நாளன்று தமிழ்நாடு குரோமேட்ஸ் மற்றும் கெமிகல் லிமிடெட், பிக்மெண்ட்ஸ் லிமிடெட், எஸ். ஆர். பி. டுல்ஸ் லிமிடெட், சீகால்ஸ் லிமிடெட், அப்போலோ டியூப் லிமிடெட் ஆகிய ஐந்து தொழில்களுக்கும் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. ப.உ. சண்முகம் அவர்கள் அடிக்கல் நாட்டி வைத்து உரையாற்றினுர்கள். மின் துறை அமைச்சர் திரு ஓ.பி. இராமன் அவர்கள் மின்நிலையம் மற்றும் சிட்கோ தொழிற்பேட்டைக்கு அடிக்கல் நாட்டிவைத்து உரையாற்றினுர்கள். இந்தத் தொழிற்சாலைகள் அனைத்திலும் 1974-ல் உற்பத்தி தொடங்கிவிடும் என்று உறுதி கூறப்பட்டது.

திருமலை கெமிகல் லிமிடெட், சதர்ன் சின்தெடிக்ஸ் லிமிடெட், டைமண்டுசாஸ் மற்றும் டுல்ஸ் பிரைவேட் லிமிடெட், ரால்ஸ்டன் கெமிகல் மேனுபேக்சரிங்கம்பெனி பிரைவேட் லிமிடெட் ஆகிய தொழில் திட்டங்களுக்கு இடங்கள் ஒதுக்கப்பட்டு வேலைகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் வேலைகள் தீவிரமான முறையில் தொடங்கும்.

பல்வேறு வகையான உற்பத்திக்கு இன்னும் அநேக தொழிற்சாலைகள் தொடங்கப்பட உள்ளன. இராணிப்பேட்டையில் அமைய இருக்கின்ற சில தொழிற்சாலைகள் வளர்ச்சிக்கான ஆரம்ப வேலைகளைச் செய்துகொண்டிருக்கின்றன. அறிமுகமில்லாத அந்த இடங்களுக்குத் தொழில் தொடங்குவோரைக் கவர்ந்து இழுக்கும் அளவிற்கு எல்லா விதமான சிறந்த அடிப்படை வேலைகளையும் தமிழ்நாடு அரசும், சிப்காட் நிறுவனமும் செய்து கொடுத்துள்ளன.

விழாவிற்குத் தலைமை வகித்து, நிர்வாகக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி வைத்துத் தொழிலமைச்சர் திரு மாதவன் அவர்கள் உரையாற்றினுர்கள்.

''தொழில் துறையில் புது மலர்ச்சி பெறவும் பொருளாதாரத் துறையிலே வளர்ச்சி பெற வசதியாகவும் தொழிற்பேட்டை உருவாகிறது. இந்த ஆவலில் 1963-ல் 200 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டது. இன்று 7.5 கோடி ரூபாயில் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டுகிறோம். 1975-ஆம் ஆண்டுக்குள்ளாக 700 ஏக்கர் பரப்பள

வில் 70 கோடி ரூபாய் அளவில் திட்டத்தை நிறைவேற்ற உள்ளோம். பின்தங்கிய பகுதிகள் எல்லாம் முன்னேற வேண்டும் என்பது அரசின் கொள்கை. தொழில் வளர்ச்சிக்காக வட ஆர்க்காடு, இராமநாதபுரம் மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. தருமபுரியில் ஒசூர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. வட ஆர்க்காடு மாவட்டத்தில் இரண்டு சர்க்கரை ஆலைகள் தொடங்க உள்ளோம். அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் 8 சர்க்கரை ஆலைகள் ஏற்படுத்த உள்ளோம். எந்தத் தொழில் தொடங்கினாலும் இனி கிராமம் நோக்கித்தான் செல்லும். இந்தியாவில் தொழிலில் நான்காவதாக இருந்த தமிழ்நாடு மூன்றாவதாக வந்துள்ளது.

தனியாரின் ஆற்றல் திறமையைப் பயன்படுத்தி அரசும் தனியாரும் சேர்ந்து தொழில் தொடங்க வேண்டும். போடுகின்ற முதல் முன்பு கடன்; தற்போது முதலாகப் போடுகிறோம். தொழிலாளர்களோடு சேர்ந்து பாடுபட வேண்டும். கூட்டுறவுத்துறை மூலம் தமிழ்நாடு இந்தியாவுக்கே வழி காட்டுகிறது.'' – இவ்வாறு தொழில் அமைச்சர் தமது உரையில் குறிப்பிட்டார்.

விழாவிற்கு வந்திருந்த பொதுமக்கள், இராணிப்பேட்டை தொழிற்பேட்டை யாவதன் மூலமும், வட ஆர்க்காடு மாவட்டம் விவசாயத் துறையில் முன்னணியில் இருப்பதுபோல், தொழில் துறையிலும் ஏற்றம் பெறும் பொற்காலம் வந்து விட்டது என்ற இனிய உணர்வுடன் இல்லம் திரும்பினர்.





—ம. அ.

## நீதிமன்ற மொழி

நீதிமன்றங்களில் தமிழ் ஒலிக்கவேண்டும் என்று தமிழ்நாடு அரசு கருதி வருகிறது. தமிழிலே சிறந்த மாதிரித் தீர்ப்பு எழுதும் நீதிபதிகளுக்குப் பரிசுத் தொகை தந்து சிறப்புச் செய்து வருகிறது. என்றாலும் ஆங்கிலம் தான் பொருத்தமான நீதிமன்ற மொழி என்று சிலர் கருதுகிறார்கள்; கூறிவருகிறார்கள். இந்தக் கருத்து, தவறானதாகும். ஏனென்றால் ஆங்கிலம் நீதிமன்ற மொழியாவதற்கு முன்பு இங்கிலாந்தில் நீதிமன்றங்களில் இலத்தீன் மொழியும், பிரெஞ்சு மொழியும் இடம் பெற்றிருந்தன. 1731-ஆம் ஆண்டு இரண்டாம் ஜார்ஜ் மன்னர் காலத்தில் நீதிமன்றங்களில், சட்ட திட்டங்கள் சம்பந்தப்பட்டவைகளில் பிரெஞ்சு, இலத்தீன் ஆகிய மொழிகளுக்குப் பதிலாக ஆங்கிலம்தான் இடம் பெறவேண்டும் என்று ஓர் அவசர ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதன்பிறகுதான் ஆங்கில நாட்டிலேயே ஆங்கிலம் நீதிமன்றங்களில் ஒலிக்கத் தொடங்கியது.

ஆங்கிலம்தான் நீதிமன்ற மொழியாக நீடிக்க வேண்டும் என்றும், தமிழ் நீதிமன்ற மொழியாவது சரியல்லவென்றும் சொல்லிவருபவர்களின் கருத்தினை உடைப்பதற்கு இரண்டாம் ஜார்ஜ் மன்னர் அவசர ஆணை விதித்த செய்தி, உதவி செய்கிறது.


# காலக் கண்ணாடி

காலத்தைக் கடந்து கம்பீரமாக நிற்கின்றன, தாஜ் மஹால் போன்ற கவின்மிகு கட்டடங்கள். காலம் பதித்துச் சென்ற சுவடுகளை நாம் அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. வனப்பு மிகுந்திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள். அவற்றைவிட சாஸனங்களும் சரித்திரமுமே கால ஓட்டத்தைக் கண்ணாடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. கடந்த காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங்களும், பிற தஸ்தாவேஜுகளுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை.

மகத்தான நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது நவீனமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் அமரநிலைக்குரிய 'அந்த நாளை' ஆராய்ந்தறியப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ?



**சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,**
பள்ளிப்பாளயம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா

உயர்ரகத்தைக் குறிக்கும் வாட்டர் மார்க்

FDSSPB 777TMA



# பல்லாவரத்தார் பழந் தமிழ்க் காவலர்

தென்னாட்டுப் பெர்னார்ட்ஷா யார் என்றால் தயங்காமல், பேரறிஞர் அண்ணா என்று சொல்லி விடுவீர்கள். ஆனால், தமிழ்நாட்டு மில்டன் யார் என்று உங்களால் ஊகிக்கமுடிகிறதா?

'தனித்தமிழின் தந்தை' என்று தரணியிலுள்ளோர் போற்றிப் புகழ்ந்து வரும் மறைமலையடிகளார்தான் அவர்!

அவர் தமிழுக்கு ஆற்றிய தொண்டினைத் தமிழகம் என்றும் மறந்திடாது. அவர் இசை, நாடகம் முதலியவற்றை வளர்த்தவர். அவருடைய சாகுந்தல மொழி பெயர்ப்பானது, பிறமொழியிலிருந்து ஒரு நூலை எத்தனை அழகுற மொழிபெயர்க்க இயலும் என்பதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். முல்லைப் பாட்டாராய்ச்சி, பட்டினப்பாலை ஆராய்ச்சி போன்ற பல ஆராய்ச்சி நூல்களை எழுதிய அவர், 'ஞானசாகரம்' (Ocean of wisdom) என்ற தமிழ்ப் பத்திரிகையை நடத்தியும், Oriental mystic myna' என்ற பெயரில் உள்ள ஓர் ஆங்கில இதழினை நடத்தியும் தமிழிலக்கிய உலகுக்குப் பெருந் தொண்டு புரிந்திருக்கிறார். குறிப்பாக இயல் தமிழுக்கு அவர் நூல்களனைத்துமே சிறந்த எடுத்துக் காட்டாய்த் திகழ்கின்றன.

இவ்வாறு இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தமிழ்ப் புலவராய் விளங்கிய மறைமலையடிகளார் வாழ்ந்த இல்லம், இன்று கவின்மிகு கலைமன்றமாய்க் காட்சியளிக்கிறது.

சென்னைப் பல்லாவரம் சாவடித் தெருவில் கம்பீரமாய் காட்சியளிக்கும் இந்த இல்லத்தை இன்று சுற்றுலாவுக்குச் சிறந்த இடமாகத் தமிழ்நாடு அரசு தேர்ந்தெடுத்திருக்கிறது.

இல்லம் அமைந்துள்ள சாலை, அதன் சுற்றுப்புறம் முதலானவை செம்மைப்படுத்தப்படவும், பெயர்ப்பலகைகள் முதலியன பொருத்தவும் தமிழக அரசு தக்க நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. தமிழக, மேலைநாட்டுப் பயணிகளைக் கவரத்தக்க வகையில் இந்த இல்லம் சீர்படுத்தப் பெறும் என்பதையும் இங்குக் குறிப்பிட வேண்டும்.

பல்லாவரத்திலுள்ள அரசினர் கழக உயர்நிலைப்பள்ளிக்கு

'மறைத்திரு மறைமலையடிகள் அரசினர் உயர்நிலைப்பள்ளி' என்று பெயரிடவும் தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ள தையும் நாம் பெருமையோடு குறிப்பிட வேண்டும்.

மறைமலையடிகள் 1911-ஆம் ஆண்டில் இந்த இடத்தை வாங்கி இக்கட்டடத்தைக் கட்டினர். இதனைக் கட்டுவதற்கு இவரது மருமகனர் திரு. வ. திருவரங்கம்பிள்ளை அவர்கள் கொழும்பிலிருந்து பணம் திரட்டி உதவி வந்தார்.

1962-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 12-ஆம் நாள் இந்த இல்லம் கலைமன்றமாகத் திறந்து வைக்கப் பெற்றது. இதற்கு மைய அரசும், தமிழக அரசும் பெருந்தொகைகளை நன்கொடைகளாக வழங்கியிருக்கின்றன.

அமைதியான சூழலில் அமைந்துள்ள இந்த இல்லத்தைச் சுற்றி அழகிய தோட்டமும், கூட்டங்கள் நடத்துவதற்கான ஒரு மண்டபமும் இருக்கின்றது. மாளிகையின் உட்புறச் சுவர் மழமழப்பாகவும், சுத்தமாகவும் காட்சியளிக்கிறது.

இக்கலை மன்றத்திலே அடிகளார் வாழ்ந்த காலத்தில் புழங்கிய பொருள்கள், எழுதிப் பதிப்பித்த முதற்பதிப்பு நூல்கள், பிற்பதிப்பு நூல்கள், கையெழுத்துப் படிகள், கடிதங்கள், அடிகளார் அணிந்த மாதிரி உடைகள், கட்டை கான்வாசு மிதியடிகள், கழுத்திலே அணிந்திருந்த உருத்திராட்ச மணிகள், மூக்குக் கண்ணுடி, பூதக் கண்ணுடி, விசிறி, விளக்கு, அடிகளாரின் பல்வேறு நிலை உருவப்படங்கள், புலவர் பெருமக்களின் கடிதங்கள், கைச் சாத்துக்கள், அடிகளார் தம் கைப்பட எழுதியுள்ள சோதிடக் குறிப்புகள் முதலியன காட்சிக்கு வைக்கப்பெற்றிருக்கின்றன.

அடிகளார் தம் அழகிய மாளிகையின் சுற்றுப்புறத்தில் உலாவி வரும்பொழுது உட்கார்ந்து கொள்ளுதற்கு ஏற்ற இரு திண்ணைகள் முன்பக்கத்திலும் பின்பக்கத்திலுமுள்ளன. வீட்டினுக்குள் அழகிய மேசையும், மேசையின் மேல் கண்ணுடி நூற்பேழையும் உள்ளன. நூற்பேழையில் படித்து முடிக்க வேண்டிய நூற்சுவடிகளே இருக்கும். படித்து முடித்த பின்னரே அவை நிலைப் பேழையிற்போய் நிலையுறும். மேசையின் முன்னுள்ள நாற்காலி, மெத்தை வைத்துத் தைத்த தாய் அழகியதாய்க் காணப்படுகிறது. அடிகளார் அதன் மீதமர்ந்து படிப்பார். இதைப் போல வேறிரு நாற்காலிகளும் உள்ளன. அவை விருந்தினராய் வருவோர்க்குப் பயன்பட்டன. பக்கத்தில் சாய்ந்து கொள்வதற்கு ஏற்ப ஓய்வு நாற்காலி யொன்றும் அமைந்திருக்கின்றது. அதில் அடிகளார் சிலவேளைகளில் சாய்ந்த வண்ணம் படிப்பதும் ஓய்வு கொள்வதுமுண்டு. இதுபோல் மேல் மாடியிலும் உள்ளன.

அவர் தாமே தம் புத்தகங்களுக்கு அட்டை போட்டு வைத்திருக்கும் ஒழுங்கை நாம் அவரிடம் கற்றுக் கொள்ள வேண்டும். இவர் பயன்படுத்திய சில நூல்கள் கண்ணுடிப் பேழைகளில் பார்வைக்காக வைக்கப் பெற்றுள்ளன.

அடிகளார் முதற்கண் பிறமொழி கலந்து எழுதியதைத் தனித் தமிழில் தாமே திருத்தியமைத்த கையெழுத்துப் பிரதிகளும் காட்சிக்கு வைக்கப் பெற்றுள்ளன. மறைமலையடிகளாரின் மணிமணியான கையெழுத்துக்களை, அவரது கையெழுத்துப்படிகள் நமக்குக் காட்டுகின்றன. அவர் எழுதிய உயில் ஒன்றும் இங்கே இருக்கின்றது.

புத்தாண்டு பிறக்கிறது என்று வைத்துக் கொள்வோம். உடனே காலண்டர், டைரி என்று வாங்குவதற்காக நண்பர்களிடம் நாளும் நடையாய் நடக்கிறோம்! ஆனல், எத்தனை பேர் இன்று நாட்குறிப்பைத் தவருமல் எழுதி வருகின்றனர்? ஆரம்பத்தில் ஏதோ ஆர்வத்தின் காரணமாக ஒரு சில தாள்களில் கிறுக்குவர்; பிறகு அடியோடு அதை நிறுத்துவர்!



முதல்வர் கலைஞர் அவர்களும், அன்றைய பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எஸ்.ஜே. சாதிக் பாட்சா அவர்களும் கலைமன்றத்தை 27—4—1972 அன்று பார்வையிடல்.

ஆனால், மறைமலையடிகளார் அவர்களோ எதுவும் கலையுணர்வோடு இருக்கவேண்டும் என்று விரும்புபவர் ஆயிற்றே! அதனால், அவர் சிறிதும் சோம்பலில்லாமல் நாளும் நாட்குறிப்பை எழுதி வந்துள்ளதை இங்கே கண்டு மகிழ்கிறோம். சுமார் 40 ஆண்டுகளாகத் தொடந்து அவர் 'நாட்குறிப்கள்' எழுதி வைத்திருக்கிறார் என்பதைப் பார்க்கும்போது நம்மால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

இவை மட்டுமல்ல; வீட்டுச் செலவுக் கணக்குகளையும் தம் கைப்பட எழுதி வைத்துள்ளார். அந்த நோட்டுப் புத்தகங்களையும் இங்கே கண்டு வியக்கிறோம்.

*1932*-ல் நடந்த ஒரு திருமணச் செலவுக் கணக்குகளை எழுதி வைத்திருக்கிறார் பாருங்களேன்!

துவரம்பருப்பு 8 படி ரூ. 2. உளுத்தம்பருப்பு 7 படி ரூ. 2. முந்திரி 1 வீசை ரூ. 1 . 7 சவரன் ரூ. 125. பட்டைக் கொலுசு, மூக்குத்தி ரூ.16-6-0.



அடிகளார் வாழ்ந்த இல்லம்--கலைமன்றம்

மறைமலையடிகளாரின் படுக்கை அறை கீழே ஒன்றும் மாடியில் ஒன்றும் உள்ளன 300-க்கு மேற்பட்ட தமிழக, மேலைநாட்டு அறிஞர் பெருமக்களின் திருவுருவப்படங்களும், தமிழ் இலக்கியக் குறிப்புகளும் இவ்வில்லத்தில் காட்சிக்கு வைக்கப் பெற்றுள்ளன.

இவையன்றி அடிகளார் பயன்படுத்திய பீங்கான் தட்டுகளும் இங்கே உள்ளன. பீங்கான் சாமான்களில் சாப்பிடுவதையே அவர் பெரிதும் விரும்புவாராம். இசையில் அவருக்கிருக்கும் ஈடுபாட்டினை அவர் பயன்படுத்திய கிராமபோனும், இசைத் தட்டுகளும் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

இந்த இல்லத்தில் அடிகளார் சொந்தமாக ஓர் அச்சகத்தை நடத்தி வந்தார். அதற்குப் பெயர் 'திருமுருகன் அச்சகம்' (T. M. Press). அது இருந்த இடத்தில் இன்று காட்சிப் பொருள்கள் வைக்கப்பெற்றுள்ளன. அச்சகம் இருந்தபோது சில சமயங்களில் அடிகளாரே 'டிரெடில் மிஷினை' இயக்குவாராம்!

இவ்வில்லத்தின் மாடியில் அடிகளார் வழிபட்ட அம்பலவாணர் திருக்கோயிலும், அடிகளாரின் ஆசிரியர் சைவ சித்தாந்த சண்ட மாருதம் சோமசுந்தர நாயகர் அவர்களின் திருவுருவப் படமும் காட்சி தருகின்றன.



கலைமன்றத்தின் ஒரு தோற்றம்

இக்கலை மன்றம் காலை 8 மணி முதல் பகல் 12 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் திறந்திருக்கின்றது. இங்கே உள்ள சிறு நூலகத்தில் 82 பேர் உறுப்பினர்களாக இருந்து பயன்பெற்று வருகின்றனர்.

மறைமலையடிகளார் துயிலெழுந்தபின் செய்வன என்னென்ன என்பதை நாம் தெரிந்துகொள்ளவேண்டாமா? இக்கலை மன்றத்தில் அவற்றை விளக்கமாய் எழுதி வைத்திருக்கின்றனர். அதில் அவரது ஒரு நாளைய பணிகள் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளன:

''அடிகளார் இரவு 1 மணிக்குப் படுத்துக் காலை 8 மணிக்குக் கண் விழிப்பார். எழும் பொழுதே 'தோலும் துகிலும்' என்னும் திருவாசகச் செழுமறை பாடிக்கொண்டேயெழுவார். எழுந்ததும் தம்மடிகளை மிதி பாயின் மீது வைத்துத் துடைத்துக்கொண்டு நிலத்தில் அடிபடாமல் இரட்டாலும் பயினு (இரப்பர்)லும் செய்த உறையில் நுழைத்துக் கொள்வார்.

''பின் மேன்மாடிக்குச் செல்வார். நிலைக்கண்ணாடியில் தம்மைக் காண்பார். பெரும்பாலும் காம்போதி, சுருட்டி, மோகனம் முதலிய இசைகளில் தேவார, திருவாசகப் பாடல்களைப் பாடிக் கொண்டே நூற்பேழைகளை நோக்குவார். ஆங்காங்கு மாட்டப்பட்டு விளங்கும் தெய்வத் திருவுருவப் படங்களையும் சிற்பங்களையும் வணங்கிக் கொண்டும் சாளரங்கள் காற்றுப் போக்கிகளைத் திறப்பார். அப்பொழுதும் பாடுவது நிகழ்ந்து கொண்டேயிருக்கும்! இறுதியில் மாடியில் நூல் நிலையத்தின் நடுநாயகமாக மாளிகையின் மேற்சுவரைச் சார்ந்த எண்கோண வடிவில் அமைந்துள்ள திருக்கோயிலில் அம்பலவாணர், அம்மை திருவுருவங்களின் திருமுன்னின்று மனமுருகப் பாடி வழிபடுவர். பின் கீழிறங்குவர். 8-30 மணிக்கு மாளிகையின் முன்புற மேடையை அடைவர். தம் அடிகளில் மர மிதியடிகளை அணிந்து கொள்வர். தோட்டத்திலிறங்கி மாளிகையைச் சுற்றி வருவர். சுற்றி வரும்போதே வேம்பு அல்லது ஆலங்குச்சிகளில் ஏதாவதொன்றினால் பல் துலக்கிக்கொண்டே விரைவாக உலாவி வருவர். நாட்கடன் முடிப்பர். நுணுத்தழையாற் பற்களையும் ஈறுகளையும் தூய்மை செய்து கொள்வர். வெந்நீரால் நீராடுவர். இதற்குள் மணி 10 ஆகும். பின் வெண்ணீறணிந்து மூச்சுப் பழக்கம் செய்வர். தணலமை இருப்புச் சட்டியில் நறுமணப் புகை கமழ்ந்து விம்ம நொசிப்பு என நுவலப்படும் நிட்டை புரிவர். பின் காலைச் சிற்றுணுச் சிறிதே அருந்துவர்.

''பின் 11 மணிக்கு அமர்ந்து 2 மணி வரையில் நூல்களைப் படித்தும் ஆராய்ந்தும் எழுதுவர். 2 மணிக்குப் பகலுணவு கொள்வர். 3 முதல் 4 வரையில் சற்றே படுத்து ஓய்வு கொள்வர். சிற்சில வேளைகளில் 4 மணி முதல் 6 மணி வரை மக்களையும் உடன் வைத்துக் கொண்டு தோட்டப் பணி புரிந்தும் புரிவித்தும் வருவர்......''

இவ்வாறு அன்றாட அலுவல்களை ஒழுங்காக அமைத்துக் கொண்டு செயலாற்றி வந்த அவரது வாழ்க்கை, நமக்கெல்லாம் ஒரு பாடமாகத் திகழ்கிறது.

வாழ்ந்து மறைந்த பெரியார்கள்-வாழ்க்கைக்கு வழிகாட்டிகளாய்த் திகழ்ந்த அறிஞர்கள்-அவர்கள் வாழ்ந்த இல்லம், அவர்கள் பயன்படுத்திய பொருள்கள் முதலானவை அரசினரால் பாதுகாக்கப்பட்டும், பொது மக்களுக்குப் பயன் தரத்தக்க வகையிலும் அமைவதை நாம் பார்க்கிறோம்.

மேலைநாட்டு அறிஞர் ஷேக்ஸ்பியர் பிறந்து வாழ்ந்த இடம், இன்று ஒரு பெரிய நகரமாகக் காட்சியளிக்கிறது. அவர் வாழ்ந்த இல்லமும். அவர் பயன்படுத்திய பொருள்களும் அங்கே கலைமன்றமாய் விளங்கி வருகின்றன. இதேபோல எடின்பரோவில் வால்டர் ஸ்காட் வாழ்ந்த இல்லமும், மாஸ்கோவில் டால்ஸ்டாயின் இல்லமும் பொதுமக்கள் பயன் பெறுவதற்காகப் பாதுகாக்கப்பட்டுக் கலைமன்றங்களாகக் காட்சியளிக்கின்றன.

அதைப்போலத் தனித்தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்த தகைமையாளர் மறைமலையடிகளாரின் இல்லத்தையும் இன்று நாம் கலைமன்றமாக, கலைக் கோயிலாகப் பாதுகாத்துப் பயன்பெற்று வருகின்றோம்.

''தமிழனுக்கென்று ஒரு தனி மொழி, கலை, நாகரிகம், பண்பாடு இருக்கிறதா?'' என்று 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் எழுதிக் கேட்டவர்கள் எத்தனை பேர்! அவர்களுக்கெல்லாம் விடை தரும் வகையிலே, ''தமிழுக்கென்று தனி மொழி உண்டு, அது தனியாக இயங்கும் தன்மையது, தனியே கலை, பண்பாடு, வரலாறும் உண்டு'' என்று ஆங்கிலத்திலும் தமிழிலும் ஆணித்தரமாக எழுதி நிறுவிய பெருமகனார் மறைமலையடிகளார் அன்றோ? எனவே, அவர் வாழ்ந்த இந்த இல்லம் நமது உள்ளத்தில் என்றும் நின்று இலங்கும் என்பதில் சிறிதும் ஐயப்பாடில்லை!

—பி. வி. ஜி.



தமிழ் வளர்த்த மறைமலையடிகளை நினைவு செய்யும் வகையில் சைதையில் உள்ள மர்மலாங் பாலத்தை மறைமலையடிகளார் பாலம் எனத் தமிழ்நாடு அரசு மாற்றியுள்ளது! இந்தப் பாலம் இந்தியாவிலேயே அகலமானது என்பது குறிப்பிடத்தக்கது!






## எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!

# சேமிப்புப் பழக்கமே
# எதிர் காலத்திற்கு ஆக்கம் தரும்

சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்) வளரும் மாதச்சேமிப்புத் திட்டமும் ஆகும்.

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் | ரூ. 5 | ரூ. 355 |
| | ரூ. 10 | ரூ. 710 |
| வளரும் மாதச் சேமிப்பு | ரூ. 5 | ரூ. 337.50 |
| | ரூ. 10 | ரூ. 675.00 |

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது. சிறுசேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.

இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.

- சிறுசேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு



# நெற்பயிர் காப்போம் நெல்மணி குவிப்போம்



உழுது பரம்படித்து, உரமிட்டு, நாற்றுநட்டு, தண்ணீர் விட்டுவிட்டால் மட்டும் நெல் விளைந்துவிடுமா? விளையாது! ஏன்?

பூச்சிகள், நோய்கள், கால் நடைகள் ஆகியவற்றின் தாக்குதலிலிருந்தும் நெற்பயிரைக் காத்திட வேண்டும். அப்பொழுதுதான், நெற்பயிர் நன்கு வளர்ந்து, செழித்து வளமான கதிர்களையும், மணிகளையும் கொடுத்திடும்.

**"ஏரினும் நன்றும் எருவிடுதல் கட்டபின்**
**நீரினும் நன்றதன் காப்பு"**

என்ற திருக்குறளும் பயிர்ப் பாதுகாப்பின் இன்றியமையாமையை நன்கு வலியுறுத்துகிறது. ஆனால் நாம் பயிர்ப் பாதுகாப்பில் போதிய கவனம் செலுத்தி வருகின்றோமா என்றால், இல்லை என்றே சொல்ல வேண்டும்!

நமக்குத் தலைவலி என்றால் மாத்திரைகளைத் தேடுகின்றோம்!

நமக்குச் சிறு அளவு காய்ச்சல் என்றாலும் மருத்துவர்களைத் தேடி ஓடுகின்றோம்! ஆனால் நமது பசிப்பிணி தீர்த்து நம்மை வாழ வைக்கும் பயிர்களில் பூச்சிகள் வந்து தாக்கினால்—நோய்கள் தோன்றிச் சேதம் விளைவித்தால்—நாம் கவலையின்றி இருந்து விடுகின்றோம்! இது ஒருவகையில், நம்மை நாமே அழித்துக் கொள்வதற்கு ஒப்பானதாக உள்ளது.

பயிர்ப்பாதுகாப்பு முறைகளை ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளில் நிரந்தரப் பண்ணை வேலைகளில் ஓர் அங்கமாகவே கருதுகின்றனர். ஆனால் நமது நாட்டு உழவர் பெருமக்களில் பலர் 'பூச்சிகள் அல்லது நோய்கள் வந்தபின் மருந்து தெளித்துக்கொண்டால் போகிறது' என்ற மனப்பான்மையுடன் இருந்து வருகிறார்கள்! 'நோய் வந்தபின் மருந்து கொடுத்துக் குணப்படுத்துவதைவிட வருமுன் காப்பதே சிறந்தது!' ("Prevention is better than cure!") என்பதை இன்னும் நமது நாட்டு உழவர் பெருமக்களில் பெரும்பான்மையினர் உணரவில்லை! இதன் காரணமாகவே, பயிர்ப் பாதுகாப்பு முறைகள் நமது உழவர் பெருமக்களிடையே பெரும்பாலும் அவ்வப்பொழுது தோன்றும் தற்காலிகத் தேவையாக உள்ளதே தவிர, பண்ணை நிருவாகத்தில் முக்கியமானதொரு பணியாகக் கருதப்படவில்லை!

ஜப்பான் நாட்டில் சராசரியாக எக்டேருக்கு 35 ரூபாயும், அமெரிக்காவில் சராசரியாக எக்டேருக்கு 110 ரூபாயும் பயிர்ப்பாதுகாப்பிற்காகச் செலவு செய்கின்றார்கள். ஆனால் நமது நாட்டில் பயிர்ப் பாதுகாப்பிற்காகச் சராசரியாக எக்டேருக்கு 1.50 ரூபாய் மட்டுமே செலவிட்டு வருகிறோம்! இதிலிருந்து பயிர்ப் பாதுகாப்பில் நாம் போதிய கவனம் செலுத்தவில்லை என்பதும், பயிர்ப்பாதுகாப்பில் மேலும் தீவிரக் கவனம் செலுத்த வேண்டும் என்பதும் தெளிவாகிறது.

பூச்சிகளும், நோய்களும் தாக்குவதால் சராசரியாக மொத்த மகசூலில் 10 சத அளவு குறைந்துவிடுகிறது என்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இந்தியாவில், பூச்சிகளாலும், நோய்களாலும் ஆண்டுதோறும் சராசரியாக ஏறக்குறைய 1,000 கோடி ரூபாய் மதிப்புள்ள மகசூல் குறைந்துவிடுவதாகவும் கணிக்கப்பட்டுள்ளது.

பூச்சிகளும், நோய்களும் வெகு தீவிரமாகப் பரவித் தாக்கும்பொழுது இன்னும் பல மடங்கு அதிக நட்டம் ஏற்படுகிறது. ஆகவே, பொதுவாக நமது நாட்டிற்கும், குறிப்பாக உழவர் பெருமக்களுக்கும் ஏற்படும் நட்டத்தைக் குறைத்திடப் பயிர்ப்பாதுகாப்பில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.



அரிசி உற்பத்தியில் தன்னிறைவு நிலைமையையும், உபரி நிலைமையையும் ஏற்படுத்தியுள்ளதுடன், அனைத்து இந்தியாவிலும் சராசரி எக்டேர் நெல் விளைச்சலில் முதலிடம் எடுத்துள்ள தமிழக உழவர் பெருமக்கள், நெற்பயிர்ப் பாதுகாப்பில் தீவிரக் கவனம் செலுத்தினால், தமிழகம் அரிசி உற்பத்தியில் மேலும் சிறந்து தன்னிகரற்று விளங்கும் என்பது திண்ணம்!

தமிழ்நாட்டின் முக்கியப் பயிராக உள்ள நெல்லில், ஏறத்தாழ 85 வகையான பூச்சிகள் தோன்றி, மிகவும் கடுமையாகத் தாக்கிப் பெருஞ்சேதம் விளைவிக்கின்றன. எடுத்துக் காட்டாகச் சொல்ல வேண்டுமானால், நெல்லைத் தாக்கும் குருத்துப் பூச்சி மட்டும் கிட்டத்தட்ட 44 சத அளவுக்கு மகசூலைக் குறைத்து விடுகிறது!

நெற்பயிரின் பல கட்டங்களிலும் முக்கியமாகப் பின் கண்ட பூச்சிகள் தோன்றக் கூடும்.

### நாற்றங்காலில் தோன்றும் பூச்சிகள்

1. பேன்கள்,
2. தத்துப்பூச்சிகள்
3. படைப்புழுக்கள்
4. சிலந்திப் பூச்சிகள்

### நட்ட இளம்பயிரில் தோன்றும் பூச்சிகள்

1. குருத்துப்பூச்சிகள்
2. தத்துப்பூச்சிகள்.
3. ஆனைக்கொம்பன் ஈக்கள்.
4. நண்டுகள்.
5. சிலந்திப் பூச்சிகள்.

### தூர்கிளைக்கும் சமயத்தில் தோன்றும் பூச்சிகள்

1. குருத்துப்பூச்சிகள்.
2. ஆனைக்கொம்பன் ஈக்கள்.
3. மாவுப் பூச்சிகள்.
4. இலைசுருட்டும் புழுக்கள்.
5. வெட்டுக்கிளிகள்.
6. சிலந்திப் பூச்சிகள்.

## கதிர் தோன்றும் சமயமும், அதன் பிறகும் தோன்றும் பூச்சிகள்

1. குருத்துப் பூச்சிகள்.
2. மாவுப் பூச்சிகள்.
3. கதிர் நாவாய்ப் பூச்சிகள்.
4. புகையான் தத்துப்பூச்சிகள்

ஆகவே, நெற் பயிர்ப்பாது காப்பில் தமிழக உழவர் பெரு மக்கள் தீவிரக் கவனம் செலுத்த வேண்டுமென்பதற் காக முக்கிய பூச்சிகளையும், அவைகளால் ஏற்படும் தீங்கு களையும், அவைகளைக் கட்டுப் படுத்தும் முறைகளையும் விளக்கமாகக் கீழே கொடுத் துள்ளோம்.

## நெற்பயிரைத் தாக்கும் பூச்சி களும் தடுப்பு முறைகளும்

### குருத்துப் பூச்சி

அறிகுறி :—

*நடுக்குருத்து காய்ந்திருக் கும்; பிடித்து இழுத்தால் கை யோடு வந்துவிடும்.

*வெளிவரும் கதிர் வெண் கதிராக இருக்கும்; இழுத்தால் வந்துவிடும்.

*குறுவையில் சேதம் குறைவு; சம்பாவில் அதிகம்.

*தாளடியில் அதிகமாக நட்டம் ஏற்படும். அதாவது ஏக்கருக்குச் சராசரியாக 3—4 மூட்டை நெல் மகசூல் குறைந் துவிடும்.

*தண்டில் சிறிது துவாரத் தையும் காணலாம்.

*தண்டை நன்கு பிளந்து சோதித்தால், சில சமயம் அதன் புழுவையும், சில சமயம் அதன் கழிவுகளையும், கூட்டை யும் காணலாம்.

காரணம் :—

குருத்தில் உள்ள புழுவால் ஏற்படுகிறது.

இதன் தாய் ஒரு அந்துப் பூச்சியாகும்.

இப்பூச்சி, தோகையில் முட் டையிடுகிறது.

இதன் முட்டைகள் குவிய லாக, இளம் மஞ்சள் நிற பஞ்சு போன்ற உரோமங்களால் மூடப்பட்டிருக்கும். எளிதில் கண்டு சேகரித்து அழிக்கலாம்.

முட்டைகளிலிருந்து ஏழு நாட்களில் புழுக்கள் வெளி வந்து, தண்டினுள் நுழைந்த பின்பு, குருத்தைத் தின்று வளருகின்றன. பின் அந்துப் பூச்சியாக வெளிவருகின்றன. அந்நிலையில் மேல் குருத்து துண்டிக்கப்பட்டு காய்ந்து விடுகிறது.

தடுப்பு :—

பொதுவாக அக்டோபர் மாதத்திலிருந்து இதன் தாக்கு தல் அதிகமாகும். எனவே சம்பா, தாளடி பயிர்களுக்கு மருந்து தெளிப்பது அவசியமா கும்.

### இட வேண்டிய மருந்துகள்

பாரத்தியான் 200 மில்லி லிட்டர்

அல்லது

எண்ட்ரின் 400 மில்லி லிட்டர்

அல்லது

பெனிட்ரோத்தியான் (சுமிதி யான்) 250 மில்லி லிட்டர்

அல்லது

எண்டோசல்பான் (தியோ டான்) 300 மில்லி லிட்டர்

அல்லது

பாஸ்பாமிடான் (டைமெக் ரான்) 110 மில்லி லிட்டர்

இவற்றில் ஒன்றினை 200 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும். விசைத் தெளிப் பானில் தெளிக்க 40—60 லிட்டர் நீரில் கலக்கவும்.

### தெளிக்க வேண்டிய சமயமும், தவணைகளும்

நாற்றங்காலில் ஒரு தடவை.

நட்ட 15 நாளில் ஒரு தடவை.

நட்ட 36 நாளில் ஒரு தடவை.

தொண்டைக் கதிர் சமயம் ஒரு தடவை.

பாசன நீரில் 'காமா பி.எச். சி' குறுணைகள், 'எண்ட்ரின்' குறுணைகள், காமா 'பி.எச். சி.- கார்பரில்' குறுணைகள், 'டய சினன்' குறுணைகள் முதலியவை இடுவது பயனுள்ளது எனத் தெரிய வந்துள்ளது.




குருத்துப் பூச்சி

### நெற்பேன்

அறிகுறி :—

*நாற்றங்காலில், நாற்றுக் கள் பசுமை இழந்து, மஞ்சள் நிறமடைந்து, தீய்ந்ததுபோல் காணப்படும்.

*நாற்றுக்கள் சேதமடை யும்.

*தோகையைத் தட்டினால், சிறு பூச்சிகள் நீரில் விழுந்திருப் பதைக் காணலாம்.

காரணம் :—

நெற்பேன்களால் இந்நிலை ஏற்படுகின்றது. இப் பூச்சிகள் நாற்றின் தோகைகளில் தங்கி வாழுகின்றன. இளம் பூச்சி கள், தோகைகளில் சாற்றை உறிஞ்சியும், பச்சயத்தைச் சுரண்டியும் சேதம் விளைவிக் கின்றது.









தடுப்பு :—
பி. எச். சி. 10 சத விகிதத் தூளை ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவ வேண்டும். 'எண்ட்ரின்', 'பாரத்தியான்', 'பெனிட்ரோத்தியான்', 'பாஸ்பாமிடான்', 'எண்டோசல்பான்' முதலிய மருந்துகளை நீரில் கலந்து தெளித்தும் இதனைக் கட்டுப்படுத்தலாம்.

## தத்துப் பூச்சிகள்

அறிகுறி :—

நெற்பயிரின் தோகைகளில் நுனி காய்ந்து காணப்படும். கடுமையான தாக்குதலால், பயிர் பசுமை இழந்து, மஞ்சளாகி, பழுப்புத் தட்டிவிடும். மிகவும் அதிகமானால், பயிர் காய்ந்துவிடும். தோகையைத் தட்டினால் பச்சை, வெள்ளைப் பூச்சிகள் குதித்துத் தாவுவதை காணலாம்.

காரணம் :—

சிறிய பச்சை, வெள்ளைத் தத்துப் பூச்சிகளாலும், அவற்றின் குஞ்சுகளாலும் இந்நிலை ஏற்படுகிறது. இவைச் சாற்றை உறிஞ்சி வாழுகின்றன. விளக்கு ஒளியால் பச்சைத் தத்துப் பூச்சிகள் மட்டும் கவரப்பட்டு ஆயிரக்கணக்கில் குதித்துக் கொண்டிருக்கும். விளக்கு வைத்ததும்ஓரளவிற்கு பச்சைத் தத்துப் பூச்சிகளை மட்டும் ஒழிக்கலாம்.

தடுப்பு :—

பச்சைத் தத்துப் பூச்சிகள் மட்டும் இருந்தால் 'டி.டி.டி. 5' சதத் தூளைஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவ வேண்டும். வெள்ளைத் தத்துப் பூச்சிகள் மட்டும் இருந்தால் 'பி.எச்.சி. 10' சதத் தூளை ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவ வேண்டும். இரு வகைத் தத்துப் பூச்சிகளும் இருந்தால் 5 கிலோ 'டி. டி. டீ. 5' சதத் தூளையும், 5 கிலோ 'பி. எச். சி. 10' சதத் தூளையும் கலந்து தூவ வேண்டும்.




குறிப்பு :—

தத்துப் பூச்சிகள், பயிரின் வலிமையைக் குறைத்து நோய்களுக்கு இலக்காக்குகின்றன.

நோய்களையும் துரிதமாகப் பரப்புகின்றன.

## நெல் மாவுப் பூச்சி

அறிகுறி :—

நெற் பயிரில், இங்குமங்குமாக, திட்டுத் திட்டாக பயிர் குழிந்து காணப்படும். நாளடைவில் இது அதிகரிக்கும். அதன்பின், பயிர் எரிந்து அழிந்தது போன்று காணப்படும். கதிர் வெளி வராமல், பதராகிக் குருத்தினுள்ளே அமுங்கியிருக்கும். மாவு போன்ற ஒரு வகைப் பொருளால் மூடப்பெற்ற முட்டை வடிவப் பூச்சிகளைக் காணலாம். பூச்சிகள் இராவிடினும், மாவு மட்டும் ஒட்டியிருப்பதைக் காணலாம்.

காரணம் :—

மாவுப் பூச்சிகள் நெற் பயிரின் சாரை உறிஞ்சுவதால் மேற்கூறிய அறிகுறி ஏற்படுகிறது. தாய்ப் பூச்சிகள் முட்டையிட்டு, குஞ்சுகள் வெளிவருகின்றன. அவை, செடியின் சாற்றை உறிஞ்சி வாழ்கின்றன. பாசன நீரில் மிதந்தும், ஊர்ந்தும் அடுத்தடுத்த இடங்களுக்குப் பரவுகின்றன. நெற் பயிர் இல்லாத நிலையில் புற்களில் வாழ்கின்றன.

தடுப்பு :—

வரப்புகளில் புற்கள் இல்லாமல் கவனிக்க வேண்டும். குழிந்து காணப்படும் இடங்களில் உள்ள பயிர்களை எடுத்துத் தீயிட வேண்டும். ஐ.ஆர். 8, ஐ. ஆர். 5 போன்ற அடர்ந்து வளரும் பயிரில், இவை தங்க வசதியிருப்பதால் தீயிட்டு அழிப்பது சிறந்தது. மற்றபடி 'பாரத்தியான்' மருந்தை 200—300 மில்லி லிட்டரை 200 லிட்டர் நீரில் கலந்து தெளிப்பது சிறந்தது.

'டி. டி. டீ.', 'எண்டிரின்' பயனற்றது.

குறிப்பு :—

பாரத்தியானை இந்த அளவில் விசைத் தெளிப்பானில் உபயோகிக்கக் கூடாது. இந்த பூச்சியை அழிக்க கையால் இயங்கும் தெளிப்பானை மட்டுமே உபயோகிக்க வேண்டும்.






காரணம் :—

பயிரின் அடிப் பகுதியில் இப் பூச்சிகள் பயிரின் சாற்றை உறிஞ்சி உண்டு வாழுகின்றன.

அதனால் பயிர் முன்னதாகவே சாய ஏதுவாகும்.

பயிர் சாய்ந்த நிலை அவற்றிற்கு நல்ல சுமுகச் சூழ்நிலையாக உள்ளது. அதனால் துரிதமாகப் பெருகி தாக்குதல் கடுமையாகிறது.

சாயாத பயிரிலும் சில சமயங்களில் அதிகமாகப் பெருகிச் சேதம் விளைவிக்கும்.

தடுப்பு :—

பயிர் சாயும் முன் மருந்தைத் தூவுவது ஏற்றது. நீரை வடித்து விட்டு, அடிப் பகுதியில் படும்படியாக ஏக்கருக்கு 10 கிலோ 'பி. எச். சி. 10' சதத் தூளைத் தூவ வேண்டும்.

ஒரு வார இடைவெளியில் இரு முறை மருந்து தூவ வேண்டும்.

## ஆனைக் கொம்பன் ஈ

அறிகுறி :—

சம்பா, தாளடிப் பயிரில் இளம் பயிராக இருக்கும் பொழுது, சுமார் 30—60 நாட்கள் வரை, பயிரில் கொம்புகள் போன்று குருத்துக்கள் காணப்படும். இக் கொம்புகள் குழாய் போன்று பச்சையாகவும், வெண்மையாகவும் இருக்கும். ஒரு நடவுக் குத்தில் 2, 3 தூர்கள் இவ்விதம் மாறி விடும்.

காரணம் :—

ஒரு வகை 'ஈ' இதற்குக் காரணமாகும். இந்த ஈக்கள் நெற் பயிரின் அடிப் பகுதியில் முட்டையிடுகின்றன. வெளி வரும் புழுக்கள் பயிரில் தண்டைத் துளைத்துக் கொண்டுஉட் சென்று நடுக் குருத்துத் தோன்றும் இடத்தில் தின்று வாழுகின்றன. அதனால் அந்த இடத்தில் வெளிப் பகுதி மட்டும் வளருகிறது. அதுவே குழாய் போன்ற ஆனைக்கொம்பு.

தடுப்பு : —

ஒன்று, இரண்டு ஆனைக் கொம்பன் தோன்றியவுடன் மருந்து தெளிக்க வேண்டும். ஏக்கருக்கு 200 மில்லி லிட்டர் பாரத்தியான் மருந்தை 15 நாட்களுக்கு ஒரு முறை, 3 முறை தெளிக்க வேண்டும். மருந்து தெளிக்கும் சமயம் நீரை வடித்துப் பயிரின் அடிப் பாகத்தில் மருந்து படும்படியாகத் தெளிக்க வேண்டும்.

## 'பல்காரிட்' தத்துப் பூச்சி (புகையான்)

அறிகுறி :—

நெற் பயிரில் பயிர் பூக்கும் சமயம் தோன்றும். பாதிக்கப்பட்ட பயிர் துரிதமாகத் தங்க நிறமடைந்து மாறும். பால் பிடித்து இறுகு முன், பயிர் சாய்ந்து விடும். பயிரில் இதன் பாதிப்பு கூடுதலாக இருக்கும். தண்டின் அடியில் கூட்டமாக இப்பூச்சிகளைப் பார்க்கலாம்.



தடுப்பு :—

மேலா த் தெ..யும் புழுக்களை, ''பி.எச்.சி. 10' சதத் தூளைத் தூவிக் கட்டுப்படுத்தலாம். மற்றும், 'பி.எச்.சி.50' சத மருந்து (1.5 கிலோ)









## கதிர் நாவாய்ப் பூச்சி

அறிகுறி :—

கதிரில் பால் பிடிக்கும் சமயம் காணலாம். கதிரில் பல மணிகளில் பால் பிடிக்காமல் இருக்கும். இந்த மணிகளில் சிறு துவாரங்களையும் காணலாம். ஒரு அங்குல நீளமுடைய பழுப்புப் பூச்சிகளையும், பச்சை நிறமுடைய இளம் பூச்சிகளையும் காணலாம்.

இவை இருந்தால் வயல் பக்கம் ஓர் துற்நாற்றம் வீசும்.

கதிர் வராத பயிரில் தோகை நுனிகளில் சாற்றை உறிஞ்சி வாழும்.

காரணம் :—

நாவாய்ப் பூச்சிகள் இருப்பதால் இந் நிலை ஏற்படுகிறது. இவை புற் பூண்டுகளில் தங்கி, பின்பு நெற் பயிரைத் தாக்குகின்றன.

தடுப்பு : —

'பி.எச்.சி.' 10 சதத் தூளை இரு முறை, 3—4 நாட்கள் இடைவெளியில் தூவவும். ஏக்கருக்கு 10 கிலோ தூள் தேவை

## இலைப் புழுக்கள்

அறிகுறி :—

*இலைகளில் புழுக்களையே காணலாம்.

*சில இலைகளைச் சுருட்டி, உள்ளே சுரண்டி வாழும். நன்கு வளர்ந்த பயிரில் அதிகமாகவும், நிழல் உள்ள பகுதியிலும் காணப்படும். சில இலைகளை வெட்டி, கூடு கட்டிக் கொண்டு தொங்கும். சில இலைகளைக் கடித்துத் தின்று அங்கேயே வாழும். சில படை படையாக நாற்றங்காலிலும், இளம் பயிரிலும் தோகையைக் கடித்து உண்டு வாழும். இவை பகலில் மறைந்திருந்து, இரவில் சேதப்படுத்தும்.

காரணம் :—

புழுக்களால் ஏற்படுகிறது.

தாய்ப் பூச்சிகள்—வண்ணத்திப்பூச்சிகள்—இடும் முட்டைகளிலிருந்து தோன்றும் புழுக்கள், கூட்டுப் புழுவாக மாறும் வரை, பயிரை நாசப்படுத்துகின்றன.

அல்லது பாரத்தியான் (200 மில்லி லிட்டர்) அல்லது எண்டிரின் (400 மில்லி லிட்டர்) மருந்தைத் தக்க அளவு நீரில் கரைத்து அல்லது கலந்துத் தெளிக்கலாம்.

## வெட்டுக் கிளிகள்

அறிகுறி :—

*தோகைகளில் இவற்றைக் காணலாம்.

*தோகை கத்தரிக்கப்பட்டு இருக்கும்.

*மழைக் காலத்தில் அதிகமாக இருக்கும்.

காரணம் :—

புற்களில் வாழும் வெட்டுக் கிளிகளால் இந்த அபாயம் ஏற்படுகிறது.

தடுப்பு :—

'பி.எச்.சி. 10' சதத் தூளை ஏக்கருக்கு 10 கிலோ அளவில் தூவ வேண்டும். அல்லது 'பாரத்தியான்' மருந்தை ஏக்கருக்கு (200 மில்லி லிட்டர்) தக்க அளவில் நீரில் கலந்துத் தெளிக்கலாம்.

## நண்டுகள்

அறிகுறி :—

*நண்டுகளையே காணலாம்.

*இளம் பயிரின் தோகைகள் கத்தரிக்கப்பட்டு, மிதந்து கொண்டிருக்கும்.

தடுப்பு :—

நண்டு வளைகளைத் தோண்டி அழிக்கலாம். 'பாரத்தியான்' 'எண்ட்ரின்' போன்ற மருந்துகளை வரப்பு ஓரங்களில் தெளிப்பது நல்லது. நடுவதற்கு முன், நிலத்தைச் சமப்படுத்தியபின், ஒரு முறை தெளித்து நட்ட பின் மறு முறையும் தெளித்தால் நண்டுகளை நன்கு கட்டுப்படுத்தலாம்.

## எலிகள்

அறிகுறி :—

*இளம் பயிர் கத்தரிக்கப்பட்டு இருக்கும். பொதுவாக, பயிர் பூட்டை வாங்கும் சமயத்திலிருந்து அதிகமான சேதம் ஏற்படும்.

*பயிர் துவைத்து வெட்டப்பட்டிருக்கும்.

*வளைகளில் கதிர் இழுத்துச் செல்லப்பட்டிருக்கும்.

காரணம் :—

எலிகளால் ஏற்படுகிறது. அத்துடன் வருடத்தில் ஒரு ஜோடி எலிகள் 140 எனப் பெருகுவதால் சேதம் அதிகமாகும். பயிர் துவைக்கப்படுவதால் நஷ்டம் அதிகமாக உள்ளது.

தடுப்பு :—

எலி வளைகளை, பயிர் அறுவடைக்குப் பின் வெட்டி, எலிகளைக் கொன்று விட வேண்டும் நன்கு சமப்படுத்தாத நிலையில், ஆங்காங்குள்ள மண் திட்டுகளில் வாழுவதால் வயலை நன்கு சமப்படுத்த வேண்டும். வரப்புகளின் உயரத்தையும் அகலத்தையும் குறைக்க வேண்டும். எலிப் பொறிகள், தஞ்சாவூர் கிட்டிகள் வைத்தும் எலிகளைப் பிடிக்கலாம். ஒரு பங்கு 'சிங்க் பாஸ்பைடு' என்ற நஞ்சுடன் 49 பாகம் உணவுப் பொருள் (நெல் பொரி, சோளப் பொரி, கருவாடு, தேங்காய் முதலியன) நஞ்சின் நிறம் தெரியா வண்ணம் கலந்து, வாரமொரு முறையாவது, ஆங்காங்கு, வைக்கோல் சுருள் அல்லது சட்டிகளில் வைக்க வேண்டும். மருந்து வைப்பதற்கு முன், ஓரிரண்டு நாட்களுக்கு மருந்து கலவாத உணவை வைத்துப் பழக்கப்படுத்துவது நல்லது. கையினால் கலக்கக் கூடாது. குச்சிகளையே உபயோகிக்க வேண்டும். மாலையில் வைத்து காலையில் எஞ்சிய பொருளைக் குழிகளில் இட்டுப் புதைக்க வேண்டும்.

(மருந்து ஒரு கொடிய நஞ்சு)



இலைப் புழுக்கள்

## சிவப்புப் பேன்

அறிகுறி :—

நாற்றங்காலிலும் இளம் பயிரிலும் காணப்படும். இலைகளுக்கு அடிப்பகுதியில் பூச்சிகளைக் காணலாம். தோகைகளை மஞ்சள் நிறமாக்கிவிடும்.

காரணம் :—

ஆயிரக் கணக்கில் உள்ள சிலந்தி இனத்தைச் சேர்ந்த பேன்களால் ஏற்படுகிறது. இவை மஞ்சள் நிறமுடையவை. இவை பயிரின் சாற்றை உறிஞ்சுகிறது.

தடுப்பு :—

'டைமிதோயேட்' (ரோகார்) என்ற மருந்தை ஏக்கருக்கு 250 மில்லி லிட்டர் வீதம் தெளிப்பதால் கட்டுப்படுத்தலாம்.

'பி. எச். சி'., 'டி. டி. டீ.' மருந்துகளைத் தெளிப்பதால் பயனில்லை. இம் மருந்துகள் சிவப்புப் பேனைக் கட்டுப்படுத்தாது.

மேற்கூறியவாறு நெற்பயிர் காத்து நெல் மணி குவித்திட உடனே முயற்சிக்குமாறு தமிழக உழவர் பெருமக்களை வேண்டுகின்றோம்.



# இளைஞர் அணி மகளிரின்

# இணையற்ற தொண்டு

—பா. செயப்பிரகாசம்

தமிழகத்தில் உள்ள வேலை வாய்ப்பில்லாப் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புத்தரும் நல்லெண்ணத்திலும், சமூகத் தொண்டு புரிய ஆர்வமுள்ள பட்டதாரி இளைஞர்களை ஊக்குவிக்கும் வண்ணமும், நிரந்தர வேலை கிடைக்கும் வரை இடைக்கால உதவியாக அமையுமாறு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ''இளைஞர் அணி'' எனும் அமைப்பை 1971-ஆம் ஆண்டு உருவாக்கினர்கள். இன்றையத் தினம், இளைஞர் அணியின் சீரிய பணியை அறிந்து மற்ற மாநில அரசுகள், தங்கள் மாநிலங்களிலும் இத்தகையதொரு திட்டத்தினைப் பின்பற்ற வேண்டும் என்று நினைக்கும் ஒரு நிலை உருவாகியிருக்கிறது. கிராமப்புற சுகாதார வசதியைப் பேணுதல், முதியோர் கல்வி, தீண்டாமை ஒழிப்பு முதலிய சமூக சேவைகளில் ''இளைஞர் அணி'' வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது. அவர்களுக்கு ஊதியமாக மாதம் ரூ. 175 தரப்பட்டு வருகிறது. இவ்வணியில், 1971-72-ல் 1,800 ஆடவரும், 200 மகளிரும், 72-73ல் 1,450 ஆடவரும், 15 மகளிரும், '73-74-ல் 1,525 ஆடவரும், 275 மகளிரும் சேர்க்கப்பட்டார்கள். நிரந்தர வேலை கிடைத்தவுடன் செல்லலாம் என்ற நிபந்தனைக்கேற்ப, வேலை வாய்ப்புப் பெற்றுச் சென்றவர்கள் தவிரத் தற்பொழுது ஆடவர் 3,382 பேரும், மகளிர் 481 பேரும் பணியில் ஈடுபட்டிருக்கின்றார்கள். தமிழக முதல்வர் எந்த நோக்கத்துடன் இத்திட்டத்தினை உருவாக்கினரோ அது மிகச் சீரிய முறையில் நிறைவேறி வருகிறதென்பதை யாவரும் கண்கூடாகக் காண முடிகிறது.

தஞ்சைமாவட்டத்தில் அரசு மருத்துவ மனைகளில் இளைஞர் அணியினைச் சார்ந்த மகளிர் மிகச் சிறப்பான முறையில் சமூகத் தொண்டினைச் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு எழுத்து வேலை கொடுக்கப் படவில்லை; சமூகத் தொண்டு ஒன்றையே நோக்கமாகக் கொண்டு அவர்கள் செயல் படுகிறார்கள்.

தஞ்சை இராசா மிராசுதார் மருத்துவ மனையில் இளைஞர் அணியினைச் சார்ந்த ஐந்து மகளிர் பணி புரிந்து வருகிறார்கள். மருத்துவ மனையின் நூலகத்தில் ஒருவர் பணி செய்து வருகிறார். நூலகத்திற்கு வந்து படிக்கக்கூடிய நோயாளிகளுக்கு உதவி செய்வதுடன், நேரடியாக மற்ற நோயாளிகளுக்குப் புத்தகங்கள் எடுத்துச் சென்று விநியோகித்து, அவைகளைத் திரும்பப் பெறும் பொறுப்பையும் ஏற்றுச் செயல்பட்டு வருகிறார். மருத்துவமனை நோயாளிகளைக் கேட்டபோது, இத் தொண்டு தங்களுக்கு மிகவும் பயனுற்றதாக, அறிவுப் பெருக்கத்திற்கு வகை செய்வதாகத் தெரிவித்தார்கள்.

மருத்துவமனை சமையலறையில் ஒருவர் பணியாற்றி வருகிறார். வாங்கப்படும் பொருள்கள் சரியாக இருக்கின்றனவா, நோயாளிகளுக்குத் தரப்படும் உணவுப் பொருள்கள் குறித்த அளவு அளிக்கப்படுகின்றனவா என்பதையும் கண்காணிப்பது இவரது வேலை. இவருக்குக் கொடுக்கப்பட்டுள்ள பணியினைக் குறையின்றி மிகச் சிறப்போடு செய்து வருகின்றார்.

மன நோய்ப் பிரிவில் ஒருவர் தொண்டு செய்து வருகிறார். மன நோயுள்ள நோயாளிகளிடம் அவர்களுக்கு ஏற்றவாறு பழகி மருந்து கொடுத்தல், அவர்களுக்குப் பொழுது போக்காக அவர்களிடம் உரையாடி மகிழ்வித்தல் முதலிய பணிகளைச் செய்து வருகிறார். மன நோயுள்ள ஆண் நோயாளியிடமும் பெண் நோயாளியிடமும் தைரியமாக அணுகி மிகத் திறமையான முறையில் தொண்டு செய்து வரும் அவரது பணி மிகவும் பாராட்டுக்குரியது.

குழந்தைகள் மருத்துவப் பிரிவில் ஒருவர் பணியாற்றி வருகிறார். நோயுள்ள குழந்தைகளுக்கு மருந்துகொடுத்தல் முதலிய பணிகளில் மருத்துவர்களுக்கு உதவியாக இருக்கிறார். தாய்மார்கள், தங்கள் குழந்தைகளை மற்றப் பிரிவுகளுக்கு அழைத்துச் செல்வதற்கு உதவுகிறார். நோய் வாய்ப்பட்ட மழலைகளிடம் அன்புடன் பழகிப் பணி புரிவதில் மன நிறைவு பெறுகிறார் இவர்.

எலும்பு முறிவுச் சிகிச்சைப் பிரிவிலும் ஒருவர் பணிபுரிந்து வருகிறார். எலும்பு முறிந்த நோயாளிகள் நடப்பதற்கும், பொருள்களை எடுப்பதற்கும், மருந்து சாப்பிடுவதற்கும் உதவுவது முதலிய நற்பணிகளைச் செய்து வருகிறார் இவர்.

மகளிர் இளைஞர் அணியினர் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை பொது நலப் பணி ஒன்றையே நோக்கமாகக் கொண்டு மன நிறைவோடு பணி புரிந்து வருகிறார்கள். அவர்களால் நோயாளிகளுக்கும் துயர் மறைந்து மன நிறைவு கிடைக்கிறது. அவர்கள் ஒவ்வொரு பிரிவிலும் மூன்று மாதங்கள் பணிபுரிந்த பின்னர் வேறு பிரிவிற்கு மாற்றப்படுகிறார்கள். இவ்விதம் வேலை கற்றுக்கொள்வதோடு பல தரப்பட்ட நோயாளிகளுக்கும் தொண்டு செய்வதற்குரிய வாய்ப்பையும் அவர்கள் அடைகிறார்கள்



வேலைவாய்ப்புத் திட்டத்தைப் பெருக்கிட வேண்டும் என்பதற்காகத் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாகத் துவக்கிய இத் திட்டம் மிகச் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது என்பதற்கு தஞ்சை இராசா மிராசுதார் அரசினர் மருத்துவ மனையில் பணி புரியும் இளைஞர் அணி மகளிரின் பணி சான்றாக அமைந்திருக்கிறதென்றால் அது மிகையாகாது!


நாம் என்பது....
நாம்
இந்நாட்டு மன்னர்கள்
இன்றைய சமுதாயம்
எதிர்காலத்தை
உருவாக்குபவர்கள்
வருங்காலத்தின் வாழ்வும் வளமும் நம் கையில்!
எதிர் காலத்தைப்
பொன்னொளியாக்க
நமது அரசுத்
திட்டங்களின் பட்டியல் இதோ!
உணவு உற்பத்தியில் தன்னிறைவு!
மாநிலத் திட்டக்குழுப் பணிகள்!
ஏழையர்க்கு வீட்டுமனை, நிலப்பட்டா!
குடிநீர் வடிகால் வாரியப் பணிகள்!
குடிசை மாற்றுவாரியப் பணிகள்!
பேருந்து வழித்தடங்கள் நாட்டுடைமை
தொழில் வளர்ச்சிக்குப் புதிய அமைப்புகள்!
நமது அரசின் இத்திட்டங்களும், முயற்சிகளும்
முழு வெற்றி ஈட்டிட நாம் ஆற்றும் கடமையே
அளவான குடும்பம்
அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப்பிறகு எப்போதும் வேண்டாம்!
தமிழரசு
குடும்ப நலத் துறை தமிழ்நாடு அரசு

# வெண்பாப் போட்டி

'அகம்' எனத் தொடங்கிப்
'புறம்' என முடிக்கல்

*அகம்நோவா ராயினும் ஆங்கவர் முன்னே
பகருதல் தான்மிகப் பண்பாம்—மிகஅவர்
சேய்மையில் சென்றபின் சீரிலா வண்ணமாய்ப்
போய்மறைந்து பேசேல் புறம்.

—நோடுதீர மதமாடிசிதானு, காளனூரு.

அகமகிழக் கோயில் அறங்காப்போ ராகப்
புகச்செய்தே, அர்ச்சகமும் பூண்டு—தகவுடனே
ஆற்றுதற்குச் செய்கின்ற ஆட்சியின்று, நீக்கிடுதே
போற்றுத சேரி,புறம்.

—அ. கமலம், தவசிகிராமம்,

அகங்கொண்டு கன்றை அழித்தானென் றேதன்
மகனைத்தேர்க் காலில் மடித்துச்—சகத்தில்
நிகரில்லா தோங்கினர் நீடுவாழ் நம்நாட்டின்
புகழ்மணக்கச் செய்தார் புறம்.

—நா. கலைப்பிரியன், சத்திரப்பட்டி.

அகமே! திருநாட்டில் அஞ்சுவதற்(கு) அஞ்சு;
புகழ்மாய்க்கும் சாதிகுலப் பொய்மை—அகழ்ந்தெறிக!
சொல்லா தனசொல்லிச் சூதெல்லாஞ் செய்திடினும்
பொல்லாங்கைப் போக்கு புறம்.

—மா. சே. இராசு, திருப்பூர்.

அகத்துண்மை வாழ அறிஞர்சொல் ஆள
மிகத்தொன்மைப் பண்பு மிளிர—நகைத்தன்மை
இல்லாத நல்லாட்சி ஏற்ருர்க்கே என்றென்றும்
பொல்லார் கொடுப்பர் புறம்.

—புலவர் பழனி-அரங்கசாமி, கொத்தமங்கலம்.

அகம்பாவம் கொண்டவர்கள் ஆத்திரத்தில் பேசும்
பகராத நிந்தைமொழி கேட்டுத்—தகர்ந்துவிடின்
எஞ்சியுள்ள காரியத்தை யார்வந்து செய்திடுவார்
நெஞ்சே! ஒதுக்குப் புறம்.

—புலவர் சேறைநேசன், சோலூர்.

அகமென்னும் கோயிலின்கண் ஆடும் சிலையே!
சுகப்பாடம் கற்பிக்கும் தோகாய்!—செகத்திலுறும்
ஈரநிலவே! இளந்தென்றற் காற்றே! என்
பேரழகே! வாஅப் புறம்.

—இராம. குப்புசாமி, கொண்டிசெட்டிப்பட்டி.

அகம்நிறைந்த செந்தமிழே! அன்பார்ந்த பெண்ணே!
இகலில்லா உன்சுவையால் ஈர்த்தாய்—அகத்தின்
இருளோட்டும் உன்னணைப்பை எங்ஙன் மறந்தே
பொருளீட்டச் செல்வேன் புறம்?

—பாவலர் நாவை—சிவம், கொடும்பாளூர்.

அகம்குளிர இன்பம் அவனளித்தால் போதும்
முகம்மலர மங்கை மகிழ்வாள்;—நகம்சதைபோல்
ஒற்றுமையாய் வாழ்ந்திடுவர்; உற்றதொரு வாழ்நாளில்
மற்றவைகள் எல்லாம் புறம்.

—அ. ஈஸ்வரி, வடமாதிமங்கலம்.

அகம்வாழும் அண்ணன்; அழகுதமிழ் மன்னன்
முகம்மலர்ந்த மந்திரங்கள் மூன்று!—சுகம்வளர
என்னென்ன திட்டங்கள்; ஏற்பட்ட சட்டங்கள்
புன்மையிருள் போக்கும் புறம்.

—''நிலவன்'', சென்னை-1.

பரிசுக்குரிய வெண்பா எழுதியவர் :

**திரு. நோடுதீர மதமாடிசிதானு,**
**கன்னட ஆசிரியர்,**
**காளனூரு,**
**சில்லமரத்துப்பட்டி (அஞ்சல்),**
**மதுரை மாவட்டம்.**

# வெண்பாப் போட்டி

அகத்தின் அழகை முகங்காட்டும்; காட்டும்
செகத்தின் அழகைச் செழிப்பே—புகழ்மேனிச்
செல்வ அழகைச் செயல்சேர்க்கு மென்றறியாப்
புல்லறிவோர் கூறும் புறம்.

—தவமுத்து, அண்ணுமலே, பி. ஏ. பி. டி., தவசி.

அகமகிழ்ச் சொல்லாடி, அன்புணர்வை நாட்டி,
தகவுடைய சொற்களால் தன்னே—மிகநல்ல
நண்பன்போல் காட்டிப்பின் நண்பர்கள் நன்னெஞ்சம்
புண்படவே பேசாய் புறம்.

—புலவர் சு. விசுவநாதன், நெற்குப்பை.

அகத்தில் எரியிருக்கும் ஆனுலும் தங்கள்
முகத்தைப்பூ வாக்கி மொழிவார்—பகைத்தாலும்
வாள்போல் பகைத்தார் வஞ்சத்தை உள்ளடக்கிக்
கேள்போல் நடிப்பார் புறம்.

—மெய். அருண்மொழியன், கலேயனூர்.

அகத்தூய்மை கொண்டுமே அன்பின் உருவாய்
மிகச்சிறந்தே மேதினியே மெச்ச—இகத்திலே
நன்னீரால் ஆடினுல் நாளும் உடலெல்லாம்
பொன்னய் விளங்கும் புறம்.

—சீனிவாசம்மாள், சேலம்-9.

அகந்தை அகற்றி அருந்தமிழ்ப் பண்புக்
குகந்த பணிகளில் ஒன்றி—முகமலர
ஏற்றுற்றும் தொண்டுகளே இவ்வவனி உள்ளமட்டும்
போற்றிப் புகழும் புறம்.

—புலவர் திரிபுரசுந்தரி, திருவண்ணுமலே.

அகம்மகிழும் வேந்தனுக்கும் அச்சாணி சோறு
இகம்புகழும் மெய்ம்மறைக்கும் ஆடை—சுகமளிக்கும்
நாமணக்கும் நற்கனிக்கு நாடிடுவோம் நாமென்றும்
பூமணக்கும் நாட்டுப் புறம்.

—ந. நடராசன், செங்கத்துரை.

அகத்தினிலே யாருமில்லே! ஆனதனுல் பிச்சை
உகுப்பதற்கே ஏதுமிலே! உள்ளம்—நெகிழ்கிறதே!
வாய்விட்டுச் சொல்கின்றேன் வாயிலிலே நிற்காமல்
போய்விட்டு வாஅப் புறம்.

—சிவல்புரி சிங்காரம், கீழச்சிவல்பட்டி.

அகமே திருக்கோயில்; அன்பே இறையாம்!
சுகமே...! எனவெதும்பிச் சோரா(து)—இகவரையும்
பேராண்மை காத்தலே பேரறங்காண்! காண்பாரோ
பேராண்மை பெற்ருர் புறம்?

—கு. செல்லக்கண்ணன், ஓலேப்பாடி.

## வெண்பாப் போட்டி - 70

ஈற்றடி : தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து

முடிவு நாள் : 2—1—1974

நேரிசை வெண்பாக்களே அனுப்பப் பெறல் வேண்டும்.

அகம்திறந்து மெய்யதனே அத்தனேயும் சொல்லி
முகம்சிவந்து போய்விட்டாள் முல்லே—சுகம்தந்த
கள்ளிருக்கும் சொல்லழகி கள்ளிதனேக் கண்டோரும்
புள்ளினமும் ஆங்கோர் புறம்.

—ஜே. ஜோதி, இராமநாதபுரம்புதூர்.

அகம்பாவம் கொண்டே அலேகின்ற எத்தர்
நகர்ப்புறத்தில் தான்உண்டு நண்பா—பகையற்றுக்
காவில் உலவிக் களிப்புற்று வாழ்ந்திடவே
போவீர் கிராமப் புறம்.

—ஆர். ஜெயா, காந்திக்கிராமம்.

அகம்நிறைந்தால் மக்கள் அகம்நிறையும்; பின்பே
முகம்மலரும் என்றே முயன்ருர்—வகையுடனே
நல்லாட்சி செய்தார் நலஞ்சேர்த்தார் என்ருலும்
பொல்லாதார் சொல்வார் புறம்.

—கருங்காலக்குடி ரகீம், சின்னக்கற்பூரம்பட்டி.

அகத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றி அளவில்
மகப்பேற்றின் நல்குரவால் நைந்தால்—இகப்பேற்றில்
பேணுவ தென்ருேசொல் பேரறம்? சூழ்வினேயைக்
காணுவ தெங்கோ புறம்?

—சா. கா. சாகுல்அமீது, பி. ஏ., சித்தையன்கோட்டை.

அகமின்றி வாழும் அகதிகளின் வாழ்வில்
இகமதில் இன்பம் இலங்க—முகமலர்ந்தே
வண்ண ''மலிவுவிலே வீடுகள்'' ஈந்திடவே
புன்னகை பூத்தார் புறம்.

—செ. பெரியசாமி, குட்டுப்பட்டி.

அகவாழ்வுக் கேற்ற அணியாம் களவில்
மிகுமோர் களிப்பில் மிதந்தோம்—தகவார்
குறள்காட்டும் வாழ்வமைய கோதாய்! இனிநான்
பொருளீட்டப் போவேன் புறம்.

—இரத்தின. மனுேகரன், சென்னே-11.

அகமென்ப துள்ளத்தா லொன்றிய ஆண்பெண்
சுகந்துய்த்த தெண்ணிச் சுவைத்து—மகிழ்தலாம்;
வீரங் கொடைமுதலா வெண்ணற்ற பண்புகளேப்
பூரணமாய்ப் போற்றல் புறம்.

—வே. அரங்கராசன், தாராசுரம்.

# வெண்பாப் போட்டி

அகத்திருக்கும் அன்பை அடையாளம் காணர்
முகம்பார்ப்பார் காசை மதிப்பார்—சுகமொன்றே
பாராட்டும் அத்தகைய பாவியரைத் தீமைபோய்ச்
சேராதோ தானப் புறம்.

—மா. இராமலிங்கம், புதுப்பாளையம்.

அகம்குளிர்ந்து காட்டிய அண்ணன் வழியில்
புகழ்பெற்ற ஆட்சி யமைத்து—நிகரற்ற
நுண்ணறிவுப் பாதை நெறிகாட்டி மக்களுக்குக்
கண்கொடுத்தார் மற்றோர் புறம்.

—'' முகிலன் '', ஆத்தூர்.

அகம்குளிர ஓர்சொல் அமுதே புகலாய்
இகழாமல் என்விருப்பை ஏற்பாய்—சுகம்பெற
ஆவலாய் உன்பால் அடர்இருளில் வந்தநான்
போவதோ வீணுய்ப் புறம்?

—மா. கா. குருசாமி, அபிராமம்.

அகம்பொருந்தும் இல்வாழ்க்கை ஆரமிழ்தும் தேனுய்
மிகப்பொருந்தி யின்பம் விளேக்கும்—புகழ்தமிழர்
வீரம், கொடைப்பண்பு, வெற்றிச் செயல்திறங்கள்
போரழித்துக் காக்கும் புறம்.

—புலவர் கோம்பைச்சிரான், கோம்பை.

அகம்நோக்கிச் சொல்வேன் அருமைசால் நெஞ்சே!
முகம்பார்த்தா நீமயங்கிப் போனுய்?—தகைஞர்தம்
தொண்டில் கடல்தாண்டிச் சென்றல் வழியனுப்பிப்
பின்னதற்கோ சொல்வாய் புறம்.

—கவிஞர் சிவ. நடராசன், மாமல்லபுரம்.

அகம்நன்றே கொள்வோம், அகிலத்தை வெல்வோம்;
முகம்கோடி வாழ முயல்வோம்!—யுகம்பேசும்
நல்ல செயல்தனையே நாம்செய்வோம் துன்பத்தின்
பொல்லாங்கைக் காண்போம் புறம்.

—இல. ஆலயழகன், வல்லம்.

அகமதில் அன்புடன், அல்லலுறும் ஏழை
சுகங்காண எண்ணிடும் நல்லார்—இகமதில்
நற்புகழும் ஈடில்லா நன்மையும் பெற்றேநற்
பெற்றி யுறுதல் புறம்.

—புலவர் கா. நா. இலக்குவன், சின்கோனு.

அகம்மலர அன்பு உரைமலர பால்போல்
முகம்மலர வாழ்வதுதான் வாழ்வாம்—நகைமலர
பூக்காத பூவாய்ப் புவிமீதில் வாழ்வோரை
நீக்கித் தொலேக புறம்.

—துறவி, அரியலூர்.

அகத்தூய்மை இல்லாதார் ஆக்கம்பெற் றுய்யார்
நகைமுகங் காட்டி நலிவர்—மிகவாய்
வெறுப்புள்ளம் மேலோங்க வெந்தழிவர்; வேண்டாம்
புறங்கூறும் பொய்மைப் புறம்.

—ப. திருவேங்கடம், திருச்சி-4.

அகந்தூய்மை; நல்ல அறிவாண்மை கொண்டு
முகம்மலர்ந் தின்சொல் மொழிந்தே—இகத்தினில்
என்றும் பிறர்க்கின்னல் எண்ணு மனத்தாரை
என்செய்யும் பொய்மைப் புறம்?

—ப. சக்திவேலன், திருச்சி-4.

அகம்பாவம் வேண்டாம் அதிசினமும் வேண்டாம்
அகத்தினுள் வேண்டாம்பே ராசை—செகத்தீரே!
வேண்டாத பண்புகள் வேன்ரடா முமதுபுகழ்
பூண்டோ டொழியும் புறம்.

—விநோதலீலன், இரா. வெள்ளோடு.

அகத்தில் அழுக்கிலார், அன்பார் உழவோர்,
முகத்தில் களங்கமில் மங்கை,—சுகத்தையே
நல்கும் இயற்கை நலங்களேக் கொண்டதே
பல்கிடும் நாட்டுப் புறம்.

—பி. சி. அசனல்லி, அரக்கோணம்.

அகம்மகிழக் காதல் அரும்புவதால் கொஞ்சும்
முகம்மலரத் தான்குழைந்து முன்கால்—நகம்கீறி
ஆவலினே உள்ளே அடக்கும் உணர்வெல்லாம்
பூவிதழால் தோன்றும் புறம்!

—நெல்லே ஆ. கணபதி, சென்னே-15.

அகஞ்செறி தண்டமிழன் பாலோர்நாள் சேரன்
புகழ்மோசிக் கீரனர் போற்றித்—தகவாக
ஒண்சா மரைவீசி ஓங்குயர் வெய்தியதைப்
பொன்போலப் போற்றும் புறம்!

—தங்க அருண்மொழி, வே. கள்ளிப்பாளையம்.

'அகத்துளதா அச்சம்?' அகராதி நாடும்
மகவினத்தைப் பெற்று, மறவர்—பகைமுடித்த
காவுண்டார் வாழ்ந்த கதைசொல்லும் தாய்க்குலத்தால்
பூவுலகில் வாழும் புறம்'.

—புலவர் மா. புகழேந்தி, ஒலேப்பாடி.

அகமும் கெடுத்தே அமைதியும் போக்கிச்
சுகவாழ்வு தன்னேத் தொலேக்கும்!—முகநோக்கிக்
கூசாமல் வன்சொற்கள் கூறிடினும் யாரிடமும்
பேசாதீர் என்றும் புறம்.

—சு. தங்கப்பன், சின்கோனு.

# மூன்று மாவட்டங்களின் முன்னேற்றப் பணிகள்!

— த.பி

கலை மணம் கமழும் தஞ்சை மாவட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த எங்கள் உந்து, கொள்ளிடம் பாலத்தின் அருகே நிறுத்தப்பட்டது.

கொள்ளிடம் பாலத்தில் நீண்ட நெடுங்காலமாகச் சுங்க வரி வாங்கி வருகிறார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். அதற்காகத்தான் உந்து நிறுத்தப்பட்டதோ என்று எண்ணிய படி, சன்னல்களின் வழியாக எட்டிப் பார்த்தோம்.

எங்கள் உந்துக்கு முன்னால் ஒரு ஜீப் கார் நிறுத்தப்பட்டிருந்தது. அதிலிருந்து சில இளைஞர்கள் கை காட்டிய படி இறங்கி வந்தார்கள். யார் அவர்கள் என்று வியப்புடன் நோக்கிய போது, சில தெரிந்த முகங்கள் தென்பட்டன. சில விநாடிகளில் புரிந்துவிட்டது, வந்திருந்த இளைஞர்கள் தஞ்சை மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலகத்தில் பணிபுரிந்துவரும் செய்தித்துறை உதவியாளர்கள்தான் என்பது. பத்திரிகையாளர்களாகிய எங்களை வரவேற்பதற்கும் எங்களுக்கு வழி காட்டி உதவுவதற்கும் அவர்கள் வந்திருந்தார்கள்.

ஜீப் முன்னே செல்ல எங்கள் உந்து, பின்தொடர்ந்துசென்று கொண்டிருந்தது.

கரிகால் பெருவளத்தான் தலைநகராம் காவிரிப்பூம் பட்டினத்தை நோக்கி எங்கள் உந்து செல்கிறது என்பது தெரிந்தவுடனேயே உள்ளமெல்லாம் மகிழ்ச்சி அலை உருவாகியது.

பூம்புகார் வாயிலுக்குள் நுழைந்தோம். பின்னர் கரிகால் வளவன் வாயில்! மூன்றாவதாக எங்களை வரவேற்றது இளங்கோவடிகள் வாயில்! அதன் பின்னர் கோவலன் வாயில், பின்னர் கண்ணகி வாயில், பின்னர் மாதவி வாயில், அனைத்தையும் தாண்டி இறுதியாகச் சிலப்பதிகாரக் கலைக்கூட நுழைவு வாயிலுக்கு வந்தோம். ஒரே வியப்பு! கடற்கரைப் பட்டினமாம் காவிரிப்பூம்பட்டினத்தில் சென்ற ஆண்டு அக்டோபர் திங்களில் இல்லாத ஒரு புதுக் கட்டடம்—எழு நிலை மாடம் இந்த ஆண்டு உருவாகி 'வானுற ஓங்கி வளம் பெற' நின்றால் வியப்பு எங்களை வந்து மோதியதில் வியப்பென்ன இருக்கிறது!



தமிழுக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் தமிழ்க் கலைக்கும் பெருந் தொண்டு புரிந்துவரும் தமிழக அரசு தஞ்சைத் தரணியில், புகார் மண்ணில் கற்பரசி கண்ணகிக்கு ஒரு கலைக்கோயிலை உருவாக்கியிருக்கிறது.

'தோள் கண்டார் தோளே கண்டார்—தொடுகழல் கமல மன்ன தாள் கண்டார் தாளே கண்டார்'—என்று கவிச்சக்கரவர்த்தி கம்பர் வருணித்ததைப் போல இந்தக் கோயிலின் வெளிப்புறத்தைப் பார்த்தவர்கள் அதையேபார்த்துக்கொண்டிருப்பதும்—உட்புறம் சென்று பார்த்தவர்கள் அதையே பார்த்துக் கொண்டிருப்பதும் நாள்தோறும் இங்கு வாடிக்கையாகிவிட்டது.



49 சுவர்ச்சிற்பங்கள்—சிலப்பதிகாரக் கதையை எடுத்துச் சொல்கின்றன. சிற்பங்கள் உயிரோவியங்களாகவே காட்சி தருகின்றன. ஒவ்வொரு சிற்பத்தின் கீழும் சிலப்பதிகார வரிகள் பொறிக்கப்பட்டுள்ளன.

பழைய பூம்புகார் எப்படி இருந்திருக்கும் என்பதற்குரிய மாதிரி ஒன்று அமைக்கப்பட்டு, கண்ணாடிப் பெட்டிக்குள் கொலுவேற்றப்பட்டு இருக்கிறது.

கலைக்கூடத்தின் உட்புறத்தில் உள்ள—வெளி இடத்தில் 8.5 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள மாதவியின் சிலை, எழில் தேவதையே எதிரில் வந்து நிற்பது போலத் தோன்றுகிறது. 'அழகெனும் தெய்வந் தான் அது எனக் கண்டேன்' என்று பாரதியார் சொல்லிய வார்த்தைகளை இங்கேதான் பயன்படுத்த வேண்டும் என்று தோன்றுகிறது.

இதுவரை எவரும் செய்யாத அளவுக்கு ஒரு கலைக் கோயிலை உருவாக்கிய தமிழக அரசைப் பல நிருபர்கள் பாராட்டினார்கள். வியப்பினால் சிலருக்குப் பேச்சே வரவில்லை.

முதல்வர் கலைஞர் அவர்களின் ஆலோசனையினாலும் ஆதரவினாலும் ஒத்து உழைப்பாலும் உருவாக்கப்பட்ட இந்தக் கலைக்கூடத்தில் 'எழுநிலை மாடம் அமைத்த ஏந்தல்' என்ற மெய்க் கீர்த்தி பொறிக்கப்பட்டிருப்பது அந்த நாள் பூம்புகாரை — வரலாற்றில் மட்டுமே நாம் படித்துணர்ந்த பூம்புகாரை — இந்த நாளில் நேரில் பார்ப்பது போல் ஓர் உணர்வு நமக்கு ஏற்படுகிறது.



பூம்புகார் சிலப்பதிகாரக் கலைக்கூடத்தின் முன்னே நிருபர்கள்

1973-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17-ஆம் நாளன்று முதல்வர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட இந்தக் கலைக்கூடம் ஏறக்குறைய 6·5 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டதாகும். மேலும், பண்டைய பூம்புகாரில் இருந்த இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன்றம், பாவை மன்றம் போன்ற அமைப்புகளை இங்கே உருவாக்கும் திட்டமும் உள்ளது. அவற்றையெல்லாம் சேர்த்தால் மொத்தம் 15 இலட்ச ரூபாய் ஆகும் எனத் தெரிகிறது.


பொலிவுடன் காட்சி தரும் குத்துவிளக்குகள்

எழில் மிகுந்த இடத்தைப் பார்க்க எல்லா மாவட்டங்களைச் சேர்ந்த மக்களும் — பிற மாநிலத்தவரும் வருவது இயற்கையல்லவா? அதனால், அண்ணா பெயரால் சுற்றுலா மாளிகை ஒன்று மிக விரைவில் உருவாகி வருகின்றது.

இந்தக் கலைக்கூடத்திற்கு நுழைவுக் கட்டணம் வைத்திருக்கிறார்கள். நுழைவுக் கட்டணம் என்றவுடன் அதிகமாக இருக்குமோ என்று அஞ்சத் தேவையில்லை. பத்துக் காசு தான்! இந்தப் பத்துக் காசு பெரிய தொகையல்ல என்பது மட்டுமல்ல—எத்தனை பத்துக் காசு ஒரு நாளைக்கு வசூலாகியிருக்கிறது என்பதைக்கொண்டு எத்தனை பார்வையாளர்கள் கலைக்கூடத்தைக் காண வருகிறார்கள் என்பதைத் துல்லியமாகச் சொல்லிவிட முடிகிறது. தற்போது, நாள் ஒன்றுக்கு ரூ. 100 வசூல் ஆகிறது—விடுமுறை நாட்களில் ரூ. 200 வசூல் ஆகிறது—பொது மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் இங்கே வருகிறார்கள் என்பதை இந்தப் புள்ளி விவரம் தெரிவிக்கின்றது.

கலை ஓவியங்களுக்கு மட்டும் தான் தமிழக அரசு சிறப்புச் செய்கிறது என்று எவரும் எண்ணி விட வேண்டாம், உயிர் வாழும் சமுதாய ஓவியங்களான ஏழை மக்களுக்கும் இந்த அரசு பல வகைகளில் உதவி செய்கிறது. கலையை ஆதரித்த கரிகால் மன்னன், நாட்டு மக்களின் கவலையை மறந்ததில்லை. அது போலவே தான் தமிழ்நாடு அரசும்!

பூம்புகார் கடற்கரை ஓரத்தில் குடிசைகளிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற மீனவ மக்களுக்கு 300 வீடுகள் கட்டித் தரப்போகிறது தமிழக அரசு.

இங்கு வாழும் மீனவர்களை 35 குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு விசைப் படகு வழங்குவதற்கு அரசு சிந்தித்துக் கொண்டிருக்கிறது. 35 விசைப் படகுகளின் மொத்தச்செலவு எவ்வளவு தெரியுமா? ரூ. 18 இலட்சம்.

பூம்புகார் ஊரில் மட்டுமல்ல—பூம்புகார் வாழ் மீனவர்களின் வாழ்விலும் புது மாற்றத்தை—புதுச் சூழ்நிலையை— பொன்னான நல் வாய்ப்பை ஏற்படுத்தி வருகிறது தமிழக அரசு.

இரவு மணி ஏழாயிற்று ! பூம்புகாரை விட்டு நாங்கள் பிரிய வேண்டிய நேரம் வந்து விட்டது. பிரிவதற்கு மனமில்லாமல் பிரிந்து சென்றோம். இரவு எட்டு மணியளவில் மாயூரம் சென்று, ஒரு திருமண மண்டபத்தில் அனைவரும் தங்கினோம். இரவு உறக்கமே வரவில்லை. இரும்புக் கட்டில், இலவம் பஞ்சு மெத்தை, தலையணை, மின் விசிறி இவ்வளவு வசதிகள் இருந்தும் தூக்கம் வரவில்லை. காரணம் என்ன என்று சிந்தித்துப் பார்த்தேன்! சில வினாடிகளில் புரிந்துவிட்டது! பூம்புகார்க் கலைக்கூடமும் அதிலுள்ள சுவர்ச் சித்திரங்களும் நெஞ்சத்தை விட்டு நீங்காமல், இமைகளில் நின்று கொண்டே இருந்தது தான் கண்கள் உறங்க மறுத்ததற்குக் காரணம் என்பது தெளிவாகியது. கற்பரசி கண்ணகியைக் கைதொழுது விட்டுக் கண்களை இறுக்க மூடிக்கொண்டேன். ஒரு வழியாகத் தூக்கம் வந்தது.

பொழுது விடிந்தது. என்னுடன் தங்கியிருந்த அகில இந்திய வானொலி நிலைய நிருபரின் கைக் கடியாரம் மணி 6-30 என்பதையும் தேதி 11 என்பதையும் சுட்டிக் காட்டியது.

காலைப் பணிகளை முடித்து விட்டுச் சிற்றுண்டி அருந்தத் தொடங்கினோம்.

''சீக்கிரம் தயாராகுங்கள்! மாயூரம் புகைவண்டி நிலையம் வரை செல்ல வேண்டும்' என்ற குரல் கேட்டது.

''அடுத்த புரோகிராம்—ரயில் பிரயாணமா?'' என்று கேட்டார் ஒரு நிருபர்!

''அல்ல, அல்ல! மாயூரம் புகை வண்டி நிலையத்தின் அருகே உள்ள 'லெவல் கிராசிங்கின்' மேலே ஒரு பாலம் உருவாகிக் கொண்டிருக்கிறது. அதைப் பார்க்கப் போவோம்'' என்றார் அந்த உதவியாளர்.

சில வினாடிக்குள் மாயூரம் சட்ட மன்ற உறுப்பினர் திரு கிட்டப்பா அவர்கள் வந்தார்கள். பத்திரிகை நிருபர்களுடன் அறிமுகம் நடைபெற்றது. அந்தப் பாலத்தைக் காணப்பிப்பதற்காகப் பத்திரிகையாளர்களை அழைத்துச்செல்வதற்குத்தான் அவரும் வந்திருக்கிறார் என்பது புரிந்தது.

அனைவருமாகப் பாலத்தைப் பார்க்கச் சென்றோம். பாலத்

தின் இரண்டு பகுதி வேலைகளும் முடிவடைந்துவிட்டன. புகை வண்டி செல்லும் பாதையின் மேல் உள்ள பகுதிதான் இன்னும் முடிவடையவில்லை. விரைவில் முடிவடைந்துவிடும்.

பாலத்தின் மேலே நாங்கள் நின்று சில விநாடிகள் பேசிக் கொண்டிருந்தோம்; அதற்குள் எத்தனையோ ரயில்கள்— அந்தப் பகுதியில் சென்றன.

''இவ்வாறு நாலா திசைகளிலுமிருந்தும் ரயில்கள் வருவதால் இந்தப் பாதை எப்போதும் அடைக்கப்பட வேண்டியிருந்ததால்தான் இந்த மேல்பாலம் இங்கே கட்ட வேண்டிய அவசியம் நேர்ந்தது'' என்று சம்பந்தப்பட்ட பொதுப் பணித்துறை அலுவலாளர்களும், சட்ட மன்ற உறுப்பினரும் தெரிவித்தார்கள்.

நாகப்பட்டினம் வட்டாரத்தில் கும்பகோணம்—சீர்காழிப் பாதையில் மாயூரம் ரயில் நிலையத்தின் அருகில் இந்தப் பாலம் அமைவது அவசியந்தானா என்று ஆய்வு நடத்தியிருக்கிறார்கள். ஒரு நாளில் 24 மணி நேரத்தில் 11 மணி நேரம் இந்தப் பகுதியில்உள்ள ரயில் பாதைக் கதவு பூட்டப்பட்டிருந்தது என்பதையும் போக்குவரத்துத் தடைப்பட்டிருந்தது என்பதையும் ஆய்வாளர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். அதன் பின்னர், இந்த இடத்தில் மேல்பாலம் அவசியம் என்னும் முடிவுக்கு வந்தார்கள். 4-10-1971 அன்று பால வேலையைத் துவக்குவதற்கு அரசு ஆணையிட்டது. ஏறக்குறைய 4 இலட்ச ரூபாய்த் திட்டம் இது. இதுவரை 33.84 இலட்சம் ரூபாய் செலவாகியுள்ளது. இதன் மொத்தச் செலவில் 50 சதவீதத்தை ரயில்வேத் துறையும் 25 சதவீதத்தை மாயூரம் நகராட்சியும், மீதி 25 சதவீதத் தொகையைத் தமிழக அரசும் ஏற்றுக் கொள்கின்றன.

இந்தப் பாலத்தின் மொத்த நீளம் 762 மீட்டர்—அதாவது 2499.36 அடிகள். அகலம் 9.8 மீட்டர் அதாவது 32 அடிகள். ஏறக்குறைய 5.13 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி உருவாக்கப்பட்டுவரும் இந்தப் பாலம் 1974-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களுக்குள் கட்டி முடிக்கப்பெறும் என்று தெரிகிறது.

மேலோராக இருந்த நாங்கள் திடீரென்று கீழோராக மாறி விட்டோம். அதாவது பாலத்தின் மேற் பகுதியில் நின்ற நாங்கள் மெதுவாக இறங்கிக் கீழ்ப் பகுதிக்கு வந்து சேர்ந்தோம்.

மாயூரம் மேல்பாலத்தைப் பார்த்து விட்டு நாகப்பட்டினத்தை நோக்கிப் புறப்பட்டோம். இரண்டு மணி நேரத்திற்குள் நாகப்பட்டினம் வந்து விட்டோம். உந்து ஓரிடத்தில் சென்று நின்றது.

''நாகப்பட்டினம் வந்து விட்டது, இறங்குங்கள்'' என்று ஒரு குரல் கேட்டது. வரவேற்பு அலுவலரின் குரல்தான் அது.

''அப்படீன்னா! காத்தான் சத்திரம் எங்கே இருக்கிறது?''—என்று கேட்டார் ஒரு நிருபர்.

''காத்தான் சத்திரமா! அப்படி ஏதும் இங்கே கிடையாதே!'' என்றார் உள்ளூர்க்காரர் ஒருவர்.

காளமேகப் புலவர் எழுதிய

கத்து கடல் சூழ் நாகைக்
காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில்
அரிசிவரும்—குத்தி
உலையிலிட ஊர்அடங்கும்
ஓரகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி எழும்.''

என்னும் செய்யுளை அந்த நிருபர் எப்போதோ படித்திருக்கிறார். அதனால்தான் அந்தச் சத்திரத்தைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டிருக்கிறது.

''சத்திரம் எதையும் இங்கே தேட வேண்டாம்! நமக்கு மதியச் சாப்பாடு திருவாரூரில்-ஆரூரான் திருமண மண்டபத்தில்'' என்று வரவேற்பு அலுவலர் சொல்லிய பிறகு தைரியமாக அந்த நிருபர் உந்தை விட்டு இறங்கி வெளியே வந்தார்.

ஒரு கட்டடத்திற்குள் நுழைந்தோம்! வாசலிலேயே ஒரு கரும் பலகை எங்களை வரவேற்றது! ''பத்திரிகையாளர்களே வருக! வருக!'' என்று அதிலே எழுதப்பட்டிருந்தது. உடனே எங்கிருந்தோ ஒரு தெம்பு—ஒரு பெருமிதம் எங்கள் அகங்களிலும் முகங்களிலும் தோன்றத் தொடங்கின. அந்தப் பெருமிதத்தை



அடக்கிக் கொண்டு எங்கே வந்திருக்கிறோம் என்று உற்றுப் பார்த்தோம். ''அரசு படகு கட்டும் தளம்'' என்ற பெயர்ப் பலகை கண்களில் பட்டது. மறு விநாடி, படகு கட்டும் தளத்தைப் பற்றிய செய்திகளைச் சேகரிக்கும் பணியில் இறங்கினோம்.

ஏறக்குறைய 14.23 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில் ஒரு பகுதியில் படகு கட்டும் தளம் அமைந்துள்ளது. 15—6—64-லிருந்து படகு கட்டும் வேலை இங்கு நடைபெற்று வருகிறது.

படகு கட்டுவதற்கு முக்கியமாக, அயினி, வெண் தேக்கு, கருமருது, வேங்கை முதலிய மரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. படகின் சில முக்கிய பாகங்களான ஏரா, அணியம், அட்டி முதலியவை உருவாக்க அயினி மரங்களும், பக்கப் பலகைகளுக்கு அயினி, வெண் தேக்கு மரங்களும் பயன்படுத்தப் படுகின்றன. இயந்திரம் பொருத்துவதற்கு கருமருது மரம் பயன்படுத்தப்படுகிறது. மற்ற பாகங்களுக்கு வேங்கை, வெண்தேக்கு ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன. 30 அடி படகு கட்டி முடிக்க ஏறக்குறைய 10,500 க. மீட்டர் மரம் பயன்படுத்தப் படுகிறது.

படகுகள் செய்வதற்குத் தேவைப்படும் மரங்கள் வனத் துறையால் வழங்கப்படுகின்றன. இது தவிர ஒப்பந்தப் புள்ளிகளின் மூலமாகவும் வரவழைக்கப்படுகின்றன.

இங்கே 30 அடி நீளமுள்ள படகுகள் ஆண்டொன்றுக்கு 40 தயாரிக்கப்படுகின்றன. இத்தளத்தில் கட்டப்படும் படகுகள் மீன் துறை இயக்குநரால் மீனவர்களுக்கு ஒதுக்கப்படுகின்றன. பிறகு, சம்பந்தப்பட்ட மீன் துறை உதவி இயக்குநர்களிடம் படகு வழங்க ஆணை பெற்ற பின்னர் படகுகள் வழங்கப்படுகின்றன.

படகு கட்டும் நிலையத்துடன் படகுப் பராமரிப்பு நிலையம் ஒன்றும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. 1964-ஆம் ஆண்டு துவக்கப்பட்டதுதான் இது என்றாலும் தற்காலிகமாகவே இருந்து வந்தது. 20-7-1967 முதல் இது நிரந்தரமாக்கப்பட்டு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

மீனவர்க்கு வழங்கப்பட்ட விசைப் படகுகளின் இயந்திரங்களை நல்ல முறையில் பரா

மரிப்புச் செய்வதற்குத் துணை புரிவதே இந்த நிலையத்தின் முக்கிய குறிக்கோளாகும். தஞ்சை மாவட்டக் கடலோரப் பகுதிகளில் இயங்கும் படகுகளை இந்த நிலையம் கவனித்து வருகிறது. திங்கள் தோறும் படகுப் பராமரிப்பு நிலையக் கடல் துறை முதல்வரும் பொருத்துபவரும் படகுகள் இயங்கும் பகுதிகளுக்குச் சென்று படகு உரிமையாளர்களுக்கு அவ்வப்போது படகுகளின் பராமரிப்புக் குறித்து அறிவுரை வழங்குகிறார்கள்.

இந்த நிலையத்தில் படகுகள் பழுது பார்க்கப்படுகின்றன. பழுது பார்க்கக்கூடிய பணிகளுக்கேற்றவாறு குறிப்பிட்ட தொகைகள் வசூலிக்கப்படுகின்றன. மேலும் இங்கேயுள்ள உதிரிப் பாகங்களான எயில்சா, பக், யான்மார், கிராக், டார்பிடோ ஆகியவை தேவையான படகுச் சொந்தக்காரர்களுக்கு விலைக்கு விற்கப்படுகின்றன.

ஆண்டுதோறும் இதன் வருமானம் அதிகரித்து வருகிறது. படகு கட்டும் தளம்—எதிர் காலத்தில் இன்னும் அதிக வருமானத்தைத் தரும் என்பது உறுதி.

இங்கே மீனவர் பயிற்சி நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. 1—10—1956-இல் சென்னையில் முதன் முதலாகத் துவக்கப்பட்ட இந்தப் பயிற்சி நிலையம் 15—4—67 முதல் நாகப்பட்டினத்திற்கு மாற்றப்பட்டுச் செயல்பட்டு வருகிறது.

முன்னெல்லாம், சென்னை, செங்கை, தென் ஆர்க்காடு, தஞ்சை மாவட்டங்களிலிருந்து பயிற்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனர். இப்போது தேவை அதிகரித்து விட்டது. அதனால், சென்னை, கடலூர், மண்டபம், தூத்துக்குடி, குளச்சல் ஆகிய இடங்களில் தனித் தனியாக மீனவர் பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு விட்டன. அதனால் நாகப்பட்டினப் பயிற்சி நிலையத்தில் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் மட்டுமே தற்போது பயிற்சியாளராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். புதுவை மாநிலத்திற்கென்று தனிப்பயிற்சி நிலையம் இல்லாததால் காரைக்கால் பகுதியிலிருந்து குறிப்பிட்ட அளவு மாணவர்களை நாகைப் பயிற்சி நிலையத்துக்கு அனுப்பி வருகிறது புதுவை அரசு.

## மீனவர் பயிற்சி நிலையம், நாகப்பட்டினம்

இரண்டாவது உலகப்பெரும் போருக்குப் பிறகு, மீன் பிடி தொழில் அதிக முக்கியத்துவம் பெற்றுச் சிறப்பானதொரு நிலையை எட்டியது. நவீன மீன்பிடி கப்பல்கள், கருவிகள் முதலியவைகளைக் கொண்டு, மீன்பிடி உற்பத்திப் பெருக்கத்திற்கு, மீன் பிடி தொழிலில் வளர்ச்சி காண வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. இந்தியா போன்ற வளரும் நாடுகளில், இத் தொழிலின் முன்னேற்றத்திற்கு, மீனவர்களின் அறியாமை, பெரும் முட்டுக்கட்டையாக இருந்தது. இவர்களுக்குப் போதிய கல்வியறிவை அளிப்பதன் மூலமும் மீனவர்களின் வாழ்க்கைத் தரம் உயரப் பலவகைத் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலமும்தான் இந்தியாவில் மீன் உற்பத்தி அதிகம் ஏற்படவாய்ப்பிருந்தது. மேலும் மீன் பிடி தொழிலை நவீனப் படுத்துவதற்கு, முதல் கட்டமாக, இத் தொழிலை இயந்திர மயமாக்கும் திட்டம் செயல்படத் துவங்கியது. மீன் பிடி இயந்திரப் படகுகள், அரசினரால் கட்டப்பட்டு மீனவர்களுக்கு வழங்கப்பட்டன. இந்த வகை விசைப் படகுகளைக் கொண்டும் நவீன மீன் பிடி சாதனங்களைக் கொண்டும் மீன் பிடிக்க மீனவர்களுக்குத் தனியானதொரு பயிற்சித் திட்டம் தேவைப்பட்டது. இந்த அவசியத்தின் விளைவாகத்தான், கரையோர மீனவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகத் தமிழ் நாடு அரசினரால், ஆங்காங்கே மீனவர் பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன.

இவ்வகை மீனவர் பயிற்சி நிலையங்களில் 10 மாத காலத்திற்கு மீனவர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. இப் பயிற்சி நிலையங்களில்சேர்த்துக் கொள்ளக் கீழ்க்கண்டவாறு தகுதிகள் நிர்ணயிக்கப் பட்டுள்ளன :—

எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். வயது வரம்பு 18 வயது முதல் 35 வரை. கடல் மீன் பிடி தொழிலில் குறைந்தது 5 வருட அனுபவமும் நல்ல உடல் அமைப்பும் பெற்றிருக்க வேண்டும்.

இப்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் மாணவர்களுக்குச் சிறப்பான முறையில், மீன்பிடி தொழில் சம்பந்தமாய் பல வகைகளிலும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இவை தவிர பயிற்சியாளர்களுக்கு, முதலுதவி வகுப்புகள் நடத்தித் தேர்வு வைத்து, அதில் வெற்றி பெறுபவர்களுக்குச் சான்றிதழ் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

பயிற்சி முடியும் காலத்தில், பயிற்சியாளர்கள் கல்விச் சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு மீன் பிடிப்பு முக்கியத்துவம்வாய்ந்த இடங்களுக்கு அழைத்துச் சென்று, ஆங்காங்கே நடைபெறும் பணிகள் நேரில் காட்டப்படுகின்றன. இதற்காக அரசினரால் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் ரூ. 15 வழங்கப்படுகிறது.

மேலும் பயிற்சிக் காலத்தில் ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ரூ. 50 வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. மேலும் கடலுக்குச் செல்லும் ஒவ்வொரு பயிற்சியின் இறுதி மாதத்தில் மாணவர்களுக்கு, தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவினரால், 1. மீன் பிடி இயல், 2. மாலுமி இயல், 3. இயந்திரப் பாடம் என்னும் செயல்முறைத் தேர்வு என்றும் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. அதில் வெற்றி பெறும் மாணவர்களுக்குத் தமிழ் நாடு அரசு மீன் துறையினரால் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

நாகப்பட்டினம் பயிற்சி நிலையத்தில், வெளியூர் மாணவர்கள் தங்கிப் படிக்க இலவச விடுதி வசதிகள் உள்ளன. இதில் தங்கிப் படிக்கும் மாணவர்கள் அவர்கள் சாப்பாட்டுக்குச் சொந்தமாக ஏற்பாடுகள் செய்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு மீனவர் பயிற்சி நிலையம், நாட்டின் மீன் உற்பத்தித் திட்டங்களுக்கு ஒரு முன்னோடித் திட்டமாகச் செயல்பட்டு வருகிறது. பயிற்சி பெற்ற மீனவர்கள், அரசினரால் வழங்கப்படும் விசைப் படகுகளின் மூலம் தொழில் செய்து பொருளாதார முன்னேற்றத்திற்கும், மீன் உற்பத்திக்கும் பல வகைகளிலும் உதவி புரிந்து வருகிறார்கள்.

மீன் பிடிப்பதற்கு உதவுகின்ற சில கருவிகள் இங்கே

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

காட்சிப் பொருளாக வைக்கப் பெற்றுள்ளன. மீன் பிடிக்கும் முறைகளைக் குறித்த விளக்கங் களுடன் பலகைகளில் எழுதி தொங்கவிட்டுள்ளனர்.

தற்போது நாகப்பட்டினத் தில் மீனவர் பயிற்சி நிலையத் தின் பொறுப்பில் ஒரு பனிப் பொறி குளிர் அறை நிலையம் செயல்பட்டு வருகிறது.

இப் பனிப் பொறி குளிர் அறை நிலையம் ஒரு நாளில் இரண்டு டன் பனிக் கட்டி உற்பத்தி செய்ய வல்லது. இதில் உள்ள குளிர் அறை யில் இரண்டு டன் மீன்களைச் சேமித்து வைக்கவும் வசதி யுள்ளது.

இதில் உற்பத்தியாகும் பனிக் கட்டியை மீனவர்களுக்கு கிலோ 9 காசு எனவும், 50 கிலோ கொண்ட ஒரு பார் ரூ. 4.50 எனவும், ஒரு டன் ரூ. 85.00 எனவும் விற்கப்படு கிறது. குளிர் அறையில் மீன் களைப் பாதுகாத்து வைக்க ஒரு நாளைக்கு கிலோ ஒன்றுக்கு 0.04 காசு எனவும் வாடகை வசூல் செய்யப்பட்டு வருகிறது இதனால் இப் பகுதியில் உள்ள மீனவர்கள் மிகவும் பயன் பெற்று வருகிறார்கள்.

படகு கட்டும் தளம், மீன் பிடி பயிற்சி நிலையம் ஆகிய வற்றை எல்லாம் பார்த்தவு டன் அனைவருக்கும் பசி ஏற் பட்டுவிட்டது. எங்கள் நிலையை யறிந்த நிருவாகத்தினர் பிஸ்கோத்து, பழம், காப்பி எல்லாம் வழங்கினார்கள். என் றாலும் யானைப் பசிக்குச் சோளப் பொரி என்பதுபோல இருந்தது அந்தச் சிற்றுண்டி. அவசர அவசரமாக உந்துக் குள் ஏறி அமர்ந்தோம். பகல் 1-30 மணியளவில் திருவாரூர் ஆரூரான் திருமண மண்ட பத்தை அடைந்தோம். அங்கே உணவு எங்களை எதிர்கொண்டு வரவேற்றது. உணவருந்தி விட்டுச் சில மணித் துளிகள் ஓய்வு எடுத்துக் கொண்டோம். புகழ் பெற்ற தேர் இருக்குமிட மறிந்து, வேகாத அந்த வெய்யி லிலும் ஓடிச் சென்று பார்த் தோம்! அப்பப்பா! எவ்வளவு உயரமான தேர், கண்டவர் வியப்பதில் வியப்பே இல்லை என்பது புரிந்தது.

4 மணியளவில் திருவாரூரை விட்டுப் புறப்பட்டோம். அடுத்து நாச்சியார் கோயிலை அடைந்தோம். அங்கே உள்ள உலோகத்தால் மணி செய்யும் நிலையத்தினுள் நுழைந்தோம்.

வகை வகையான மணிகள் — குத்து விளக்குகள் — சர விளக்குகள்—இப்படி ஆல யங்களில் பூசைக்குப் பயன் படுத்தப் பெறும் பொருள்கள் இங்கு மிகுந்த அளவில் தயா ராகின்றன. இந்துக்கள், கிறித் தவர்கள் என்று வேற்றுமை உலகத்தில் இருக்கலாம். ஆனால், அது மணி தயாரிக்கும் இந்த நிறுவனத்துக்குக் கிடை யாது. எப்படித் தெரியுமா? இங்கே தயாரிக்கப்படும் மணி கள் முருகன் கோயிலுக்கும் செல்கின்றன; அந்தோணியார் கோயிலுக்கும் செல்கின்றன.

சென்னை அடையாற்றில் உள்ள வேளாங்கண்ணி ஆல யத்தில் கடந்த செப்டம்பர் திங்களில் முதல்வர் கலைஞர் அவர்களால் திறக்கப்பெற்ற மணிக் கூண்டில் அமைக்கப் பட்டுள்ள பெரிய அளவு மணி இந்த நிலையத்தில் செய்யப் பட்டதுதான் என்பது குறிப் பிடத் தக்கது.

இந்த நிலையத்தின் தயாரிப் புகள் தொழில் துறையின் விற் பனை நிலையங்களின் வாயி லாகவே விற்கப்படுகின்றன. ஆலயங்கள், மற்றும் தனியார் ஆகியோருக்குத் தேவைப்படும் மணிகளையும், விளக்குகளையும் இந்த நிலையம் நேரடியாகக் கொடுத்து வருகிறது.

இங்கே பயிற்சி நிலையமும் உள்ளது, பணி நிலையமும் உள் ளது. பயிற்சி இரண்டாண்டுக் காலம். 15 மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள். பயிற்சி யாளருக்கு ரூ. 50 உதவித் தொகையாக வழங்கப் படுகிறது. பாட வகுப்புகளும், பயிற்சி வகுப்புகளும், ஓவிய வகுப்புகளும் நடத்தப் படுகின்றன.

உலோக மணி உருவாக்கும் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்றினை அரசு உரு வாக்கியுள்ளது; இது தமிழ் நாட்டு அரசின் தொழில் துறையைச் சார்ந்த நிறுவன மாக விளங்குகிறது.

இங்குப் பயிற்சி பெற்றவர் களில் 90 பேர் அரசுத் துறை நிறுவனங்களிலும், தனியார் நிறுவனங்களிலும் பணிபுரிந்து வருகிறார்கள்.

இந்த நிலையத்தின் தயாரிப் பான குத்துவிளக்குகள் காண்ப தற்கு மிகுந்த கவர்ச்சியைத் தருகின்றன. பித்தளைக் குத்து விளக்குகள்தாம் அவை! என் றாலும் வேலைப்பாட்டின் அருமைகளையும், கருத்தை யும் கவர்ந்து கொண்டிருந்தது.

''நல்ல வேளை! தப்பித் தோம்! இல்லக் கிழத்தியை அழைத்துச் செல்லவில்லை! சென்றிருந்தால் அங்குக் காணப்படும் அத்தனை விளக்கு களையும் வாங்கவேண்டும் என்று சொல்லியிருப்பாள்!'' என்று நினைத்துக் கொண்டே, நிலை யத்தைவிட்டு வெளியேறி, உந்துக்குள் அமர்ந்தோம்.

''அடுத்து சுவாமிமலைக்குச் செல்கிறோம்'' என்றார் வர வேற்பு அலுவலர்.

''சாமிநாதனைத் தரிசிப்ப தற்காகவா?''—சில நிருபர் கள் கேட்டனர்.

''அதுமட்டுமல்ல, சுவாமி மலையில் உள்ள உலோகச்சிலைப் பயிற்சி நிலையத்தையும் உற் பத்தி நிறுவனத்தையும் பார் வையிட வேண்டும்'' என்றார்.

உந்து, சுவாமிமலையை நோக்கிப் புறப்பட்டது . . .

(அடுத்த இதழில் முடியும்)



...வாகும் மேற்பாலம்



Criterion CO 2882

பதிவு எண். M. 8676




# உங்களுக்கு தெரியுமா?

## உங்களுக்குத் தெரியுமா?

தமிழ்நாடு அரசு பரிசுத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் வருவாய் நாடு செழிக்க உதவும் மக்கள் நல்வாழ்வு திட்டங்களிலேயே செலவிடப்படுகிறது.

## உங்களுக்குத் தெரியுமா?

ஒவ்வொரு மாவட்டத்திலும் திரட்டப்படும் தொகை அந்த மாவட்டத்திலேயே கிராம நலத் திட்டங்களில் செலவிடப்படுகிறது.

## உங்களுக்குத் தெரியுமா?

இத்திட்டத்தில் திரட்டப்படும் வருவாய் மருத்துவமனைகள் மற்றும் பள்ளிகளை கட்டவும், சேரிகளை சீரமைக்கவும் மற்றும் பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கும் பயன்படுத்தப்படுகிறது.




தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு ஒன்றை வாங்குங்கள். உங்களுக்கும் நலிவுற்ற உங்களது சோதரர்களுக்கும் நல்வாழ்வு அளிக்க அது உதவும்.
உங்களுக்கு ரூ. ஒரு லட்சம் பரிசு கிடைக்கும் வாய்ப்பும் உள்ளது.

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2